இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 13 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 05 – செவ்வாய்க்கிழமை 22 ஆகஸ்ட் 2023 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 13 : Thiruvalluvar Year - 2054 - Aavani 05 - Tuesday 22 August 2023 - Trichy ★★ 16 Pages ₹ 5.00





சென்னை, வள்ளுவர்கோட்டம் அருகில் 'நீட்' தேர்வை ரத்து செய்ய மறுக்கும் சர்வாதிகார ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன், மருத்துவ அணித் தலைவர் கனிமொழி என்.வி.என்.சோமு பங்கேற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இதில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மாவட்டச் செயலாளர்கள் மாதவரம் எஸ்.சுதர்சனம், நே.சிற்றரசு, மயிலை த.வேலு, தா.இளைய அருணா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், மு.சண்முகம், கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்க பாண்டியன், இரா.கிரிராஜன், என்.ஆர்.இளங்கோ, பி.வில்சன், மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் உள்பட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணியினர் உள்பட கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## இந்தப் போராட்டம் ஆரம்பம்தான்! முடிவல்ல!

# 'நீட்' தேர்வு ரத்தாகும் வரை போராட்டம் தொடரும்!

## சென்னையில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எச்சரிக்கை!

**சென்னை, ஆக. 22 -**

**"இந்தப் போராட்டம் ஆரம்பம்தான்! முடிவல்ல! 'நீட்' தேர்வு ரத்தாகும் வரை போராட்டம் தொடரும்" என்று சென்னையில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒன்றிய அரசுக்கும் ஆளுநருக்கும் எச்சரிக்கை விடுத்தார்.**

தமிழ்நாட்டு மாணவர்கள் மீது நீட் தேர்வைத் திணிக்கும் ஒன்றிய அரசு, ஆளுநரை கண்டித்தும், நீட் தேர்வை ரத்து செய்யக் கோரியும் தி.மு.கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் உண்ணாவிரத அறப்போராட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் மதுரை நீங்கலாக 37 மாவட்டங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் மாநிலக் கழகங்கள் என மொத்தம் 39 இடங்களில் உண்ணாவிரத அறப்போராட்டம் நேற்று நடைபெற்றது.

சென்னையில் 6 மாவட்டக் கழகங்களின் இளைஞர் அணி – மாணவர் அணி – மருத்துவ அணி சார்பில் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போராட்டம் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காலை 9 மணிக்குத் தொடங்கிய இந்த அறப்போராட்டம் மாலை 5 மணிக்கு முடிந்தது.

உண்ணாவிரத அறப்போராட்டத்தை முடித்துக்கொள்வதற்கு முன்பாக கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

"திராவிட முன்னேற்றக் கழகம் எந்தப் போராட்டத்தை நடத்தினாலும் எப்போதும் இதேபோல் சிறப்பான போராட்டமாக, எல்லோரும் வியக்கும் வண்ணம் இருக்கும். நேற்று நள்ளிரவு இந்த இடத்தில் கன மழை. இந்த உண்ணாவிரத அறப்போராட்டம் எப்படி இங்கு நடக்கும் என்ற சந்தேகம் எனக்குள் இருந்தது.

ஆனால் அந்த இடையூறுகளை எல்லாம் தாண்டி இந்த இடத்தை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சகோதரர் சிற்றரசு அவர்களுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்

"இங்கே சகோதரர் தமிழ் காமராசன் அவர்கள் உரையாற்றும்போது, 'இப்படிப்பட்ட உண்ணாவிரதத்தை நான் பார்த்ததே கிடையாது. யாருக்கும் தண்ணீர்கூட கொடுக்கவில்லை. கொலைப் பட்டினி உண்ணாவிரதம்' என்று சொன்னார். இப்படி நம்மையெல்லாம் வருத்திக்கொண்டு இந்த அறப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம். என்னைப்பொறுத்தவரை இந்த வலி பெரிய வலி கிடையாது. நீட் தேர்வில் 21 உயிர்களைப் பலிகொடுக்கும்போது வராத வலியா இந்தப் பட்டினியால் வந்துவிடப்போகிறது?

21 உயிர்கள். அரியலூர் அனிதா. செஞ்சி பிரதிபா, திருச்சி சுபஸ்ரீ, சேலையூர் ஏஞ்சலின், திருப்பூர் ரிதுஸ்ரீ, மோனிஷா, பட்டுக்கோட்டை வைஸ்ணவி, நெல்லை தனலட்சுமி, கோவை சுபஸ்ரீ, செந்துறை விக்னேஷ், தருமபுரி ஆதித்யா, திருச்செங்கோடு மோதிலால், கரூர் ப்ரிதாஸ்ரீ, அரியலூர் நிஷாந்தி, மேட்டூர் தனுஷ், துவரங்குறிச்சி கனிமொழி, மதுரை ஜோதி



காஸ்ரீ, காட்பாடி சௌந்தர்யா, குரோம்பேட்டை ஜெகதீஷ்வரன். இப்படி 21 மாணவர்கள். தற்போது குரோம்பேட்டை ஜெகதீஷ்வரனுடைய தந்தை செல்வசேகரனும் 'நீட்' தேர்வினால் இறந்துள்ளார்.

### 21 பேரும் தற்கொலைகள் கிடையாது! கொலைகள்!

இதை நாம் 21 தற்கொலைகள் என்று பேசிக்கொண்டு இருக்கிறோம். இவை தற்கொலைகள் கிடையாது. இவை ஒவ்வொன்றும் கொலை. இந்தக் கொலைகளைச் செய்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. அந்தக் கொலைகளுக்குத் துணை நின்றது அடிமை அ.தி.மு.க. இதை நான் திரும்பத் திரும்பச் சொல்லுவேன்.

இங்கே பங்கேற்ற பல பேச்சாளர்கள், கல்வியாளர்கள் அனைவரும், இந்த நீட் எப்படி வந்தது, அதுதொடர்பான புள்ளி விவரங்கள், சட்டச் சிக்கல்கள் என அனைத்தையும் காலையில் இருந்து விளக்கிக் கூறிவிட்டார்கள். அதனால் இரண்டு மூன்று விஷயங்களை மட்டும் நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஏனென்றால் நான் 'நீட்' தேர்வைப் பற்றி மிக அதிகமாக பேசிவிட்டேன். கடந்த 5 ஆண்டுகளாகவும் பேசிவிட்டேன். இனியும் பேசத் தயாராகவும் இருக்கின்றேன்.

இந்த நிகழ்ச்சியிலே நான் அமைச்சராகப் பங்கேற்கவில்லை. சட்டமன்ற உறுப்பினராக பங்கேற்கவில்லை. நான் சாதாரண மனிதனாக உதயநிதி ஸ்டாலினாகப் பங்கேற்கின்றேன். இந்தப் புகைப்படங்களில் உள்ள இறந்துபோன குழந்தைகளின் அண்ணனாகப் பேச வந்துள்ளேன்.

நீங்கள் அத்தனைபேரும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை உணர்வுபூர்வமாக இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டிருக்கின்றீர்கள். இங்குமட்டுமல்ல தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு இடத்திலும் நம்முடைய கழகத் தோழர்கள், மருத்துவர்கள், பெற்றோர்கள், சாமானிய மக்கள் என மாவட்டந் தோறும் எட்டாயிரத்திலிருந்து 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கலந்துகொண்டுள்ளனர்.

நான் எந்த உணர்வோடு கலந்துகொண்டிருக்கின்றேனோ அதே உணர்வோடுதான் நீங்கள் அத்தனை பேரும் கலந்துகொண்டுள்ளீர்கள். உங்களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அமைச்சர் பதவி பற்றிக் கவலையில்லை!

இந்த உண்ணாவிரத அறப்போராட்டத்தை அறிவித்தவுடன், 'நீங்கள் அமைச்சர். அதனால் போராட்டத்தில் கலந்துகொள்ளக்கூடாது' என்று எல்லோரும் சொன்னார்கள். 'சட்டச் சிக்கல் வரும். உங்களுடைய அமைச்சர் பொறுப்பு பறிக்கப்படும். தகுதியிழப்பு செய்யப்படுவீர்கள்' என்றார்கள். அதற்குத் தகுந்தாற்போல் அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞர். 'அமைச்சர் பொறுப்பில் இருந்தால் போராட்டத்தில் கலந்துகொள்ளக்கூடாது. இது 'Breach of oath' என்று புகாரே கொடுத்திருக்கிறார்.

இதுகுறித்து என்னிடம் கேட்டவரிடம் நான் சொன்னேன், 'இந்த அமைச்சர் பதவி இருந்தால் இருக்கட்டும். போனால் போகட்டும். அதைப்பற்றியெல்லாம் கவலைப்படமாட்டேன். திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பில் இருப்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம் கிடையாது. எங்களுக்கு எங்கள் மாணவனுடைய கல்வி உரிமை முக்கியம். அதற்காக என்ன இழப்பு வந்தாலும் அதை நான் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்' என்று சொல்லித்தான் இன்று இந்தப் போராட்டத்தை நாம் நடத்திக்கொண்டு இருக்கிறோம்.

ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள். தன் மாளிகையில் ஒரு கூட்டம் நடத்துகிறார். நடத்தட்டும், தவறில்லை. நீட் தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்களுடன் ஒரு கூட்டம். நீட் தேர்வுக்கு 'கோச்சிங்' கிளாஸ் நடத்துவது போல் நடத்துகிறார். இந்தக் கூட்டத்தில் நீட் தேர்வில் வெற்றிபெற்ற ஒரு மாணவனுடைய தந்தை அம்மாசியப்பன் என்பவர், "நீட் தேர்வுல தோல்வியடைஞ்சிட்டு நாங்க புகார் கொடுக்கலை. என்கிட்ட பணம் இருந்தது. நீட் தேர்வுக்காக தனியார் கோச்சிங்குக்கு அனுப்பினேன். என்னைப்போல் எத்தனை பேரால் செலவு செய்து கோச்சிங் கிளாஸுக்கு அனுப்ப முடியும். நீங்கள் நீட் தேர்வை ரத்து செய்யுங்கள" என்று தைரியமாக எழுந்து கேட்கிறார்.

> **இந்த உண்ணாவிரத அறப்போராட்டத்தை அறிவித்தவுடன், 'நங்கள் அமைச்சர். அதனால் போராட்டத்தில் கலந்துகொள்ளக் கூடாது' என்று எல்லோரும் சொன்னார்கள். 'சட்டச் சிக்கல் வரும். உங்களுடைய அமைச்சர் பொறுப்பு பறிக்கப்படும். தகுதியிழப்பு செய்யப்படுவீர்கள்' என்றார்கள். அதற்குத் தகுந்தாற்போல் அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞர். 'அமைச்சர் பொறுப்பில் இருந்தால் போராட்டத்தில் கலந்துகொள்ளக்கூடாது. இது 'Breach of oath' என்று புகாரே கொடுத்திருக்கிறார்.**
>
> **இதுகுறித்து என்னிடம் கேட்டவரிடம் நான் சொன்னேன், 'இந்த அமைச்சர் பதவி இருந்தால் இருக்கட்டும். போனால் போகட்டும். அதைப் பற்றியெல்லாம் கவலைப்படமாட்டேன். திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பில் இருப்பதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம் கிடையாது. எங்களுக்கு எங்கள் மாணவர்களுடைய கல்வி உரிமை முக்கியம். அதற்காக என்ன இழப்பு வந்தாலும் அதை நான் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்' என்று சொல்லித்தான் இன்று இந்தப் போராட்டத்தை நாம் நடத்திக்கொண்டு இருக்கிறோம்.**

### ஆளுநர் ஒரு தபால்காரர்!

**அதற்கு கவர்னர்** 'I will never ever' **என்று சொல்கிறார். நான் கேட்கிறேன், ஆளுநர் ரவி அவர்களே,** 'Who are You? What Authority do you have?', **ஆளுநர் அவர்களே** Who are You? Are you people's representative? You are just a Postman?

## ஆளுநரிடம் கேள்வி கேட்டவருக்கு மிரட்டல் விடுவதா?

**எங்கள் முதல்வர் சொல்வதை ஒன்றிய அரசிடம் கொடுப்பது மட்டும்தான் உங்களுடைய வேலை! நீங்கள் ஒரு தபால்காரர்.**

**அவர் பெயர் ஆர்.என். ரவி கிடையாது. ஆர்.எஸ்.எஸ்.ரவி. ஆளுநர் ரவி அவர்களே நான் உங்களுக்கு ஒரு சவால் விடுகிறேன். ஏதோ எல்லாம் தெரிஞ்சமாதிரி, உங்களுக்குத்தான் எல்லா உரிமையும் இருப்பது போல, பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.** What authority do you have? you have no rights? **நீங்கள் என்ன தேர்தலில் நின்று மக்களிடம் வாக்குகள் பெற்றா வந்தீர்கள்? நீங்கள் உங்களுடைய ஆளுநர் பதவியை ராஜினாமா செய்யுங்கள். தமிழ்நாட்டில் ஏதோ ஒரு தொகுதி. நீங்களே முடிவு செய்யுங்கள். நானில்லை, எங்கள் கழகத்தினுடைய முக்கியத் தலைவர்கள் யாரும் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒரு கடைக்கோடித் தொண்டனை நிற்கவைக்கிறோம். அவரை எதிர்த்து நில்லுங்கள்.**

**நீங்கள் வெற்றிபெற மக்களைச் சந்தித்து வாக்குகளைக் கேளுங்கள். உங்களுடைய சித்தாந்தங்களை எல்லாம் எங்களுடைய தமிழ்நாட்டு மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். நீங்கள் வெற்றிபெற்றீர்கள் என்றால் நீங்கள் சொல்வதை எல்லாம் நான் கேட்கிறேன். அப்படி நீங்கள் வெற்றிபெற்றால் நீட் தேர்வுக்கு ஆதரவாக நானே வருகிறேன்.**

அனிதாவில் ஆரம்பித்து ஜெகதீஸ்வரன் வரை இந்த 21 மாணவர்களில் முக்கால்வாசி பேரின் வீடுகளுக்கு நான் சென்றிருக்கிறேன். அந்தக் குழந்தைகளைப் பார்ப்பதற்காக அல்ல. அவர்களின் உயிரற்ற உடல்களைப் பார்ப்பதற்காகவும், பெற்றோர்களைச் சந்தித்து ஆறுதல் சொல்வதற்காகவும் சென்றேன்.

ஒவ்வொரு பெற்றோரும் என் கைகளைப் பிடித்துக்கொண்டு, 'நீட் தேர்வை ஒழிச்சிடுங்கப்பா' என்று கெஞ்சுவார்கள். சமீபத்தில்கூட ஜெகதீஸ்வரனின் தந்தையார் இறப்புக்குச் சென்றிருந்தபோதுகூட, ஜெகதீஸ்வரனின் நண்பன் பயாஸுதீன் என்னைப் பார்த்து கத்தினார். அப்படி கேள்வி கேட்டு கத்திய பயாஸுதீனை இன்று தைரியமாக இந்த மேடையில் பேசவைத்துள்ளோம். அந்த தைரியம் எனக்கு இருக்கிறது.

### அம்மாசியப்பனுக்கு மிரட்டல் விடுவதா?

ஆனால் கவர்னர் மாளிகையில் ஆளுநரைப்பார்த்து கேள்வி கேட்ட அம்மாசியப்பன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 22-08-2023

# அள்ளிக் கொடுத்த முதலமைச்சர்

**தினந்தோறும் திட்டங்களைத் தீட்டிக் கொடுத்து வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 77 ஆவது சுதந்திரத் தினமான ஆகஸ்ட் 15 அன்றும் அருமையான திட்டங்களை அறிவிக்கும் நாளாக அதனை மாற்றிக் காட்டி விட்டார்.**

1. நடப்பு ஆண்டில் பல்வேறு அரசுத் துறைகளைச் சார்ந்த 55 ஆயிரம் பணியிடங்கள் நிரப்பப்படும்.

2. மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதிக்கு 'விடியல் பயணம்' என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

3. ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிருக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் வருகிற செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் வழங்கப்பட உள்ளது. தகுதியுடைய மகளிருக்கு அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக போய்ச் சேர்ந்து விடும்.

4. அரசு பள்ளியில் பயின்று உயர் கல்வியில் சேரும் மாணவிகளுக்கு மாதம்தோறும் வழங்கப்படும் ஆயிரம் ரூபாயை வரும் நிதி ஆண்டில் 2 லட்சத்து 11 ஆயிரம் பேர் பெறுவார்கள். இதற்காக 350 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 31,008 அரசுப் பள்ளிகளில் படிக்கும் 15 லட்சத்து 75 ஆயிரம் மாணவர்கள் இனி காலை உணவுத் திட்டத்தில் இணைக்கப்பட இருக்கிறார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் படித்த திருக்குவளையில் ஆகஸ்ட் 25 ஆம் தேதி இத்திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்கள். 404 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6. இளைஞர்களுக்கு, மாணவர்களுக்குத் தனித்திறமையை உருவாக்கத் தொடங்கப்பட்ட 'நான் முதல்வன்' திட்டமானது முன்னாள் ராணுவத்தினருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இளம் வயதில் நாட்டுக்காக எல்லையில் பணியாற்றி, பணிக்காலம் நிறைவு பெற்றுத் திரும்பும் முன்னாள் ராணுவத்தினர் பயன்பெறும் வகையில் 10 ஆயிரம் பேருக்குப் பயிற்சி தரப்பட உள்ளது. இதற்காக 7 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7. ஓலா, ஊபர், ஸ்விகி, ஸொமட்டோ (Ola, Uber, Swiggy, Zomato) போன்ற நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் (GIG workers) ஒட்டுமொத்த நலனைப் பாதுகாக்கும் வண்ணம், அவர்களுக்கென தனியே நல வாரியம் ஒன்று அமைக்கப்படும்.

8. ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் பெண்கள் புதிதாக ஆட்டோ வாங்குவதற்கென ஒரு லட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் 141 பேர் பயனடைந்துள்ள நிலையில், தற்பொழுது மேலும் 500 மகளிர் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

9. ஆட்டோ ஓட்டுநர்களாகப் பணிபுரியும் மூன்றாம் பாலினத்தவர்க்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

10. விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் 10 ஆயிரம் ரூபாயில் இருந்து 11 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

11. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த தூத்துக்குடி மாவட்டம் - கிள்ளிகுளத்தில் இயங்கி வரும் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்துக்கு வ.உ.சிதம்பரனார் பெயர் சூட்டப்படும்.

12. சென்னை கதீட்ரல் சாலையில் உள்ள செங்காந்தள் பூங்காவுக்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

13. மக்களுக்கு நேரடியாகத் தொடர்பு கொண்ட அனைத்துத் துறைகளும் மாநிலப் பட்டியலில் இணைக்கப்பட வேண்டும்.

14. கல்வி மாநிலப் பட்டியலில் இணைக்கப்பட வேண்டும்.

15. 'நீட்' தேர்வு முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும் ஆகியவை அனைத்தும் முதலமைச்சரின் ஒரே நாள் ஒரே உரையில் இடம் பெற்றவை ஆகும்.

பதவியேற்ற அன்றைய தினமே ஐந்து கோப்புகளில் கையெழுத்துப் போட்டவர் முதலமைச்சர் அவர்கள். தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட வாக்குறுதிகளில் 75 விழுக்காடு வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறார். தேர்தல் அறிக்கையில் சொல்லப்படாத பல திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

★ **மதுரையில் எழுந்துள்ள நூலகம்**

★ **சென்னையில் எழுந்துள்ள மருத்துவமனை - இரண்டுமே தேர்தல் அறிக்கையில் சொல்லப்படாதது ஆகும். விவசாயிகளுக்கு தரப்பட்டுள்ள 1.50 லட்சம் இலவச மின் இணைப்புகள் என்பதும் தேர்தல் அறிக்கையில் சொல்லாதது ஆகும். சொன்னதையும் செய்து, சொல்லாததையும் செய்து காட்டும் அரசாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களது அரசு அமைந்துள்ளது.**

கடந்த மார்ச் 1 தனது பிறந்தநாளின் போது ஏற்றமிகு ஏழு திட்டங்களைத் தொடங்கி வைத்தார் முதலமைச்சர் அவர்கள். மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க TICCI அமைப்புடன் ஒப்பந்தம் அன்றையதினம்கையெழுத்தானது. சத்துக்குறைபாடுள்ளகுழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இன்று பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்ந்து வருவதையும் பார்க்கி றோம். மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா முன்னுரிமை அடிப்படையில் வழங்கும் அறிவிப்பை முதலமைச்சர் செய்தார். திருநங்கையர்க்கு மாதம்தோறும் வழங்கும் உதவித் தொகை ரூபாய் ஆயிரத்தில் இருந்து 1500 ரூபாயாக உயர்த்தப்பட்டது. பல்வேறு துறைகளில் உள்ள அரசுப் பணியிடங்களில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டு 1000 பேருக்கு பணி ஆணைகள் வழங்கப்பட்டது. காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது. 1,941 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 58 இடங்களில் புதிய மருத்துவமனைக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இவை அனைத்தும் தனது பிறந்த நாளில் முதலமைச்சர் செய்தது ஆகும்.

**தனது பிறந்தநாளாக இருந்தாலும் நாட்டுக்கு சுதந்திர நாளாக இருந்தாலும் அவை அனைத்தையும் கொண்டாட்ட நாளாக இல்லாமல் திட்டங்களைத் தீட்டித் தரும் நாளாகவே மாற்றிக் காட்டி வருகிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

●●



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.8.2023) அவரது இல்லத்தில், கழகத்தின் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் அரியப்பனின் மகன் அ.அன்பானந்தம் – வெ.சொர்ணப்பிரியா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். திருமதி துர்கா ஸ்டாலின், நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.செல்லக்குமார், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

### 'நீட்' தேர்வு அகற்றப்பட்டதற்குக் காரணம்

# உதயநிதி என்ற வரலாறு சரித்திரத்தில் இடம் பெறும்!

## அமைச்சர் துரைமுருகன் பேச்சு!

**சென்னை, ஆக. 22 -**

**உதயநிதியின் காலத்தில் நீட் தேர்வு ஒழிந்தது, அதற்கு காரணமாக இருந்தவர் அமைச்சர் உதயநிதி என்கிற வரலாறு சரித்திரத்தில் இடம் பெறும் என நீட் தேர்வுக்கு எதிரான தி.மு.க. உண்ணாவிரதப் போராட்டத்தில் அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.**

நீட் தேர்வு விவகாரத்தில் ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் தி.மு.க. உண்ணாவிரத போராட்டம் நடத்தியது. தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் தி.மு.க. நீட் தேர்வுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியது. அதன் ஒரு பகுதியாக சென்னை வள்ளுவர் கோட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்ற உண்ணாவிரத போராட்டத்தை அமைச்சர் துரைமுருகன் தொடங்கிவைத்து உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது: -

நீட் தேர்வை எதிர்த்து அறப்போராட்டமாக இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது. நீட் தேர்வு என்கிற கொடிய சட்டத்தை இளம் மாணவர்களின் முதுகில் சுமத்தி அவர்களை நிமிரவிடாமல் செய்வதன் மூலம் ஆயிரக்கணக்கான பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மருத்துவ வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். அந்த நிலையை போக்கவேண்டும்.

நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என தி.மு.க. நீண்ட நாட்களாக வாதாடி வருகிறது. அரசியல் கட்சித் தலைவர்களும் அதில் இணைந்துள்ளனர். இது பற்றி கவலையின்றி ஒன்றிய மோடி அரசு நீட் தேர்வை திணிப்பதிலேயே வேகமாக இருந்து வருகிறது.

தமிழர்கள் போராட்ட முறைகளில் உயிர்விடுவது முக்கியமான போராட்ட முறையாகும். தி.மு.க.வில் ஏராளமானோர் இந்தி திணிப்பை எதிர்த்து உயிர் விட்டுள்ளார்கள். அதே வழியில் இன்று நீட் தேர்வை எதிர்த்து இளம் மாணவர்கள் உயிர் விட்டுள்ளனர்.



இந்தி திணிப்பின்போது இந்தி திணிப்பு போராட்டத்தில் உயிர்விட்டவர்களின் சாபத்தினால் அதனை திணித்தவர்களின் ஆட்சி பறிபோனது. அதேபோன்று இன்று நீட் தேர்வை எதிர்த்து பலர் விடுகிற சாபம் மத்திய அரசின் ஆட்சியையும் ஒழித்து விடும். அகில இந்திய அளவில் தி.மு.க. மட்டும் தான் நீட் தேர்வை எதிர்ப்ப தாக சிலர் பேசுகின்றனர். இந்தி திணிப்பு எதிர்ப்பில் எப்படி தமிழ்நாடு முன்னணியில் இருந்ததோ அதேபோல் தான் நீட் தேர்வை எதிர்ப்பதிலும் முன்னணியில் இருக்கிறது. இதற்கு காரணம் தமிழர்கள் அறிவு, உணர்ச்சி மிக்கவர்கள்.

நீட் தேர்வு தமிழ்நாட்டை பாழாக்கிவிடும். அதனால் அதனை ஒழிக்க வேண்டும் என நீண்ட நாட்களாக போராடி வருகிறோம். இன்று இளைய சமுதாயத்தின் ஒட்டுமொத்த தலைவராக இருக்கக்கூடிய உதயநிதி நீட்தேர்வை ஒழித்துகட்டும் வரையில் இளம் சமுதாயம் ஓயாது என சபதமேற்று உண்ணாவிரதத்திற்கு தலைமை தாங்கி உள்ளார்.

உதயநிதி ஸ்டாலின் அவரது தாத்தாவைப் போல் எதனையும் வேகமாக செய்யக் கூடிய ஆற்றல் படைத்தவர். நான் அதனை பலமுறை பார்த்துள்ளேன். உதயநிதியின் வேகம் தி.மு.க.வுக்கும், இளைஞர்களுக்கும் தேவை. எனவே நீட் தேர்வுக்கு எதிரான இந்த உண்ணாவிரத போராட்டத்தை ஏதோ ஒருநாள் இருந்தோம் என இல்லாமல் தொடர் போராட்டமாக உதயநிதி அறிவிப்பார்.

உதயநிதியின் காலத்தில் நீட் தேர்வு ஒழிந்தது. அதற்கு காரணமாக இருந்தவர் அமைச்சர் உதயநிதி என்கிற வரலாறு சரித்திரத்தில் இடம் பெறும். அதனை செய்கிற ஆற்றல் அறிவு அனைத்தையும் பெற்றுள்ள உதயநிதிக்கு வாழ்த்துகள்.

"உதயநிதிக்கு கலைஞரின் வேகம் உள்ளது. மு.க. ஸ்டாலினின் திட்டமிட்டு பணியாற்றும் அனுபவம் உள்ளது. நான் 3 தலைமுறைகளுடன் பழகியதன் அடிப்படையில் தான் நீட் தேர்வு ரத்து உதயநிதியால் தான் முடியும்" என உறுதியாக கூறி உள்ளேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### 'நீட்' தேர்வைக் கண்டித்து

# பெருந்திரளான மாணவ - மாணவிகள் பங்கேற்ற திருவாரூர் உண்ணாவிரதம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. கண்டன உரை!

திருவாரூர், ஆக. 22-

தமிழ்நாட்டு மாணவ - மாணவிகளின் மருத்துவக் கனவை பொய்யாக்கும் ஒன்றிய பி.ஜே.பி. அரசு நீட் தேர்வை கைவிடக்கோரியும், நீட் தேர்வுக்கு துணை போகும் ஆளுநர் ரவியை கண்டித்தும் நடைபெற்ற திருவாரூர் உண்ணாவிரத அறப்போரில் தமிழ்நாடு அரசின் தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன், இதழியலாளர் கொக்கராக்கோ சௌமியன் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டின் மாணவ - மாணவிகளின் மருத்துவக் கனவை பாழ்படுத்தும் விதமாக ஒன்றிய பி.ஜே.பி. அரசு கொண்டுவந்துள்ள நீட்தேர்வை விலக்கும் விதமாக தமிழ்நாடு அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடும் ஆளுநர் ரவி அவர்களை கண்டித்து தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் ஆலோசனைகளின் படியும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் இளைஞரணி மாநிலச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும், இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணி சார்பில் உண்ணாவிரத அறப்போர் திருவாரூர் ரயில் நிலையம் எதிரில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் தொழில் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா உண்ணாவிரத அறப்போரை துவக்கி வைத்தும், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் தலைமை நிகழ்வுக்கு தாங்கியும் கண்டன உரை நிகழ்த்தினர். மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் நா.இளையராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அமுதா ஆர்.சந்திரசேகர், மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் வெங்கட்ராமன், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சி.கே.எழிலரசன், எஸ்.கல்யாணசுந்தரம், வி.கே.எம். முருகானந்தம், எம்.பி.எடிசன், வி.வினோத்குமார், எ.தாஹிர் அலி, மாணவரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.வி.பி.செந்தில், மதி. நெல்சன் மண்டேலா, சுரேஷ், பகலவன், டி.கே. தேவா, மருத்துவரணி துணை அமைப்பாளர்கள் மலர்கொடி, ஷர்மிளா பானு, பாலசுந்தரம் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

நிகழ்வில் நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் பங்கேற்று நீட் தேர்வின் பாதிப்பை எடுத்துக்கூறி கண்டன உரையாற்றினர். மாணவ - மாணவிகள் பங்கேற்ற நீட் தேர்வுக்கு எதிரான கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மாலை நடைபெற்ற உண்ணாவிரத முடிவு நிகழ்வில் இதழியலாளர் கொக்கராக்கோ சௌமியன் பங்கேற்று பழச்சாறு கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

இந்த உண்ணாவிரத அறப்போரில் மாவட்ட ஊராட்சி பெருந்தலைவர் தலையாமங்களம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், அவைத் தலைவர் க.தன்ராஜ், நகர செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், ஒன்றிய பெருந்தலைவர்கள் புலிவலம் ஏ. தேவா, சோம செந்தமிழ் செல்வன், நகர்மன்ற தலைவர்கள் புவனப்ரியா செந்தில், பாத்திமா பஷீரா,

மாநிலத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் இரா.சங்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.ஆடலரசன், ஆர்.எஸ். பாண்டியன் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானோர் பெருந்திரளாக பங்கேற்றனர்.




சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் சர்வாதிகார ஒன்றிய அரசையும் ஆளுநரையும் கண்டித்து கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நடைபெற்ற உண்ணாவிரதத்தின் போது 'நீட் 'தேர்வால் உயிரிழந்த மாணவர்களுக்கு கழகப் பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தினர்.

## ‘நீட்’ தடுப்புச் சுவர் உடைபடும் காலம் வெகு தூரத்தில் இல்லை!

# உண்ணாவிரத அறப்போர் மாபெரும் வெற்றி!

## மிகச்சிறப்பாக நடத்திய இளைஞர் அணி-மாணவர் அணி- மருத்துவ அணியினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மனமார்ந்த நன்றி!

**சென்னை, ஆக.22–**

**“தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போர் மாபெரும் வெற்றி” என்றும், இந்த அறப்போராட்டத்தை மிகச்சிறப்பாக நடத்திய இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், மாணவர் அணி செயலாளர் எழிலரசன், மருத்துவ அணி செயலாளர் எழிலன் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தும் முதல்வரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.**

**இதுகுறித்து கழகத்தலைவர் அவர்களின் அறிக்கை வருமாறு:–**

மாணவர்களின் மருத்துவக் கல்லூரி கனவைச் சிதைக்கும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசைக் கண்டித்தும் அதற்குத் துணைபோகும் ஆணவம் பிடித்த ஆளுநரைக் கண்டித்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்ட உண்ணாநிலை அறப்போராட்டம் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது.

காலை தொடங்கி மாலை வரையிலான இப்போராட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக உடன்பிறப்புகள், அணிகளின் செயல்வீரர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் மட்டுமல்லாமல் ஏராளமான இளைஞர்கள், மாணவர்கள், பெற்றோர், பொதுமக்கள் பங்கெடுத்திருப்பதையும் ஊடகங்களின் வாயிலாகப் பார்த்தபோது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

**அரசியல் கோரிக்கை அல்ல!**
**கல்விக் கோரிக்கை!**

நீட் தேர்வை விலக்க வேண்டும் என்ற கோரிக்கையானது அரசியல் கோரிக்கையல்ல; அது கல்விக் கோரிக்கை. அதிலும் குறிப்பாக, சமூகச் சமத்துவக் கல்வியை விரும்பும் அனைவரது கோரிக்கை.

நீட் தேர்வை விலக்க வேண்டும் என்ற கோரிக்கையானது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் கட்சியின் கோரிக்கையல்ல; அனைத்து மக்களின் கோரிக்கையாகவும் இன்று மாறி இருக்கிறது.

நீட் தேர்வு அறிமுகம் செய்யப்பட்ட காலத்தில் எதிர்த்தது நாம் சிலர்தான். ஆனால் இன்று இத்தேர்வின் கொடூரத் தன்மையை அனைவரும் அறிந்து விட்டார்கள்.

அதனால்தான் கட்சி எல்லைகளைக் கடந்து இத்தேர்வுக்கு எதிரான முழக்கம் நாடு முழுவதும் கிளம்பி வருகிறது. இவர்களது ஆதரவையும் சேர்த்து இப்போராட்டம் வெளிப்படுத்திவிட்டது.

**ஒன்றியத்தின் புதிய ஆட்சியில்**
**‘நீட்’ நிச்சயம் இருக்காது!**

மிக உறுதியாகக் கூறுகிறேன், 2024 நாடாளு மன்றத் தேர்தலில் நாங்கள் பங்கெடுக்கும் ‘இந்தியா’ கூட்டணி வெற்றி பெற்றால், நீட் தேர்வு நிச்சயம் தமிழ்நாட்டில் இருக்காது என்ற உறுதியை நான் அளிக்கிறேன். ஒன்றியத்தின் புதிய ஆட்சியில் நீட் தேர்வு நிச்சயம் இருக்காது என்பதை, தேர்தல் வாக்குறுதியாகவே அளிக்க வைப்போம். அந்த வலிமையும் உறுதியும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு



உண்டு. இப்படி ஒரு வாக்குறுதியை அ.தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சியான பா.ஜ.க.வும் தர முடியுமா?

ஏழை எளிய விளிம்பு நிலை நடுத்தர ஒடுக்கப்பட்ட சமூக மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவைச் சிதைப்பதுதான் பா.ஜ.க.வின் உண்மையான நோக்கம்.

ஊழலுக்கு எதிரானவர்களைப் போல நடித்துக் கொண்டு, தனியார் பயிற்சி நிறுவனங்கள் கோடிகளில் புரளப் பச்சைக் கொடி காட்டிக் கொண்டிருப்பது ஒன்றிய பா.ஜ.க. ஆட்சி.

**சிரிப்பாய் சிரிக்கும்**
**பா.ஜ.க. ஆட்சியின் ஊழல்கள்!**

இவர்களது ஊழல் வண்டவாளங்கள் தான் சி.ஏ.ஜி. அறிக்கையில் சிரிப்பாய் சிரிக்கிறதே!

தனியார் பயிற்சி நிறுவனங்கள் கொழிக்கவும் அப்பாவி மக்களை நசுக்கவும் ஒன்றிய பா.ஜ.க. அரசால் நடத்தப்படும் நீட் தேர்வை அ.தி.மு.க.வின் அடிமை ஆட்சிக் காலம் ஆரம்பக் காலத்திலேயே எதிர்த்திருந்தால் இந்த நிலைமை வந்திருக்காது. பா.ஜ.க.வின் பாதம்தாங்கிகளான அடிமை அ.தி.மு.க. கூட்டம், சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதா ஒன்றிய அரசால் திருப்பி அனுப்பப்பட்ட தகவலையே சட்ட மன்றத்திற்குச் சொல்லாமல் வாயைப் பொத்திக் கிடந்தது. தங்களது நாற்காலி காப்பாற்றப்பட்டால் போதும் யார் நாசமானால் என்ன என்று நினைத்து தரையில் விழுந்து கிடந்தார்கள்.

**‘நீட்’ தேர்வை**
**ரத்து செய்ய வைப்போம்!**

அரியலூர் அனிதா தொடங்கி குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன் வரை ஏராளமான மாணவர்களின் உயிரைக் குடித்த நீட் தேர்வு ரத்து செய்யப்படும் வரை எங்களது போராட்டம் ஓயாது. நாடாளு மன்றத்திலும் சட்டமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் போராடிய நாங்கள், அமைய இருக்கும் புதிய ஒன்றிய ஆட்சியின் மூலமாக வலியுறுத்தி நீட் தேர்வை ரத்து செய்ய வைப்போம்.

என்னைப் பொறுத்தவரையில், நான் நம்பிக்கை இழக்கவில்லை. நீட் என்பது ஏதோ மாற்ற முடியாத அரசியலமைப்புச் சட்டமல்ல. அரசியலமைப்புச் சட்டத்தையே காலில் போட்டு மிதித்த வர்கள் ஒன்றிய பா.ஜ.க.வினர். எனவே, நீட் தேர்வும் ரத்தாகும். அதனை ரத்து செய்ய வலியுறுத்தும் உண்ணாநிலை **அறப் போராட்டத்தை மிகச்சிறப்பாக நடத்திய இளைஞரணிச் செயலாளர் தம்பி உதயநிதி, மாணவரணிச் செயலாளர் தம்பி எழிலரசன், மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் ஆகியோருக்கும் இதில் பங்கெடுத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

உங்கள் போராட்டம் நமக்கு மேலும் உறுதியை ஏற்படுத்தி இருக்கிறது. நீட் தடுப்புச் சுவர் உடைபடும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

இவ்வாறு அவ்வறிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு... முதல் பக்கத் தொடர்ச்சி

என்று புகார் கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு மிரட்டல் விடுகின்றனர். நீங்கள் முடிந்தால் நடவடிக்கை எடுத்துப் பாருங்கள். தமிழ்நாட்டு மக்கள் உங்களை சும்மா விட்டு விடுவார்களா?

இந்த மேடையில் சொல்கிறேன், அம்மாசியப்பன் அவர்களின் வேலைக்கு நீங்கள் ஏதாவது இடையூறு செய்தால் நாங்கள் சும்மா விடமாட்டோம். தமிழ்நாடு மக்களை நீங்கள் புரிந்துகொள்ளவில்லை ஆளுநர் அவர்களே! ஆமாம், நாங்கள் வாக்குறுதி கொடுத்தோம். அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான முழு முயற்சியையும் நம்முடைய தலைவர் அவர்கள் செய்துகொண்டுள்ளார்கள்.

**4 பேர் மட்டுமே எதிர்ப்பு!**

ஆட்சியமைத்த ஒரே மாதத்தில் ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுக்க சுற்றுப்பயணம் செய்தார்கள். மாணவர்களைச் சந்தித்தார். பெற்றோர்களை சந்தித்தார். ஆசிரியர்களை சந்தித்தார். நீட் தேர்வினால் எவ்வளவு பேர் பாதிக்கப்படுகின்றனர் என்ற அறிக்கை சட்டமன்றத்தில் வைக்கப்பட்டது. சட்டமசோதா நிறைவேற்றப்பட்டது. அந்த வாக்கெடுப்பில் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களும் ஆதரவாக வாக்களித்தனர். 4 பேர் மட்டுமே அதற்கு எதிர்ப்பு. யார் அந்த 4 பேர் என்று நான் உங்களுக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை. அந்த 4 பேர் வெளிநடப்புச் செய்தனர். அதன்பிறகு அந்த சட்டமுன்வடிவை சட்டமன்றத்துக்கே மீண்டும் திருப்பி அனுப்புகிறீர்கள்.

அ.தி.மு.க. ஆட்சியிலும் இதேபோன்ற ஒரு சட்டமுன்வடிவைத் தயாரித்து அனுப்பினார்கள். ஓராண்டுக்கு மேலாக அது எங்கே போனது என்றே தெரியவில்லை. அ.தி.மு.க. வினர் இங்கே சபையில், ‘வரும், வந்துவிடும், நாங்கள் விலக்கு கொடுத்துவிடுவோம்’ என்ற பொய் சொல்லிக்கொண்டே இருந்தனர்.

ஆனால் நம் தலைவர் அவர்கள், சட்டமுன்வடிவை ஆளுநர் திருப்பி அனுப்பிய அடுத்தநாளே அனைத்து கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார். மீண்டும் சபையில் சட்ட மசோதா தாக்கல்செய்யப்பட்டு ஒருமனதாக அதை நிறைவேற்றி மீண்டும் ஆளுநருக்கு அனுப்பிவைக்கிறார். அதையும் ஆளுநர் அப்படியே தன்னிடமே வைத்திருந்தார். எங்கள் அமைச்சர்களை வைத்து ஆளுநருக்கு தொடர்ந்து நினைவூட்டி அதை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வைத்தார் எங்கள் தலைவர். ஆனால் ஆளுநர் இப்போது ‘I will never ever’ என்கிறார்.

ஒருசிலர், ‘மருத்துவப் படிப்பு இல்லையென்றால் வேறு படிப்பே இல்லையா?’ என்கின்றனர். அதை சொல்ல நீங்கள் யாரு? ‘என் வீட்டு குழந்தை மருத்துவராகணும்னு ஆசைப்படுகிறது என்றால் அதற்கு அந்தக் கல்வி உரிமை இருக்கிறது. இந்த ’நீட்’ தேர்வே தகுதியற்ற தேர்வு. இந்தத் தேர்வை என்று ஒழிக்கிறோமோ அன்றுதான் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு விடியல். அதை திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிப்பாக களத்தில் இறங்கி செய்யும்.

இன்று ஒருநாள் இங்கு கூடியிருக்கிறோம். 5 மணியானால் எல்லோரும் ஜூஸ் குடித்துவிட்டு கிளம்பிவிடுவோம். இதுதான் வழக்கமாக நடக்கும். ஆனால் இனி அப்படியல்ல. இது ஆரம்பம்தான். இது முடிவல்ல. ‘இந்தப் போராட்டம் ஒவ்வொரு கல்லூரிக்குள்ளேயும் போக வேண்டும்’ என்று இங்கு பேசுபவர்கள் சொன்னார்கள். மாடு பிடிக்கப் போராடின நாம் ஒரு மாணவனோட உயிருக்குப் போராட மாட்டோமா?

மாணவர்களிடம் நான் சொல்வது, தயவுசெய்து கொஞ்சம் பொறுமையாக இருங்கள். நம் தலைவர் அவர்கள் கண்டிப்பாக இந்த ‘நீட்’ தேர்விலிருந்து விலக்கு பெற்றுத் தருவார்கள். இன்று காலையில்கூட ஒரு திருமண நிகழ்ச்சியில் தலைவர் அவர்கள் அந்த வாக்குறுதியைத் தந்துள்ளார்கள்.

நேற்று பா.ஜ.க.வினுடைய ஒரு தலைவர் நீட் தேர்வு பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது, பொதுத்தேர்வு முடிவு வரும்போது மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வதெல்லாம் ரொம்ப சாதாரண விஷயம்’ என்றிருக்கிறார். அவர் யார் என நான் சொல்ல விரும்பவில்லை.

இந்த மாணவர்கள் எல்லாம் பொதுத் தேர்வில் தோல்வியடைந்தா தற்கொலை செய்துகொண்டார்கள்? தங்கை அனிதா பொதுத் தேர்வில் எவ்வளவு மதிப்பெண் என தெரியுமா? 1200க்கு 1176 மதிப்பெண்கள் பெற்றவர். இவர்கள் அனைவரும் தற்கொலை செய்துகொண்டது பொதுத் தேர்வினால் அல்ல, நீட் தேர்வினால். உங்கள் வீட்டில் ஒரு குழந்தைக்கு இப்படி ஆகியிருந்தால் நீங்கள் இப்படிப் பேசுவீர்களா? என்று கேட்கிறேன்.

**அ.தி.மு.க. – பா.ஜ.க.வை**
**மக்கள் மன்னிக்க மாட்டார்கள்!**

‘இந்த உண்ணாவிரதப் போராட்டமே தேவையற்றது’ என்கிறார். நான் இன்று சொல்கிறேன், ‘தமிழ்நாட்டுக்கு பா.ஜ.க. என்ற ஒரு கட்சியே தேவையற்றது. இது தொடர்ந்து கொண்டே போனால், பா.ஜ.க.வையும், அ.தி.மு.க.வையும் எப்போதும் மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள்.

**அ.தி.மு.க. விற்கு சவால்!**

இன்னொரு சவால் விடுகிறேன். அ.தி.மு.க.வின் பொன்விழா மாநாடு மதுரையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாநாடு என்றால் தீர்மானங்கள் நிறைவேற்றுவோம். அ.தி.மு.க.வில் என்ன தீர்மானம் போடுவார்கள்? என்ன சாப்பாடு போடுவார்கள் என்று பார்ப்பார்கள். புளி சாதமா, பிரியாணியா என்று பார்ப்பார்கள். அதைத்தான் செய்திச் சேனல்களிலும் ‘கவர்’ பண்ணிக்கொண்டு இருக்கிறார்கள்.

நான் உங்களிடம் ஒரு சவால் விடுகிறேன். அ.தி.மு.க. மாநாட்டில் ஒரே ஒரு தீர்மானம்; ஒன்றிய பாஜக அரசை வலியுறுத்தி தமிழ்நாட்டில் இருந்து நீட் தேர்வு ரத்து செய்யப்படும் என்று ஒரே ஒரு தீர்மானம் மட்டும் போடுங்க. ஒட்டுமொத்தக் கட்சிகளும் சேர்ந்துதானே தமிழ்நாட்டு மக்களுக்கு வாக்குறுதி கொடுத்தோம். நீட் தேர்வை ஒழிப்போம் என்று அ.தி.மு.க.வும் வாக்குறுதி தந்தது.

எடப்பாடி தயாரா?

எடப்பாடி பழனிச்சாமி அவர்களே! உங்களிடம் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். இதில் அரசியல் செய்ய வேண்டாம். நான் செய்யவில்லை. நீங்கள்கூட வரவேண்டாம். உங்களுடைய இளைஞர் அணி செயலாளரை அனுப்பிவையுங்கள். அ.தி.மு.க.வின் இளைஞர் அணிச் செயலாளர் யார் என்று எனக்குத் தெரியவில்லை. மாணவர் அணிச் செயலாளரையாவது அனுப்பிவையுங்கள். நாங்களும் வருகிறோம். அனைத்துக் கட்சி பிரதிநிதிகளையும் அழைத்துக்கொள்ளலாம். எல்லோரும் சேர்ந்து டெல்லிக்குப் போவோம். பிரதமர் வீட்டுக்கு முன்பு போய் உட்கார்ந்துவிடுவோம்.

அந்தப் போராட்டத்தினால் நீட் தேர்வு ரத்து ஆனால் அந்த முழுப் பெருமையையும் நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். அப்படி நடந்தது என்றால், ‘அ.தி.மு.க. வினால் தான் நீட் தேர்வு தமிழ்நாட்டில் ரத்து செய்யப்பட்டது’ என்று நான் ஒப்புக்கொள்கிறேன். இதற்குத் தயாரா? இவ்வளவு மக்கள் முன்பும் நான் கேட்கிறேன்.

உங்களுக்கு கொஞ்சமாவது வெட்கம், மானம், சூடு சொரணை இருந்தால் இன்று நடைபெறக்கூடிய மதுரை மாநாட்டில் இதுகுறித்து தீர்மானம் நிறைவேற்றுங்கள் பார்ப்போம். வெட்கம், மானம், சூடு, சொரனையை உங்களிடம் எதிர்பார்ப்பது கஷ்டம்தான்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு முதலமைச்சர் ஆனதும் ஒரு திட்டத்தை அறிவித்தார். ஏழை எளிய கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்துள்ள உணவினை உண்ண வழிவகை செய்யவும், கர்ப்ப காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுசெய்யவும் 1989ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திட்டம். 14 ஆயிரம் ரூபாய் ரொக்கமாகவும் 4 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ஊட்டச்சத்துப் பெட்டகமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

அந்தத் திட்டத்துக்கு கலைஞர் வைத்த பெயர், ‘டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டம்’. கலைஞர் ஏன் அந்தப் பெயரை வைத்தார் தெரியுமா? அந்த முத்துலெட்சுமிதான் இந்தியாவின் முதல் பெண் மருத்துவர். புதுக்கோட்டையைச் சேர்ந்தவர். சென்னை மருத்துவக் கல்லூரியில் 1912ல் சேர்ந்து டாக்டர் பட்டம் பெற்றார்.

அவருடைய பெயரைக் கேட்கும்போது அவருடைய வரலாற்றைப் படிக்கும்போது பெண்களுக்கு, நாமும் மருத்துவர்களாக ஆக வேண்டும் என்ற விருப்பம் வர வேண்டும் என்பதற்காகத்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அந்தப்பெயரை வைத்தார்.

இப்படிப்பட்ட வரலாறுகொண்ட தமிழ்நாட்டில் இருந்து கொண்டு இல்லாத அதிகாரம் தனக்கு இருப்பதாக நினைத்துக்கொண்டு ‘நீட்’ மசோதாவுக்கு நான் கையெழுத்திடமாட்டேன் என்று ஆளுநர் கூறிக்கொண்டு இருக்கிறார். அதற்கு நாம் கண்டனம் தெரிவித்துக்கொண்டு இருக்கிறோம். இதுவரை அ.தி.மு.க.வில் இருந்து யாராவது ஒருவர் கண்டனம் தெரிவித்தார்களா? கண்டனத்தை விடுங்கள், அதை எதிர்த்து மூச்சாவது விட்டுள்ளார்களா?

உங்களுடைய தலைவியை நீங்கள் பெருமையாக ‘இரும்புப்பெண்’ என்று அழைப்பீர்களே, அவரை தலைவராக ஏற்றுக்கொண்டுள்ள நீங்கள், ஒரு பித்தளை மனிதர்களாகவாவது இருக்க வேண்டாமா? ஒரு பிளாஸ்டிக் மனிதராகவாவது இருக்க வேண்டாமா? மோடியும், அமித்ஷாவும் பிசைந்துவைத்துள்ள களி மண்ணாகத்தான் இங்குள்ள அ.தி.மு.க.வினர் இருந்துகொண்டுள்ளனர்.

**ராகுல்காந்தி வாக்குறுதி!**

இதற்கெல்லாம் ஒரு விடிவு வரவேண்டும். நம்முடைய தலைவர் அவர்கள் ஏற்கனவே சொல்லியுள்ளார்கள். அருமைச் சகோதரர் ராகுல் காந்தி அவர்களும் சொல்லியுள்ளார்கள். வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை ஓடஓட விரட்டுங்க. நம் கூட்டணி ஆட்சி ஒன்றியத்தில் அமைந்தால் நிச்சயம் தமிழ்நாட்டில் இருந்து நீட் தேர்வு ரத்தாகும். அருமைச் சகோதரர் ராகுல் காந்தி அதற்கான வாக்குறுதியை அளித்துள்ளார்கள்.

இந்தப் போராட்டம் இத்தோடு நிற்காது. அடுத்த போராட்டம் தலைவர் அவர்களின் அனுமதியைப் பெற்று டெல்லியில் நடத்தப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு ஆசிரியர் (கி.வீரமணி அவர்கள்) அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து வந்திருந்த அத்தனை மாணவர்கள், பெற்றோர்கள், மருத்துவர்கள், பத்திரிகை நண்பர்கள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகளுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

முன்னதாக காலை 9 மணிக்கு கழக பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் உண்ணாவிரதத்தை தொடங்கிவைத்து உரையாற்றினார். திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் மாலையில் கலந்துகொண்டு, நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய அரசையும் ஆளுநரையும் கண்டித்து உரையாற்றி, அனைவருககும் பழச்சாறு வழங்கி உண்ணாவிரதத்தை முடித்துவைத்தார்.

இந்த உண்ணாவிரத அறப்போராட்டத்தில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மாநில திட்டக்குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ., நே.சிற்றரசு, மயிலை த.வேலு எம்.எல்.ஏ., த.இளைய அருணா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், இரா.கிரிராஜன், தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி, என்.ஆர்.இளங்கோ, பி.வில்சன், சென்னை மாநகர மேயர் பிரியா,

மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., மருத்துவ அணித் தலைவர் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், எம்.கே.மோகன், அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஜோசப் சாமுவேல், கே.பி.சங்கர், ஐட்ரீம் மூர்த்தி, வெற்றியழகன்,

சென்னை மாநகர துணை மேயர் மகேஷ்குமார், இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜோயல், மாணவர் அணி இணைச் செயலாளர் மோகன், சென்னையின் 6 மாவட்டக் கழகங்களைச் சேர்ந்த ஒன்றியபகுதிக் கழகங்களைச் சேர்ந்த நிர்வாகிகள், பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், சென்னையின் மருத்துவ, கலை அறிவியல் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவமாணவிகள், மருத்துவர்கள், கல்வியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுப் பள்ளிகளுக்கான மாநில மேடை அமைப்பின் பொதுச்செயலாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு, சமூக சமத்துவத்துக்கான மருத்துவர் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் ரவீந்திரநாத், டாக்டர் சாந்தி, திராவிட இயக்கச் சிந்தனையாளர் நாஞ்சில் சம்பத், தமிழ் ஆராய்ச்சியாளர் தமிழ் காமராசன், ஊடகவியலாளர் செந்தில்வேல், நீட் போராளி அனிதாவின் சகோதரர் மணிரத்னம், பத்திரிகையாளர் திருஞானம், இறையன்பன் குத்தூஸ், மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகள் உள்பட பலர் நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய அரசுஆளுநரைக் கண்டித்து உரையாற்றினர்.

முன்னதாக சென்னையில் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தை மாவட்டக் கழகத்துடன் இணைந்து ஒருங்கிணைத்த 6 கழக மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ, ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ, ராஜா அன்பழகன், பிரகாஷ், லோகேஷ், மதன்குமார், மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர்கள் துபாய் விஜய், மயிலை சரவணன், சத்யா, அருண்குமார், வானவில் விஜய், மருத்துவ அணி மாவட்ட அமைப்பாளர்கள் சாந்தகுமாரி, அனீஷ், ஜீவகன், கோபால், கலைவாணன், சக்திவிக்னேஷ் ஆகியோருடன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

---

## அந்துமணி சிந்து மணி



**அந்துமணி :** சென்னை நகரம் பிறந்து 384 ஆண்டுகள் ஆகப்போகிறதாமே?

**சிந்துமணி :** **ஆமாம்; மதராஸ் பட்டனம் அல்லது சென்னைப் பட்டனம், 1639 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 22 அன்று முதன் முதலில் உருவாக்கப்பட்டது. வரும் 22 ஆம்தேதியன்று, 383ஆண்டுகள்நிறைவடைந்து, 384 ஆவது ஆண்டு பிறக்கப் போகிறது.**

**“மெட்ராஸ் ஸ்டேட்” என்றிருந்து வந்ததை, “தமிழ்நாடு” எனப் பெயர் மீட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதனால்தான் அவரை, ‘தாய்க்குப்பெயர்தந்ததனயன்’ எனப்பாராட்டிப் போற்றிப் புகழ்ந்துரைத்து வருகிறோம்.**

**அதைப்போல, ‘மெட்ராஸ்’ எனவழங்கப்பட்டு வந்ததை, ‘ சென்னை’ எனப் பெயர் மீட்பு செய்து, அரசாணை வெளியிட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே ஆவார்கள்.**

**சென்னை பிறந்து, ஒவ்வோர் ஆண்டையும் கடக்கும் போது, அப் பெயருக்குக் காரணமான கலைஞர்அவர்களையும்அனைவரும்தவறாமல் நினைவு கூர்தல் வேண்டும் !**

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்திய ‘நீட்’ எதிர்ப்புப் போராட்டம்!

# இளைஞர்கள் - மாணவர்களிடையே மிகப்பெரும் எழுச்சியை உருவாக்கியுள்ளது!

### திருவண்ணாமலையில் 10 ஆயிரம் பேர் பங்கேற்ற உண்ணாவிரத ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!



திருவண்ணாமலை, ஆக. 22 -

“கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்திய ‘நீட்’ எதிர்ப்புப் போராட்டம் இளைஞர், மாணவர்களிடையே மிகப் பெரும் எழுச்சியை உருவாக்கியுள்ளது” என்று அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலையில் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தை முடித்து வைத்துப் பேசும்போது கூறினார்.

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் மாணவர்களை மட்டுமன்றி, பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும், நீட்டைத் திணிக்கும் ஒன்றிய அரசையும், பொறுப்பற்ற ஆளுநரையும் கண்டித்து 10ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட மாபெரும் உண்ணாவிரத அறப்போர் நடைபெற்றது. உண்ணாவிரதத்தை முடித்து வைத்து, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு சிறப்புரை யாற்றினார்.

நேற்று முன்தினம் (20.08.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் திருவண்ணாமலை, வட்டாட்சியர் அலுவலகம் அருகில், மாணவர்களை மட்டுமன்றி, பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும், நீட்டை திணிக்கும் ஒன்றிய அரசையும், பொறுப்பற்ற ஆளுநரையும் கண்டித்து மாபெரும் உண்ணாவிரத அறப்போர் நடைபெற்றது.

உண்ணாவிரத அறப்போராட்டத்திற்கு கழக மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன் தலைமை வகித்தார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி. என்.அண்ணாதுரை எம்.பி, வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எவரஸ்ட் என்.நரேஷ்குமார், வடக்கு, தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள் காலேஜ் ரவி, இ.எஸ்.டி.கார்த்திகேயன், வடக்கு, தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர்கள் டாக்டர் சி.மகேந்திரன், டாக்டர் பிரவீன்ஸ்ரீதரன், டாக்டர் சவீதாகதிரவன், டாக்டர் எஸ். சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன் உண்ணாவிரத அறப்போரினை தொடங்கி வைத்து பேசினார்.

உண்ணாவிரத அறப்போரினை திராவிடர்கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, வர்த்தகர் சங்கம், வழக்கறிஞர்கள் சங்கம், நடைபாதை வியாபாரிகள் சங்கம், மண்டி வியாபாரிகள், பேருந்து நிலைய வியாபாரி கள் சங்கம் மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள், இளைஞர்கள் உண்ணாவிரத பந்தலுக்கு வந்து ஆதரவினை தெரிவித்தனர்.

மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், ஓ.ஜோதி, தோழர் எம்.வீரபத்திரன், தோழர் என்.சிவக்குமார், தோழர் வே.முத்தையன், தோழர் தங்கராஜ் ஆகியோர் உண்ணாவிரத்தை ஆதரித்து பேசினர்.

நீட் தேர்வை எதிர்த்து நடைபெற்ற உண்ணாவிரத்தில் மாலையில் கலந்து கொண்டு, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ. வேலு அவர்கள் அறப்போராட்டத்தினை முடித்து வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது :-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தலைவர் மு.க.ஸ்டாலின் வழியில் திராவிட இயக்கத்தின் ஐந்தாம் தலைமுறை தலைவர், இளைஞர் அணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இங்கே 10ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கூடி உண்ணாவிரதம் இருப்பது எதற்காக? நமது இயக்கத்தின் செல்வாக்கை காட்டவா? அல்ல. இன்றைய நிலைமை அப்படி உள்ளது. ஆண்டுக்காண்டு உயிரை மாய்த்துக் கொள்ளும் மாணவர்களுடைய நிலைமை. மருத்துவராக, பொதுத்தொண்டு செய்ய வரவிரும்பும் மாணவர்களுக்கு மருத்துவ கல்வி கிடைக்காததால், இந்த தற்கொலை மரணங்கள். மேலும், பல மாணவர்களின் உயிர்கள், பெற்றோர்களின் உயிர்கள் போகாமல் தடுக்கத்தான் இந்த அறப்போராட்டம்.

**‘நீட்’டுக்கு 23 பேர் பலி!**

நீட் தேர்வுக்கான முதல் பலி அரியலூர் அனிதாவில் தொடங்கியது. திருச்சி சுபஸ்ரீ, சென்னை ஏன்ஜலின் சுருதி, திருப்பூர் ரிது, மரக்காணம் மோனிஷா, பட்டுக்கோட்டை வைசியா, திருநெல்வேலி தனலட்சுமி, கோவை சுபஸ்ரீ, மதுரை ஜோதி, ஸ்ரீதுர்கா மற்றும் விக்னேஷ், தருமபுரி ஆதித்யா, திருச்செங்கோடு மோதிலால், மோட்டூர் தனுஷ், அரியலூர் கனிமொழி தற்போது தந்தையும், மகனும் நீட்டுக்கு பலி என 23பேருக்கு மேல் உயிரை குடித்தும், இந்த காதுகேட்காத ஒன்றிய அரசுக்கு உரைக்கவில்லை.

இதையெல்லாம் தடுத்து நிறுத்ததான், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தூங்கும் மத்திய அரசையும், பொறுப்பற்ற ஆளு நருக்கு உரைத்திடவும் உண்ணாவிரத்தை அறிவித்துள்ளார். நான் தொலைபேசியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு பேசிய போது, நீங்கள் கழகப் பொறுப்பேற்று முதல்முறையாக அறிவித்த இந்த நீட் எதிர்ப்பு போராட்டம், பொதுமக்கள், இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் மிகப்பெரிய எழுச்சியை உருவாக்கி உள்ளது என்று சொன்னேன்.

**கலைஞர் ஆட்சியில் எட்டிக்கூட பார்க்கவில்லை!**

காங்கிரஸ் மத்தியில் ஆண்ட போது, அதன் கூட்டணி கட்சியாக திமுக இருந்த போது தான் நீட் தேர்வு கொண்டுவரப்பட்டதாக குற்றம்சாட்டு கிறார்கள். உண்மையில் அன்றைக்கு நீட் கூடாது என்ற சொன்ன இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம், அப்போது அமைச்சராக இருந்தவர் குலாம்நபி ஆசாத், தலைவர் கலைஞர் அவர்கள், சென்னை உயர்நிதிமன்றத்தில் நீட் தேர்வு தேவையில்லை என்று தடையாணை பெற்றார். தலைவர் கலைஞர் ஆண்ட 2011 வரை நீட் எட்டிக்கூட பார்க்கவில்லை. விரும்பாத மாநிலங்களில் நீட் தேர்வு இல்லை என்று அப்போது காங்கிரஸ் அரசாங்கம் அறிவித்தது. உண்மையை சொல்ல வேண்டுமென்றால், அம்மையார் ஜெயலலிதா ஆண்ட 2016 வரை, கலைஞர் வழியில் அவரும் நீட்டை தமிழ்நாட்டில் அனுமதிக்க வில்லை.

2017 ஆம் ஆண்டுக்குப் பிறகு தான், ஓ.பி.எஸ்., இ.பி.எஸ். என்ற இருவரால் தமிழ்நாட்டு நிர்வாகமே சீர் குலைந்து போனது. பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டில் நீட் தேர்வைக் கொண்டுவர பட்டுக் கம்பளம் விரித்தவர்கள் இவர்கள் தான். இவர்களால் தான் நாடே நாசமாக போனது.

நாம் இப்போதுதான் நீட் தேர்வை புதியதாக எதிர்க்கவில்லை. 04.01.2011ல் நீட்டை எதிர்த்து பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றினோம். நாடாளுமன்றத்தில் சகோதரி கனிமொழி கருணாநிதி அவர்கள் நீட் தேர்வு குறித்து விவாதிக்க வேண்டுமென்று சொன்னார்கள் அதனை கடைசி வரை அனுமதிக்கவில்லை. 25.04.2012-ல் தமிழ்நாடு முழுவதும் நீட் தேர்வை எதிர்த்து கடையடைப்பு போராட்டம் நடத்தினோம். ஏன், அதற்கு பின்னால் மனித சங்கிலி போராட்டம் கூட நடத்தினோம். சட்டமன்றத்தில் நீட்தேர்வுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற சொல்லி குரல் கொடுத்தோம். 2017ஆம் ஆண்டு வரை இதற்காக போராட்டம் நடத்தியும் பயனில்லை.

நீதியரசர் ராஜன் தலைமையில் குழு!

சட்டமன்ற தேர்தலின் போது, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நீட் தேர்வை ரத்து செய்ய அனைத்து முயற்றிகளையும் செய்வோம் என அறிவித்தோம், நாம் ஆட்சிக்கு வந்தவுடன் ஓய்வுப் பெற்ற நீதிபதி ராஜன் தலைமையில் ஒரு குழு அமைத்தோம், அவர் தந்த அறிக்கையில் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு மட்டும் நீட் விலக்கு தேவை என்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் தீர்மானம் கொண்டுவந்தார்.

அந்த தீர்மானத்தை ஆளுநருக்கு அனுப்பிய போது. அவர் ஜனநாயக ரீதியாக செயல்படாமல், அதை குடியரசுத்தலைவருக்கு அனுப்ப வில்லை. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மூத்த அமைச்சர்களுடன், ஆளுநர் மாளிக்கைக்கு சென்று குடியரசு தலைவருக்கு அனுப்பி வைத்திட வலியுறுத்தினார்.

**மோடியின் நிலைப்பாடு என்ன?**

இன்றைக்கு பிரதமராக இருக்கிறாரே மரியாதைக்குரிய மோடி அவர்கள் குஜராத் முதல்வராக இருந்த போது, தமிழ்நாட்டை போலவே குஜராத்திற்கும் நீட் விலக்கு கொண்டுவருவோம் என்று அறிவித்தார் மோடி. நேரு, அன்னை இந்திரா, விபிசிங், மொரார்ஜி தேசாய், ஆகியோர் நேரடியாக பிரதமராக ஆனவர்கள். ஆனால் மோடி அவர்கள் முதலமைச்சராக இருந்து பிரதமர் ஆனவர். அவர் மாநில உரிமைகளுக்கு ஆதரவு கொடுத்து இருக்க வேண்டும். முதல்வராக இருந்த போது நீட் வேண்டாம். பிரதமராக ஆனவுடன் நீட் வேண்டும் இது பா.ஜ.க. அரசின் நிலைபாடு.

மூன்று மாதம் கழித்து ஆளுநர் அவர்கள் நீட் தேர்வு குறித்து தீர்மானத்தை, தமிழ்நாடு அரசுக்கு திருப்பி அனுப்பினார். மீண்டும் ஒருமுறை சட்டமன்றத்தில் நீர் தேவையில்லை என்று தீர்மானம் நிறைவேற்றி, ஆளுநருக்கு அனுப்பினோம். வேறுவழியில்லாமல் ஆளுநர் அவர்கள் குடியரசு தலைவருக்கு அனுப்பி வைத்தார். குடியரசுத் தலைவரிடம் இருந்து இன்னும் கையொப்பம் ஆகவில்லை.

இப்போது எதற்கு இந்த உண்ணாவிரத அறப்போர் என்றால், ஆகஸ்ட் 12 அன்று ஆளுநர் மாளிகையில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் விருந்து நடைபெற்றது. அதில் ஆளுநர் நீண்ட பிரசங்கம் செய்தார். அதில் ஒரு பெற்றோர் எழுந்து எழை, எளிய, கிராமப்புற மாணவர்கள் மருத்துவர்கள் ஆவதற்கு நீட் தேர்வு தடையாக இருக்கிறது. அதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டார். அதற்கு பதில் அளித்த ஆளுநர். நான் அந்த பொறுப்பில் இருந்தால் நீட் தேர்வுக்கு எதிராக கையெ மூத்திட மாட்டேன் என்று ஆனவமாக தெரிவித்தார். மக்கள் வரிப்பணத்தில் தான் அரசாங்கம் நடைபெறுகிறது. அமைச்சர்களுக்கு சம்பளமும் மக்கள் வரிப்பணம் தான். ஆளுநருக்கும் மக்கள் வரிப்பணம் தான் செலவிடப்படுகிறது.

12ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்கள் நீட் தேர்வில் வெற்றிப் பெற முடிவதில்லை, குறைந்த மதிபெண் எடுத்து தேர்ச்சி பெற்ற பணம் படைத்த மாணவர்கள் தனியார் நீட் தேர்வு மையங்களில் பயிற்சி பெற்று நீட் தேர்வில் வெற்றிப்பெறுகிறார்கள். எழை எளிய, கிராமப்புற மாணவர்கள், மருத்துவராக ஆக வேண்டும் என்று இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இந்த மாபெரும் அறப்போராட்டத்தினை அறிவித்தார்கள். அவருக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

அறப்போரட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீத்தாபதி, கே.வி. ராஜ்குமார், ஆர்.வேல்முருகன், பொன்.முத்து, மாவட்ட பொருளாளர்கள் எஸ். பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சணாமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் என்.பாண்டுரங்கன், ப்ரியா விஜயரங்கன், க.லோகநாதன், ஜெயராணி ரவி, விஜியலட்சுமிரமேஷ், மாநில தொ.மு.ச பேரவை செயலாளர் க.சௌந்தர ராஜன், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் பார்வதி சீனுவா சன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் பாரதிராமஜெயம்

தெற்கு, வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சு.ராஜாங்கம், கோ.ராஜசேகர், எஸ்.கண்ணதாசன், எம்.ரமேஷ், டி.திலீப்குமார், எஸ்.சதீஷ்குமார், மூ.ரஞ்சித்குமார், சு.வெங்கடேசன், சி.ராம்மோகன், கே. குமரவேல், ம.புருஷோத்தமன், ப.கலாம்பாஷா

தெற்கு, வடக்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் மு.க.கௌதமன், ஏ.வெங்கடாஜலபதி, இரா.மின்னல்கமல், ஆ.மாதேஸ்வரன், தே.தேவி, கே.வி.ஆர். சுரேஷ்பாபு, கோ. மணிபாரதி, ப.தமிழரசன், ஷேக். ஷர்புதீன், இ.வெ.கீர்த்தனா

தெற்கு, வடக்கு மாவட்ட மருத்துவ அணி துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் டாக்டர் டி.எம்.கலையரசன், முத்தையசிராஜ், சக்திவேல், டாக்டர் எஸ்.விக்னேஷ், டாக்டர் யோ கேஸ்வரன், டாக்டர் வி.தமிழரசன், டாக்டர் ரவிக்குமார், டாக்டர் மா.வினோத்கண் ணன், டாக்டர் சந்திரகலா, டாக்டர் கே.எஸ்.சையத்சுல்தான், டாக்டர் அ.மணியரசு, டாக்டர் மு.கங்கா ஷாலினி, டாக்டர் இ.எம். கௌதம், டாக்டர் எஸ். ஆயிஷாசௌகத் மற்றும் தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி. எம்.நேரு, ப.அண்ணாமலை, மங்கலம் ம.பிரபாகரன், ஏ.ஏ.ஆறுமுகம், பொன். தனுசு, சு.விஜி (எ) விஜியராஜ், எச்.சாதிக் பாஷா, கு.கணேஷ், ஜெ. மெய்கண்டன், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ். முத்து, இர.சீனுவாசன், சு. பழனிவேல், இரா.கார்த்திகேயன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபல்யூ.சர்தார் காசிம், எஸ்.டி.ஆர்.எஸ். பாபு, கற்பகம்சரவணன், உ.நித்யா வடக்கு மாவட்டம் கோ.எதிரொலி மணியன், ஏ.என்.சம்பத், என். கே.பாபு, மா.ஏழுமலை, கே.ஏ.புஷ்ப ராஜ், ஏ.மணிகண்டன், இ. பிச்சை கண்ணு, ஜி.பி.அசோக், ராம் ரவி, திவ்யா செல்வராஜ், இ.மணிகண்டன், சாது. ஆனந்த், அப்சல்பாஷா, ப.க. மணிவண்ணன், இ. மணி கண்டன், தொ.மு.ச மதிவாணன், பி.எஸ்.சாந்த குமார், ஐ.எஸ்.அமானுல்லா, மாலினிவினோத்திவாகர், ராணிவெங்கடேசன் மற்றும் நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வ நாதன், எ. தயாளன்,

தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர். சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராம ஜெயம், த.செந்தில்குமார், அ. ஏழுமலை, த.மனோகரன்,

வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிர மணியன், பி.மனோகரன், ஏ. எழில்மாறன், கே. டி.ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ். மோகன், து.மாமது, ஏ. ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிட முருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, எஸ். பிரபு, சி.ஆர்.பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, கோ.கண்ணன், அ. தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி. வி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி. வெங்கடேசன், டி.கே. மோகன், கே.கோவர்தணன், வேணிஏழுமலை மற்றும் ஒன்றியக்குழு, நகராட்சி, பேரூராட்சி மன்றங்களின் தலைவர்கள் உட்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதி நிதிகள், கிளைக்கழக நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என 10ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை மாவட்டத்தில், இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நீட் தேர்வைக் கண்டித்து நடைபெற்ற மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டத்தை, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முடித்து வைத்து சிறப்புரையாற்றினார். உடன் வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், த.வேணுகோபால், டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை எம்.பி, இரா.ஸ்ரீதரன், பொன்.முத்து, மு.பெ.கிரி பெ.சு.தி.சரவணன், ஓ.ஜோதி, ப்ரிய விஜயரங்கன் மற்றும் எவரஸ்ட் நரேஷ்குமார், காலேஜ் ரவி, இஎஸ்டி. கார்த்திகேயன், டாக்டர் மகேந்திரன், டாக்டர் பிரவீன் ஸ்ரீதரன் உட்பட பலர் உள்ளனர்.

## ஆவடி சா.மு.நாசர் தலைமையில் திருத்தணி எஸ்.சந்திரன்- டி.ஜெ.கோவிந்தராஜன் முன்னிலையில்

# ‘நீட்’ திணிப்பைக் கண்டித்து திருவள்ளூரில் உண்ணாவிரதப் போராட்டம்!

### திண்டுக்கல் லியோனி - வி.ஜி.ராஜேந்திரன் - ஆ.கிருஷ்ணசாமி பங்கேற்பு!

திருவள்ளூர், ஆக.22

ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்கள் எண்ணத்தின் வெளிப்பாடாக நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் முயற்சிகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது. ஆனால், அந்த நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் ரவி முட்டுக்கட்டை போட்டு வருகிறார். நம் மாணவச் செல்வங்களின் மரணம், ஆளுநரையோ, அவரை இங்கு அனுப்பியுள்ள ஆரிய மாடல் ஆட்களையோ துளியும் பாதிக்கவில்லை. ஒரு மாநில அரசால் நீட்டை ரத்து செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, அவை அனைத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் தி.மு.க. தலைவர், தமிழ்நாடு முதல் அமைச்சரின் அறிவுறுத்தலின்படி, நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மற்றும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட திமுக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில், நேற்று திருவள்ளூரில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்திற்கு முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர்கள் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ., டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார்கள். மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் மாநில மாணவர் அணி இணை செயலாளர் ஜெரால்டு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் திருத்தணி ம. கிரண், நடுகுத்தகை கே. சுரேஷ்குமார், கே.வி. லோகேஷ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர்கள் முரளி சோனா, வி.தியாகராஜ், வெற்றி (எ) ராஜேஷ் மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர்கள் ஜி.ராஜேஷ்குமார், ஏ.ஷாம் ஜெபராஜ், வில்சன் ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள்.

இந்த உண்ணாவிரத போராட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் லியோனி கலந்து கொண்டு உண்ணாவிரத போராட்டத்தை முடித்து வைத்து சிறப்புரை ஆற்றினார். இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி. ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி, நடுகுத்தகை ஜெ.ரமேஷ், எல்லாபுரம் ஜெ.மூர்த்தி, எழுத்தாளர் மதிமாறன்,

மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒ. ஏ.நாகலிங்கம், சி.எச். சேகர், கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், ஜி.ஸ்டாலின், அன்புவணன், மாவட்ட அவைத் தலைவர்கள் கே.திரவிடாபக்தன், ம. ராஜி, மு.பகலவன், மேற்கு மாவட்ட நிர்வாகிகள் டாக்டர் வி.சி.ஆர்.குமரன், உதயமலர்பாண்டியம், சி.ஜெயபாரதி, எம்.மிதுன் சக்ரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே. ஆதம், கே.என்.சுப்பிரமணி, மத்திய மாவட்ட நிர்வாகிகள் சி.ஜெ.சீனிவாசன், காயத்திரி ஸ்ரீதர், எஸ். ஜெயபாலன், ப. நரேஷ்குமார், தா.எத்திராஜ், ஜி. ராஜேந்திரன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர்,

கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மு.கதிரவன், எம். எல்.ரவி, எஸ்.ரமேஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் வெங்கடாசலபதி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், மேற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி. மோதிலால், டி.எம்.சுகுமார், டி.கே. பாபு, மா.புவ னேஸ்குமார், ஆர்.திலீபன்,

மத்திய மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, மாசெ.ராஜேஷ், பிரியா குமார்,

கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.மோகன் பாபு, எம்.முரளிதரன், டி. சங்கர், செ.யுவராஜ், இரா. கதிரவன்,

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.எம். லிங்கேஷ்குமார், கு.பிரபாகரன், ம.கோபிநாத், மு.எழிலசரன், சா. அர்ச்சனா சாந்தகுமார், ப.புருஷோத்த மன், விக்டர் மோகன், மு.சரத்குமார், டி.ஜெ.ஜி.தமிழரசன், தமிழமூகன், எஸ்.சேதுராமன், உ.விக்னேஷ், உள்பட மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர்கள் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதி கள் கழக நிர்வாகிகள் கல்லூரி மாணவர்கள் பள்ளி மாணவர்கள் பொதுமக்கள் என ஐந்தாயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள்.

நிறைவில் திருவள்ளூர் நகரக் கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க.சொ. கணேசன்

### ஆகஸ்ட் 22 (2005)



பள்ளிப்பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, ஜெயங்கொண்டம் பகுதியிலே கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவர் இவர்.

1967ஆம் ஆண்டு உடையார்பாளையம் வட்டக் கழகச் செயலாளராகவும், ஒன்றிய சீரணித் தலைவராகவும், 25 ஆண்டுகள் தொடர்ந்து ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

1964ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

1986ஆம் ஆண்டு தா.பழூர் ஒன்றியப் பெருந்தலைவராகவும், 1989 மற்றும் 1996 ஆகிய இருமுறை ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராகவும், பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

“களம் பல கண்டவனே, சிறை பல சென்றவனே, உளம் கவர் உரையாற்றிப் பேரவையில் வென்றவனே, குளம் என எமது கண்கள் நீர்நிறைய, கணப் பொழுதில் மறைய; மனம், ஏன் வந்ததோ? எப்படித்தான் வந்ததோ–” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## ‘நீட்’ தேர்வுக்கு விலக்கு பெறும்வரை

# கழகம் ஓயவே ஓயாது!


### அண்ணாநகர் ந.இராமலிங்கம் இல்ல மணவிழாவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஆக. 22-**

**“நீட்’ தேர்வுக்கு விலக்கு பெறும்வரை கழகம் ஓயவே ஓயாது” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்ணாநகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் ந.இராமலிங்கம் இல்ல மணவிழாவை நடத்தி வைத்து உரையாற்றும்போது உறுதிபடக் கூறினார்.**

நேற்று முன்தினம் (20.8.2023), சென்னை பெருநகர மாநகராட்சியின் ஆளுங்கட்சித் தலைவரும், அண்ணா நகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளருமான ந.இராமலிங்கம் இல்லத் திருமண விழாவில் கலந்துகொண்டு கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

இந்த மணவிழா நிகழ்ச்சிக்குத் தலைமை பொறுப்பை ஏற்று, மணவிழாவை நடத்தி வைத்து, அதேநேரத்தில் மணமக்களை வாழ்த்தும் இந்தச் சிறப்பான வாய்ப்பினை பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கும் நம்முடைய இராமலிங்கம் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (20.8.2023), சென்னையில் நடைபெற்ற பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி தலைவரும், அண்ணா நகர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளருமான ந.இராமலிங்கம் பெயர்த்தி டாக்டர் கோ.ஹேமலதா மற்றும் பகுதி கழக வர்த்தகர் அணி அமைப்பாளர் ந.வேல்முருகன் மகன் டாக்டர் வே.ராஜராஜன் ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் நே.சிற்றரசு மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

நடைபெற்று இருக்கும் இந்த திருமணத்தைப் பொறுத்தவரையில், இது ஒரு சீர்திருத்த திருமணமாக சுயமரியாதை உணர்வோடு நடைபெற்று இருக்கும் திருமணமாக நடந்தேறி இருக்கிறது. நான் வழக்கமாக இதுபோன்ற சீர்திருத்தத் திருமணங்களில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகிற நேரத்தில் வரலாற்றில் பதிவாகியிருக்கும் ஒரு செய்தியை தொடர்ந்து சொல்லி வருவது உண்டு. அதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் புரிந்துகொள்ள வேண்டும் மனதில் நிலை நிறுத்தி கொள்ள வேண்டும் என்பதற்காக அதை இங்கேயும் சொல்ல விரும்புகிறேன்.

இதுபோன்ற சீர்திருத்தத் திருமணங்கள் 1967க்கு முன்பு நடைபெற்றிருக்கும் என்று சொன்னால், அந்தத் திருமணங்கள் சட்டப்படி முறைப்படி செல்லுபடி ஆகும் என்கிற அங்கீகாரத்தை நாம் பெற்றிருக்கவில்லை. ஆனால் 1967ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தோம். ஆட்சியின் தலைவராக தமிழக முதல்வராக நம்மை ஆளாக்கிய நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பொறுப்பேற்றார்கள். பொறுப்பேற்ற முதலமைச்சர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்திற்குள் முதலமைச்சராக நுழைந்து, சட்டமன்றத்தில் கொண்டு வந்த முதல் தீர்மானம் எந்தத் தீர்மானம் என்று கேட்டால், சீர்த்திருத்தத் திருமணங்கள் அனைத்தும் சட்டப்படி செல்லுபடி ஆகும் என்கிற தீர்மானம்.

**சுயமரியாதை திருமணம்!**

எனவே இன்றைக்கு நடைபெற்றிருக்கும் இந்தச் சீர்திருத்தத் திருமணம் சட்டப்படி முறைப்படி செல்லுபடி ஆகும் என்கிற அங்கீகாரத்தோடு நடந்தேறியிருக்கிறது. இது சீர்த்திருத்தத் திருமணம் மட்டுமல்ல, சுயமரியாதை உணர்வோடு நடைபெற்று இருக்கும் திருமணம், அதையும் தாண்டி தமிழ்த் திருமணம். இந்தத் தமிழுக்கு பெருமை செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் செம்மொழி என்கிற அங்கீகாரத்தை நமக்குப் பெற்றுத் தந்தார்கள். எனவே அப்படிப்பட்ட பெருமைக்குரிய இந்தத் தமிழ்மொழியில் சுயமரியாதை உணர்வோடு இந்தச் சீர்த் திருத்தத் திருமணம் நடந்தேறி இருக்கிறது. இந்த திருமண விழாவில் உங்களோடு சேர்ந்து நானும் நம்முடைய மணமக்களை வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

**அண்ணாவிடம் பாராட்டுச் சான்றிதழ் பெற்ற இராமலிங்கம்!**

1965ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக அறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்தில் இருந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக இருப்பவர்தான் இராமலிங்கம் அவர்கள். 19 வயதில் தன்னை இந்த இயக்கத்தில் ஒப்படைத்துக் கொண்டு, ஒரு மன்றத்தின் செயலாளராக அதற்குப் பின்னால் தொண்டர் படையில் ஒரு பொறுப்பை ஏற்றுக் கொண்டு தன்னுடைய கடமையை நிறைவேற்றியவர் நம்முடைய இராமலிங்கம் அவர்கள்.

1967இல் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, இங்கிருக்கும் விருகம்பாக்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நான்காவது மாநில மாநாடு நடைபெற்ற நேரத்தில் தொண்டர் படையில் பொறுப்பேற்று பணியாற்றி, அதற்காக அண்ணாவின் கரத்தின் மூலமாகப் பாராட்டுச் சான்றிதழ் பெற்றவர் நம்முடைய இராமலிங்கம் அவர்கள். அதே விருகம்பாக்கம் மாநாட்டில், நம்முடைய அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் யார் யார் போட்டியிடப் போகிறார்கள் என்ற

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்

## ‘நீட்’ தேர்வு எதிர்ப்பு உண்ணாவிரத அறப்போர்! தமிழ்நாடு முழுவதும்

# பல லட்சக்கணக்கான இளைஞர்கள் பங்கேற்பு!

### சென்னையில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் தொடங்கி வைத்தார் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் ஆயிரக்கணக்கானோர் திரண்டனர்!

**சென்னை, ஆக. 22-**

**‘நீட்’டை திணிக்கும் ஒன்றிய அரசு - ஆளுநரைக் கண்டித்து இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நேற்று முன்தினம் (ஆக. 20) மாபெரும் உண்ணாவிரத அறப்போர் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது.**

**சென்னையில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்ற உண்ணாவிரத அறப் போராட்டத்தை கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் துவக்கி வைத்தார்.**

**இதேபோன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தில் அமைச்சர்கள், கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் என பல லட்சக்கணக்கானோர் கலந்துகொண்டு ஒன்றிய அரசுக்கு, ஆளுநருக்கு எதிராக முழக்கமிட்டனர்.**

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து - அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க்கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது.

**‘நீட்’ மரணங்களுக்கு ஒன்றிய அரசும் ‘நீட்’ காவலர் ஆளுநருமே காரணம்!**

மாணவர்களை மட்டுமன்றி, பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், பொறுப்பற்ற ஆளுநரையும் கண்டித்து, கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி சார்பில், தமிழ்நாடு முழுவதும், நேற்று முன்தினம் (ஆகஸ்ட் 20) அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் நடத்தவுள்ளோம் என்று இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி நிர்வாகிகள் அறிவித்திருந்தனர்.

மேலும் அந்த அறிக்கையில், அரியலூர் அனிதாவில் ஆரம்பித்த நீட் மரணம், குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் வரை தொடர்கிறது. செல்வசேகர் அவர்களின் திருவுடலுக்கு மரியாதை செய்யச் சென்றபோது, யாரை தேற்றுவது - யாருக்கு ஆறுதல் சொல்வதென்று கேட்கும் அளவுக்கு அங்கு எல்லோரும் சோகத்தில் உறைந்திருந்தார்கள். நமக்கே அங்கு ஆறுதல் தேவை என்ற நிலைதான் இருந்தது. இந்த மரணங்கள் அனைத்திற்கும், ஒன்றிய பா.ஜ.க. அரசும் - அவர்களுக்கு அடிமைச் சேவகம் செய்யும் அ.தி.மு.க.வினரும் - நீட் பாதுகாவலர் ஆளுநர் ரவியுமே காரணம். ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்கள் எண்ணத்தின் வெளிப்பாடாக நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் முயற்சிகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

ஆனால், அந்த நடவடிக்கைகளுக்கு எல்லாம் ஆளுநர் ரவி முட்டுக்கட்டை போட்டு வருகிறார். நம் மாணவச் செல்வங்களின் மரணம், ஆளுநரையோ, அவரை இங்கு அனுப்பியுள்ள ஆரிய மாடல் ஆட்களையோ துளியும் பாதிக்கவில்லை.

**‘நீட்’ தேர்வுக்கு பல லட்சம் செலவு செய்தவர்களும் அதை எதிர்க்கிறார்கள்!**

“நீட் மசோதாவில் கையெழுத்துப் போட மாட்டேன்” என்று கூறிய ஆளுநரிடம், சேலத்தைச் சேர்ந்த அம்மாசியப்பன் ராமசாமி நேருக்கு நேர் கேள்வி எழுப்பியபோது, அதற்குப் பதில் அளிக்க முடியாத ஆளுநர் அவரிடம் இருந்த மைக்கை பிடுங்கி உட்காரச் சொல்கிறார்.

இத்தனைக்கும் ஆளுநரிடம் கேள்வி எழுப்பிய அம்மாசியப்பன் ராமசாமி அவர்களின் மகள் நீட் தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். நீட் தேர்வில் வெற்றிபெற்றவர்கள், பயிற்சி மையம் சென்று லட்சங்கள் செலவு செய்து தேர்வில் வென்றவர்கள்கூட நீட்டை எதிர்க்கிறார்கள்.

நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்கு அனுப்பி வைத்த பிறகு, ஆளுநர் எப்படி அதில் கையெழுத்திட முடியும்?

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியின் போது, அம்மையார் ஜெயலலிதா ஆட்சியில் இருந்த போது வராத நீட், அடிமை அ.தி.மு.க. ஆட்சியின் போது தமிழ்நாட்டுக்குள் வந்தது.

நீட் விலக்கிற்காக 2017-ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசு நிறைவேற்றி அனுப்பிய சட்ட மசோதாவை, குடியரசுத்தலைவர் நிராகரித்ததை, 21மாதங்கள் வரை, தமிழ்நாடு சட்டப்பேரவைக்குத் தெரி விக்காமல் அ.தி.மு.க. அடிமைகள் மறைத்தனர். ஒன்றிய உள்துறை அமைச்சகம், சென்னை உயர் நீதிமன்றத்தில் கூறியபோது தான், அது தமிழ்நாட்டுக்கே தெரிய வந்தது.

இப்படிப்பட்ட துரோக வரலாற்றைக் கொண்ட எடப்பாடி பழனிசாமிக்கோ, பிற அ.தி.மு.க. அடிமைகளுக்கோ நம்மை விமர்சிக்க எந்த அருகதையும் இல்லை.

**‘நீட்’ தேர்வை தொடர்ந்து எதிர்க்கும் தி.மு.கழகம்!**

நீட் தேர்வுக்கு எதிராக, தமிழ்நாட்டில் தொடர்ச்சியாகக் குரல் எழுப்புகிற இயக்கமாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து வருகிறது. கழகத்தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தி.மு.கழக இளைஞர் அணி - மாணவர் அணி சார்பில் நீட் தேர்வுக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டன.

கல்வி என்பது பொதுப்பட்டியலில் உள்ளது. ஒரு மாநில அரசால் நீட்டை ரத்து செய்ய என்னென்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ, அவை அனைத்தையும், முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

மே 2021-ல் கழக அரசு ஆட்சிக்கு வந்தவுடனே, ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் தலைமையில் நீட் பாதகங்கள் குறித்து ஆராயச் சிறப்புக்குழு அமைக்கப்பட்டது.

**தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதா!**

இந்தக்குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில், கடந்த 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்கும் மசோதா தமிழ்நாடு சட்டமன்றத்தில் இயற்றப்பட்டது.

மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்தி வந்த ஆளுநரிடம், ஒப்புதல் வழங்கும்படி பல்வேறு தருணங்களில் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தி வந்தார்கள்.

நீட் தேர்வுக்கு விலக்கு கேட்க வேண்டும் என்றும், கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றக்கோரியும் அக்டோபர் 4, 2021 அன்று, 12 மாநில முதலமைச்சர்களுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்கள்.

கடந்த 2021-ஆம் ஆண்டு நவம்பர் 27-ஆம் தேதியன்று, முதலமைச்சர் அவர்கள் ஆளுநரை நேரில் சந்தித்து நீட் தேர்வுக்கு விலக்குக் கோரும் சட்டமன்ற மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கும்படி வலியுறுத்தினார்.

முதலமைச்சர் அவர்களின் தொடர் அழுத்தம் - பிற அரசியல் கட்சிகளின் அழுத்தம் - பொதுமக்கள் - மாணவர் இயக்கங்களின் போராட்டத்தின் காரணமாக 5 மாதங்களுக்குப் பிறகு பிப்ரவரி 2, 2022 அன்று நீட் விலக்கு மசோதாவினை ஆளுநர் ரவி சட்டப்பேரவைக்கே திருப்பி அனுப்பினார்.

மசோதாவை திருப்பி அனுப்பியது குறித்து, ஆலோசிப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் தலைமையில், பிப்ரவரி 5, 2022 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி மீண்டும் நீட் விலக்கு மசோதாவை நிறை வேற்ற முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் பிப்ரவரி 8, 2022 அன்று மீண்டும் நீட் விலக்கு மசோதா நிறைவேற்றப் பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இரண்டாவது முறையாக அனுப்பப்பட்ட நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வலியுறுத்தி, மார்ச் 15, 2022 அன்று முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு ஆளுநரை நேரில் சந்தித்து வலியுறுத்தினார்கள்.

**நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய ஆளுநர்!**

மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்காமல், மீண்டும் காலம் தாழ்த்தி வந்த ஆளுநரை ஏப்ரல் 22, 2022 அன்று அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, மா.சுப்பிர மணியன் அவர்கள், நேரில் சந்தித்து ஒப்புதல் வழங்க வலியுறுத்தினர். இதையடுத்து, நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்கு ஆளுநர் ரவி மே 5, 2022 அன்று அனுப்பி வைத்தார்.

இப்படி தமிழ்நாட்டுக்கு நீட் தேர்வில் இருந்து விலக்குப் பெற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் கழக அரசு ஒருபுறம் எடுத்து வருவதும், ஆளுநர் அதனைத் தடுத்து நிறுத்து வதும் தொடர்ந்து நடைபெறுகிறது.

நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு கூட்டத்தொட ரிலும், நீட் பிரச்சினையை நம் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பி வருகின்றனர். பிரதமர் அவர்கள் தமிழ்நாடு வருகிற போதும், முதலமைச்சர் அவர்கள் டெல்லி செல்கிற போதும், பிரதமரிடம் வைக்கப்படும் முதல் கோரிக்கையே நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு கோருவதுதான்.

கழக இளைஞர் அணி செயலாளர் அவர்கள், தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர், பிரதமர் மோடி அவர்களை டெல்லியில் பிப்ரவரி 28, 2023 அன்று சந்தித்தார்கள். அப்போதுகூட, பிரதமர் அவர்களிடம், நீட் ஒழிப்பைத்தான் வலியுறுத்தினார்கள்.

இப்படித் தமிழ்நாடு அரசு எத்தனை முறை கோரிக்கை வைத்தாலும் ஒன்றிய பா.ஜ.க. அரசு அதனைப் பொருட்படுத்துவதே கிடையாது.

**‘நீட்’ என்பது நிரந்தரம் அல்ல! முதல்வர் நிச்சயம் அதை ஒழிப்பார்!**

இந்த நேரத்தில் மாணவச் செல்வங்களுக்கு நாங்கள் சொல்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான், நீட் தேர்வு என்பது நிரந்தரம் கிடையாது.

முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் நீட் தேர்வை ஒழிப்பார்கள். அதற்கான காலம் வெகுதொலைவில் இல்லை. எனவே, மாணவச் செல்வங்கள் தன்னம்பிக்கையுடனும் - மன உறுதியுடனும் பொறுமை காத்திருக்க வேண்டுகிறோம் என்று தெரிவித்திருந்தனர்.

எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும், நீட் தேர்வு நடக்கும் என்ற எதேச்சதிகாரப் போக்கில் உள்ள ஒன்றிய அரசையும் - இல்லாத அதிகாரம் இருப்பதுபோல் மாளிகையில் கொக்கரிக்கும் ஆளுநரையும் கண்டித்து, இந்த மாபெரும் உண்ணாவிரதம் தமிழ்நாடெங்கும் நேற்று காலை நடைபெற்றது.

**தமிழ்நாடு - புதுச்சேரியில் உண்ணாவிரத அறப்போர்!**

இந்த உண்ணாவிரத அறப்போர் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி முழுவதும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. இதில் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தி.மு.க. மாவட்டச் செயலாளர் கள், மூத்த நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளை நிர்வாகிகள் கலந்து கொண் டுள்ளனர்.

இதேபோல், பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி உள்ளிட்ட அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டுள்ளனர்.

மாலை 5 மணி வரை நடைபெற்ற இந்த உண்ணா விரத அறப் போரில், அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாணவ, மாணவியர், அவர்களின் பெற்றோர், கல்வியாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் உள் ளிட்ட பல்வேறு தரப்பினர் பங்கேற்று தங்களது ஆதரவை தெரிவித்தனர்.

# கொள்கை வீரர் இராமலிங்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... 5-ஆம் பக்கத் தொடர்ச்சி

வேட்பாளர் பட்டியலை அறிவித்த நேரத்தில், கன்னியாகுமரியில் இருந்து தொடங்கி ஒவ்வொரு தொகுதியின் பெயரைச் சொல்லி அங்கே யார் யார் கழகத்தின் சார்பில் வேட்பாளராக நிற்கப் போகிறார்கள் என்று அறிவித்துக் கொண்டு வருகிறபோது, கடைசியாக சென்னையில் இருக்கும் தொகுதியின் வேட்பாளர் பெயர்களை எல்லாம் அறிவிக்கிறபோது சைதாப்பேட்டை என்று சொல்லுகிற போது அண்ணா அவர்கள் நம்முடைய தலைவர் கலைஞர் பெயரை சொல்லவில்லை. 'மிஸ்டர் 11 லட்சம்' என்று சொல்லி வேட்பாளரை அறிவித்தார்கள். இது வரலாறு.

**சைதை வேட்பாளர் மிஸ்டர் 11 லட்சம்!**

அதற்கு என்ன காரணம் என்று கேட்டீர்கள் என்றால், அந்தப் பொதுத் தேர்தலுக்காகத் தேர்தல் நிதி திரட்ட வேண்டும் என்று அண்ணா முடிவு செய்தபோது, அப்போது நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் கழகத்தின் பொருளாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். எவ்வளவு நிதி வேண்டும் என்று அண்ணாவிடத்தில் கலைஞர் கேட்டபோது, குறைந்தபட்சம் 10 லட்சம் ரூபாயாவது இருந்தால்தான் தேர்தலை சந்திக்க முடியும் என்று அண்ணா அவர்கள் சொன்னபோது, தட்டாமல் அதை ஏற்றுக்கொண்டு, அந்த பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லி, தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணத்தை நடத்தி. ஊர் ஊராகச் சென்று, கிராமம் கிராமமாகச் சென்று, பட்டி தொட்டிகள்தோறும் சென்று, கொடியேற்றி பொதுக்கூட்டம் பேசி, நாடகம் நடத்தி, கொடியேற்று விழா என்று சொன்னால் அதற்கென்று ஒரு குறிப்பிட்ட நிதி, பொதுக்கூட்டம் என்றால் அதற்கென்று குறிப்பிட்ட நிதி, நாடகத்திற்கு நிதி திரட்டி, யாருடைய வீட்டிற்காவது வந்து ஓய்வெடுக்க வேண்டும் என்றால், அங்கு சாப்பிட வேண்டும் என்றால், டீ சாப்பிட வேண்டும் என்றால், மதிய உணவு சாப்பிட வேண்டும் என்றால் என்று தனித் தனி நிதியை முடிவு செய்து ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம், நான்காயிரம், ஐயாயிரம் என்று நிதி திரட்டி அண்ணா சொன்னபடி 10 லட்சம் அல்ல, 11 லட்சத்தை அண்ணாவிடத்தில் கொடுத்தவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அதனால்தான் அண்ணா அவர்கள் வேட்பாளர் பட்டியலை அறிவிக்கிறபோது 'மிஸ்டர் 11 லட்சம்' என்று அறிவித்தார்கள்.

**தலைவர் கலைஞருக்கு பூத் ஏஜெண்ட்!**

எதற்காக சொல்கிறேன் என்று கேட்டீர்கள் என்றால், அந்த மிஸ்டர் 11 லட்சம் என்ற பட்டத்தை பெற்று, கலைஞர் வேட்பாளராக, சைதாப்பேட்டை தொகுதியில் நின்ற வேட்பாளருக்கு தேர்தல் வேலைகள் செய்தவர்களில் ஒருவர்தான் நம்முடைய இராமலிங்கம் அவர்கள். தேர்தல் வேலை மட்டும் அல்ல, பூத் ஏஜெண்ட் ஆகவும் இருந்திருக்கிறார்.

அதற்குப் பிறகு இந்த அண்ணா நகர் தொகுதியாக மாறியதற்குப் பிறகு கலைஞர் வேட்பாளராக நின்றார். அப்போதும் நம்முடைய இராமலிங்கம் அவர்கள் பணியாற்றிய அந்தக் காட்சிகளை எல்லாம் நானே நேரடியாக பார்த்திருக்கிறேன். இங்கு அண்ணன் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னாரே, இடைத்தேர்தல் வந்தபோது இந்த தொகுதியில் சோ.மா.ராமச்சந்திரன் அவர்கள் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு நின்றபோது, அப்போதும் எவ்வளவோ எதிர்ப்புகள், அப்போது ஆளுங்கட்சி அ.தி.மு.க., எம்.ஜி. ஆர். முதலமைச்சராக இருந்தார். பல்வேறு இடையூறுகள், பல்வேறு கலவரங்கள் அங்கங்கு நடந்து கொண்டிருக்கும். அப்போது துணிச்சலோடு எதிர்கொண்டு, சோ.மா. ராமச்சந்திரன் வெற்றிக்காக அவர் பணியாற்றிய விதத்தை எல்லாம் பார்த்து மகிழ்ச்சி அடைந்தவன் நான், பெருமைப்பட்டவன் நான்.

**கொள்கை வீரர் இராமலிங்கம்!**

இன்றைக்கு அதை நினைத்துப் பார்க்கிறேன். இப்படிப்பட்ட இராமலிங்கம் போன்ற தொண்டர்கள் இருக்கின்ற காரணத்தால்தான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் கம்பீரத்தோடு இருக்கிறது. ஆட்சிக்கு வருவது பெரிதல்ல, ஆனால் அதையும் தாண்டிக் கொள்கையோடு நிற்கிறோம் பாருங்கள் அதுதான் மிகவும் முக்கியம்.

இன்றைக்கு ஒரு பாசிச ஆட்சியாக ஒன்றியத்தில் ஆண்டுகொண்டிருக்கும் மோடி ஆட்சியை எதிர்க்கின்ற துணிச்சல் தி.மு.க.விற்கு இருக்கிறது என்று சொன்னால் இராமலிங்கம் போன்ற தொண்டர்கள் இந்த இயக்கத்திற்கு உழைத்துக் கொண்டிருக்கும் காரணத்தால்தான்.

எனவே அப்படிப்பட்ட இராமலிங்கம் அவர்கள், அவரே பேசுகிறபோது சொன்னார், கட்சியின் தலைமைக்கு கட்டுப்பட்டு, தலைவர் கலைஞர் அவர்கள் என்ன சொல்லுகிறாரோ, தலைமைக் கழகம் என்ன ஆணையிடுகிறதோ அதை அப்படியே ஏற்றுக்கொண்டு எந்தவித மறுப்பேதும் சொல்லாமல் தன்னால் இந்த இயக்கத்திற்கு என்ன லாபம், அந்த உணர்வோடு பணியாற்றி இருக்கும் ஒரு செயல்வீரராக நம்முடைய இராமலிங்கம் அவர்கள் இன்றைக்கும் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

தொடக்க காலத்தில் நான் சொன்னதுபோல, வட்டச் செயற்குழு உறுப்பினராக பகுதி கழகப் பிரதிநிதியாக மூன்று முறை ஒரு வட்டத்தின் செயலாளராக இருந்து பணியாற்றி, அதற்கு பின்னால் 2002இல் பகுதி செயலாளராக, தொடர்ந்து இப்போது நான்காவது முறையாக இருக்கிறார்.

இந்தக் கட்சியில் வட்டச் செயலாளராக இருப்பது என்பது சாதாரண விஷயம் அல்ல. உழைப்பவனைத்தான் கட்சி தேர்ந்தெடுக்கும், கட்சித் தொண்டர்கள் தேர்ந்தெடுப்பார்கள். அப்படிப்பட்ட நிலையில் நான்காவது முறையாகவும் தெற்கு பகுதி கழகத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவரே குறிப்பிட்டார், 1996ஆம் ஆண்டு நான் மேயர் போட்டிக்கு இந்தச் சென்னை மாநகராட்சியில் போட்டியிட்டபோது, எனக்காக என்னுடைய வெற்றிக்காக கழகத்தின் வெற்றிக்காகப் பணியாற்றிய வீரர் நம்முடைய இராமலிங்கம் அவர்கள். அவரும் மாநகராட்சி மன்ற உறுப்பினராக 1996 முதல் 2001 வரையில் நான் மேயராக இருந்தபோது அவரும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியிருக்கிறார்.

**மனதில் பட்டதை பட்டென்று சொல்லக் கூடியவர்!**

அதற்கு பின்னால் 2006இல் அவர் மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டபோது, ஆளுங்கட்சியின் தலைவராக இருந்து மாநகராட்சி மன்றத்தில் வழிநடத்தும் மேயருக்குத் துணைநிற்கும் வகையில் தன்னுடைய கடமையை நிறைவேற்றி, இப்போதும், அதனால்தான் சிற்றரசு அவர்கள் மாநகராட்சியை நாம் கைப்பற்றியபோது, அப்போது மாநகராட்சி மன்றத்தில் கட்சியின் நிர்வாகிகள் யார் யாரைத் தலைவராக பொருளாளராக துணைத் தலைவராக கொறடாவாக நியமிக்கலாம் என்று கேட்ட நேரத்தில், நான் பட்டென்று, இராமலிங்கம் அவர்கள் பெயரைத்தான் முதன் முதலில் சொன்னேன். அதற்குக் காரணம் அவருடைய பணிகளை நான் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருப்பவன். அதனால்தான் மனதில் பட்டதை அப்படியே பட்டென்று சொல்லி இன்றைக்கு அந்தப் பொறுப்பை ஏற்றுப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

> இரண்டாவது முறையாக அனுப்பி வைக்கப்பட்டதற்கு பிறகு, அது ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்போது அது ஜனாதிபதியிடம் இருக்கிறது. எனவே அதன்மீது முடிவு செய்ய வேண்டியது ஜனாதிபதிதான். ஒன்றிய அரசு அறிவுரையைப் பெற்று, ஆலோசனை பெற்ற பிறகு, ஜனாதிபதிதான் அதற்கு ஒப்புதல் தர வேண்டும். அளுநருக்கு எந்த பவரும் இல்லை. நாம் அனுப்பியதை அனுப்பி வைக்கும் வேலைதான் அவருக்கு.

எனவே அப்படிப்பட்ட ஒரு சிறந்த செயல்வீரரின் இல்லத்தில் நடைபெறும் இந்த திருமணம், இன்றைக்கு கூட உண்ணாவிரத அறப்போராட்டம் ஒன்று தமிழ்நாடு முழுவதும் நடந்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். பலபேர் அங்குப் போக முடியவில்லை என்ற வருத்தத்தோடு இருப்பதையும் நான் உணராமல் இல்லை. ஆனால் அழைப்பிதழில் போடப்பட்ட குறிப்பிட்ட சிலர் இங்கு வரவில்லை அதுவும் உங்களுக்கு தெரியும். எனவே எதுவாக இருந்தாலும் அதுவும் நமக்கு முக்கியமான பணி என்ற நிலையில்தான் அந்தத் தோழர்கள் சென்றிருக்கிறார்கள். வேறு ஒன்றும் இல்லை.

எனவே ஆளுங்கட்சியில் இருக்கும் நேரத்தில் இந்த அறப்போரை நடத்த வேண்டியது அவசியம் நமக்கு ஏன் ஏற்பட்டது, அதை நீங்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். எனவே இன்றைக்கு மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்கள் இரண்டு பேரும் மருத்துவர்கள். இவர்களெல்லாம் நீட் எழுதி பாஸ் செய்து மருத்துவர்களாக வந்து உட்காரவில்லை. அப்போதெல்லாம் நீட் கிடையாது. அதனால் ஏழை, எளிய, நடுத்தரக் குடும்பத்தில் பிறந்திருப்பவர்கள், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சார்ந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பெறும் மதிப்பெண்ணைப் பெற்று மருத்துவராக வரும் வாய்ப்பு இருந்தது. இப்போது நீட் எழுதினால்தான், அதிலிருந்து தேர்ச்சி பெற்றால்தான் மருத்துவராக வர முடியும் என்று நிலை இன்றைக்கு வந்திருக்கிறது.

தேர்தல் நேரத்தில் "நாம் ஆட்சிக்கு வருகிறபோது அது நிச்சயமாக நீட் விலக்கு மசோதாவை நிறைவேற்றுகிற முயற்சியில் நாம் முழுமையாக ஈடுபடுவோம். அதை எதிர்ப்போம். அதை ரத்து செய்வதற்கான எல்லா முயற்சிகளிலும் ஈடுபடுவோம்" என்று நாம் தெளிவாக எடுத்துச் சொன்னோம். அதற்குப் பிறகு வெற்றி பெற்று ஆட்சிக்கு வருகிறோம். ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு சட்டமன்றத்தில், தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும் நீட் விலக்கு வேண்டுகிறோம் என்று சொல்லி தீர்மானத்தை கொண்டு வருகிறோம். எல்லா கட்சிகளும் ஆதரித்தது. இன்றைக்கு எதிர்க்கட்சியாக இருக்கும் அ.தி.மு.க.கூட நாம் கொண்டு வந்த தீர்மானத்தை ஆதரித்து, அனுப்பி வைத்தோம். கவர்னரிடத்தில் இருந்தது. அதை அனுப்பாமல் அப்படியே ராஜ்பவனில் வைத்திருந்தார். அதற்கு பிறகு அதை கடுமையாக எதிர்த்தோம். அதை வலியுறுத்தினோம், வற்புறுத்தினோம்.

அதற்குப் பிறகு இரண்டாவது முறையாக அதை மீண்டும் சட்டமன்றத்திற்கு query போட்டு அனுப்புகிறார் இப்போது இருக்கும் கவர்னர். எனவே அந்த சந்தேகங்களுக்கு எல்லாம் விளக்கம் சொல்லி மீண்டும் அவருக்கு அனுப்பி வைக்கிறோம். இரண்டாவது முறையாக அனுப்பி வைக்கப்பட்டதற்கு பிறகு, அது ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இப்போது அது ஜனாதிபதியிடம் இருக்கிறது. எனவே அதன்மீது முடிவு செய்ய வேண்டியது ஜனாதிபதிதான். ஒன்றிய அரசு அறிவுரையைப் பெற்று, ஆலோசனை பெற்ற பிறகு, ஜனாதிபதிதான் அதற்கு ஒப்புதல் தர வேண்டும். அளுநருக்கு எந்த பவரும் இல்லை. நாம் அனுப்பியதை அனுப்பி வைக்கும் வேலைதான் அவருக்கு.

**ஆளுநரிடம் துணிச்சலாக கேள்வி எழுப்பிய தோழர்!**

ஆனால் திடீரென்று சில நாட்களுக்கு முன்பு, நீட்டில் தேர்வு பெற்ற மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் அழைத்து உட்கார வைத்து ஒரு கலந்துரையால் நடத்தி இருக்கிறார். அப்போது நடத்துகிற போது சேலம் உருக்காலையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஒரு தோழர், அவர் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அவருடைய மகள் அதில் தேர்வு பெற்று உள்ளார். ஒன்றிய அரசின் ஊழியராக இருப்பவர், அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துக்களை கேட்கிறபோது வெளிப்படையாக தைரியமாக, துணிச்ச லோடு எதைப் பற்றியும் கவலைப்படாமல் "என்னுடைய மகள் பாஸ் பண்ணி விட்டாள், எனக்கு வசதி இருந்தது அவள் பாஸ் செய்து விட்டாள். ஆனால் பல மாணவர்கள் அந்த நீட் தேர்வில் வெற்றி பெற முடியாத சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் நிலை எல்லாம் என்ன ஆகும். தயவு செய்து இந்த நீட்டிற்கு விலக்கு பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும்" என்று கவர்னரிடத்தில் கேட்டபோது, கொதித்து எழுந்துக் கோபம் அடைந்தவர் என்ன பேசியிருக்கிறார் தெரியுமா? "அது எல்லாம் முடியாது." அவருக்கு பவரே கிடையாது. ஆனால் இருந்தாலும் அவர் சொல்கிறார், "நான் அனுப்பி வைத்துவிட்டேன். இருந்தாலும், என்னிடத்தில் அது இருந்தால், நான் கொடுக்க மாட்டேன் அதை அனுமதிக்க மாட்டேன்" என்று வெளிப்படையாகச் சொன் னார் என்றால், இதை எல்லாம் கண்டித்துதான் அந்த நீட்டுக்கு முழு விலக்கு அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான், இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணை அமைப்புகளாக இருக்கும் இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவர் அணி இந்த மூன்று அணிகளும் சேர்ந்து தலைமைக் கழகத்தின் ஒப்புதலோடு, உண்ணா விரத அறப்போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே இந்த அறப்போராட்டம் தொடரும் நீட் விலக்கு பெறுகிற வரையில் நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகம் ஓயாது உறங்காது என்ற அந்த உறுதியை எடுத்துச் சொல்லி, அதே உணர்வோடு உங்களுடைய உணர்வும் இருக்கும் என்று கருதி, உங்களை எல்லாம் விரும்பி வேண்டி கேட்டுக் கொண்டு, இந்த இயக்கம் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களுக்காகப் பணியாற்றும் இயக்கம். தேர்தல் நேரத்தில் என்னென்ன உறுதிமொழிகளை வாக்குறுதிகளை எடுத்துச் சொல்லி இருக்கிறோமா, அந்த உறுதிமொழிகளை எல்லாம் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கும் திராவிட மாடலாக இந்த அரசு பீடுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. அப்படி பீடுநடை போட்டுக் கொண்டிருக்கும் இந்த திராவிட மாடல அரசிற்கு நீங்கள் என்றும் உறுதுணையாக இருக்க வேண்டும். எப்படி 2021இல் திமுக ஆட்சியை உருவாக்கி தமிழ்நாட்டில் ஒரு நல்ல நிலையை ஒரு விடியலை ஏற்படுத்தித் தந்திருக்கிறீர்களோ, அதே போல் 2024 நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில், இந்தியாவிற்கு ஒரு விடியலை நீங்கள் பெற்றுத் தர வேண்டும் என இந்த வேண்டுகோளை மாத்திரம் எடுத்து வைத்து, மணமக்கள் எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ வேண்டும்; புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லி இருக்கும் வீட்டுக்கு விளக்காய் நாட்டிற்கு தொண்டர்களாய் நீங்கள் வாழ வேண்டும் வாழ வேண்டும் வாழ்த்தி நம்முடைய இராமலிங்கம் போன்ற தொண்டர்களும் இயக்க தோழர்களும் இந்த இயக்கத்தில் இருக்கிறவரையில், இந்த இயக்கத்தை எந்தக் கொம்பனாலும் தொட்டுக் கூட பார்க்க முடியாது என்பதை மாத்திரம் எடுத்துச் சொல்லி, வாழ்க மணமக்கள்! வாழ்க மணமக்கள்! என்று கூறி வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசின் முறைகேடுகள் ஊழல் களை, இந்தியத் தலைமைக் கணக்காயர் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டி இருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; உண்மைதான். இந்தியாவின் தலைமைக் கணக்காயர் ( சி.ஏ.ஜி. = C.A.G.), ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஏழு வகையான ஊழல் முறைகேடுகளை எடுத்து விளக்கி இருக்கிறார். அவற்றின் மொத்த ஊழல் தொகை மட்டும் ஏழு லட்சத்து அய்ம்பதாயிரம் கோடி ரூபாய்! 'ஏ அப்பா!' என்று மலைப்பாக இருக்கிறதா?**

**இப்படி மலை அளவு முறைகேடுகளைச் செய்து, இந்திய மக்களின் செல்வத்தைச் சூறையாடி இருக்கிறார்கள் ஒன்றிய பா.ஜ.க.வினர்.**

**இந்த லட்சணத்தில் பிரதமர் மோடி, எதிர்க் கட்சிகள் மீது தாக்குதல் நடத்துவதாக நினைத்து, அடிக்கடி ஊழல் குறித்து உபன்யாசம் செய்கிறார்.**

**தலைமைக் கணக்காயர் சுட்டிக்காட்டியுள்ள ஊழல்கள் குறித்துப் பிரதமர் மோடி, இந்திய மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்துள்ளன.**

**நமது பிரதமருக்குப் பதில் சொல்லிப் பழக்கமில்லை. அதானி விவகாரம், மணிப்பூர் விவகாரம் போன்றவற்றுக்கெல்லாம், அனைவரும் மன்றாடிக் கேட்டும், ஜனநாயக ரீதியாகப் பிரதமர் பதில் சொல்ல வேண்டும் என்று கவலைப்பட்டாரா, என்ன ?**

**இந்த ஏழுவகை ஊழல்களுக்குப் பிரதமரின் பதிலை எதிர்பார்ப்பது, கருவாடு மீனாகும் என்று கருதி எதிர்பார்த்து ஏங்குவதைப் போன்றதாகும்.**

**பிரதமர் மோடி அவர்கள், ஒரு வழி ( One Way ) அரசியல் பாதையிலேதான் உற்சாகமாக நடைபோடுவார் !**

எஸ்.பாஸ்கரன் எம்.சி. தலைமை! அரிமா சு.சேகர் - பெ.மணிமாறன் முன்னிலை!

## 178-வது வார்டு அலுவலகம்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

### தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - மேயர் பிரியா - மு.மகேஷ்குமார் - இரா.துரைராஜ் பங்கேற்பு!

சென்னை, ஆக. 22 - வேளச்சேரி தொகுதி 178-வது வார்டு மாமன்ற உறுப்பினர் புதிய அலுவலகத்தினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் இன்று திறந்து வைத்தார்.

சென்னை தெற்கு மாவட்டம் வேளச்சேரி மேற்கு பகுதி 178 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் அங்கன்வாடி அலுவலகம் திறப்பு விழா நேற்று (21 - 8 - 2023 திங்கட்கிழமை ) மதியம் 12 மணி அளவில் தரமணி 100 அடி சாலை பாரதி நகரில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மாவட்டப் பொருளாளரும், மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி எஸ். பாஸ்கரன் தலைமை தாங்கினார். வட்டச்செயலாளர்கள் த. பார்த்திபன், கே.கோபி ஆகியோர் முன்னிலை வகித்தார்.

வேளச்சேரி மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் அரிமா சு.சேகர், கழக தேர்தல் பணிக் குழுச் செயலாளர் வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி. வே.ஆனந்தம் எம்.சி., மகேஷ்வரி முருகவேல் எம்.சி., கழக தாரமேஷ், சே.மைதிலி, நா. டில்லிகுமார், போ.தா. மதிவாணன், கா.பாரதிதாசன், கே.என்.தாமோதரன், ஜி.பி. எஸ். பாலசதீஷ், எஸ்.முருகவேல் ஆகியோர் வரவேற்றனர்.

மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் புதிய மாமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் அங்காடி அலுவலகத்தையும் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., அசன் மௌலானா எம்.எல்.ஏ., மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ் குமார், மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ், மூ.பாபு, கோ. மனோகரன், ஜி.வேதகிரி, பி.புஷ்பலதா, மா.காந்தி, ஆர்.சிவா, சி.சிவகுமார், என். சாம்குமார், ஸ்ரீ நரசிம்மன், கே. செந்தில்வேலன், எம்.கே. காமராஜ், மு.ரகுநாதன், இரா.தனசேகரன், ஜெ. ரேணுகா தேவி, டி.லட்சுமணன், இரா.தட்சிணாமூர்த்தி, எஸ். நித்தியபிரகாஷ், ஜெயராமன், பி.செந்தில்குமார், சீனிவாசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சி.சூர்யா மணிவண்ணன், ஏ.வி. ரங்கா ஆகியோர் நன்றி கூறினர்.




தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத்தலைவர் அவர்களின் ஆணைப்படி,மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழிகாட்டுதலுடன் தர்மபுரி மேற்கு மாவட்டம்,அனுமந்தபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் விலை இல்லா மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது.விழாவில் மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ஏ.வி.குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் துணை அமைப்பாளர் ஆர் மாதேஸ்வரன், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் பலராமன், முன்னாள் மாவட்ட கழக அவைத் தலைவர் எம் தனகோடி, பெற்றோர் ஆசிரியர் கழக துணை தலைவர் தருமன் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. மாநில கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

தி.மு.க. கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம், திருச்சி மாவட்டக் கழக அலுவலகமான "கலைஞர் அறிவாலயத்தில்" 24.8.2023 வியாழக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில், எனது தலைமையில், துணைத் தலைவர்கள் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம், செயலாளர்கள் மா.உமாபதி, அர.திருவிடம், இறையன்பன் குத்தூஸ், வண்ணை அரங்கநாதன், என்.தில்லைசெல்வம், துணைச் செயலாளர்கள் சி.வீரகணேசன், கவிஞர் நன்மாறன், எழில்மாறன், மீனா ஜெயக்குமார், சி.கோபி, ஜாகிர் உசேன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், தலைவர், துணைத் தலைவர் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்** : தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்கள் அறிவித்தபடி, தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி, தமிழ்நாடு முழுவதும் தலைவர் கலைஞர் அவர்கள் திரைக்கதை வசனம் எழுதிய திரைப்படங்களை மாவட்டந்தோறும் காட்சிப்படுத்துதல் மற்றும் கலைஞர் எழுதிய திரைப்பட வசனங்கள் மற்றும் கவிதை ஒப்பித்தல் போட்டிகள் நடத்துவது - குறித்து.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை

### சந்திரயான் 3: விக்ரம் லேண்டர்

## நிலவில் தரையிறங்கும் நேரத்தில் மாற்றம்!

பெங்களூரு, ஆக. 22 - விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கும் நேரம் மாற்றப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ அனுப்பிய சந்திரயான்3 வின்கலம் எல்விஎம் ஜிஎஸ்எல்வி மார்க்3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரி கோட்டாவில் இருந்து கடந்த ஜூலை 14ம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது.

நிலவின் சுற்று வட்டப் பாதையில் உள்ள சந்திரயான்3 விண்கலத்தில் இருந்து விக்ரம் லேண்டரை பிரிக்கும் முக்கியமான பணி கடந்த 17ஆம் தேதி மேற்கொள்ளப்பட்டது. விக்ரம் லேண்டர், விண்கலத்தில் இருந்து வெற்றிகரமாகப் பிரிந்த பிறகு, நிலவின் முதல் படங்களை பகிர்ந்தது. பின்னர் கடந்த 18ந்தேதி விண்கலத்தில் இருந்த பிரிந்த பிறகு லேண்டரின் சுற்று வட்டப் பாதை குறைக்கப்பட்டது.

பின்னர் இரண்டாவது முறையாக லேண்டரின் சுற்று வட்டப்பாதை இன்று அதிகாலை 2 மணியளவில் குறைக்கப்பட்டது. தற்போது நிலவிலிருந்து குறைந்த பட்சம் 25 கி.மீ., அதிகபட்சம் 134 கி.மீ. என்ற தொலைவில் லேண்டர் பயணித்து வருகிறது.

இந்த நிலையில் விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கும் நேரம் மாற்றப்பட்டுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. முன்னதாக ஆகஸ்ட் 23ம் தேதி மாலை 5.45 மணிக்கு தரையிறங்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது ஆகஸ்ட் 23ந்தேதி மாலை 6.04 மணிக்கு விக்ரம் லேண்டர் நிலவில் தரையிறங்கும் என்று அறிவிக்கப்பட்டு ள்ளது.



சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில், நேற்று முன்தினம் காலை, உண்ணாநிலை அறப்போரை கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் தொடங்கி வைத்து பேசியபோது எடுத்த படம். கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் மற்றும் முன்னணியினர் மேடையில் உள்ளனர்.



சென்னை – வள்ளுவர் கோட்டம் அருகில் நேற்று முன்தினம் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போரை, மாலையில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பழச்சாறு வழங்கி முடித்து வைத்தார். அதுபோது – இம்மாபெரும் அறப்போருக்குத் தலைமையேற்ற கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கி.வீரமணி அவர்கள் பொன்னாடை அணிவித்து வாழ்த்தினார். சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., மருத்துவ அணித் தலைவர் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

### ‘நீட்’ தேர்வை நமது முதல்வர் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருக்கிறார்!

# ‘நீட்’ தேர்வு விலக்கு எனும் இலக்கை தமிழ்நாடு நிச்சயம் அடைந்தே தீரும்!

## நெல்லை உண்ணாநிலை அறப்போரில் - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சூளுரை!

**நெல்லை, ஆக.22-**

**நீட் தேர்வு விலக்கு, எனும் இலக்கை தமிழ்நாடு நிச்சயம் அடைந்தே தீரும்: என திருநெல்வேலியில் நடைபெற்ற உண்ணாநிலை அறப்போரில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்பி. கண்டன உரையாற்றினார்.**

அதன் விவரம் வருமாறு:

மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைக்கும் நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து தி.மு.க. இளைஞரணி, மாணவரணி மற்றும் மருத்துவ அணி சார்பில் மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் உண்ணாவிரத போராட்டம் நேற்று (ஆகஸ்டு 20 ஆம் தேதி) நடைபெற்றது.

இந்நிலையில், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கண்டன உரையாற்றினார்.

அப்போது அவர் குறிப்பிட்டதாவது :

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நாம் மறுபடியும் கையிலெடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, சமீபத்திலே நீட் தேர்வில் வெற்றி பெற இயலாத காரணத்தால் தன் உயிரை மாய்த்துக் கொண்ட மாணவன், இதைத் தாங்க முடியாமல் அந்த மாணவனின் தந்தையாரும் தன் உயிரை மாய்த்துக் கொண்ட நிலையை நாம் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதுபோன்ற துயரச் சம்பவங்கள், துக்கச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் அதுபற்றியெல்லாம் கவலைப்படாமல்... இந்த மாநிலத்துக்கென்று ஓர் ஆளுநர் இருக்கிறார். அவர் இந்த மனிதர்களின் வருத்தத்தை, கவலையை, இயலாமையை, துக்கத்தை, துன்பத்தை எதைப் பற்றியும் பொருட்படுத்தாமல், நீட் தேர்வு விலக்கு மசோதாவுக்கு நான் என்றைக்குமே கையெழுத்து போட மாட்டேன் என்று, ஏதோ அந்த மசோதா இவர் கையில் இருப்பது போல பேசியிருக்கிறார்.

அது இவர் கையிலேயே இல்லாத ஒன்று. குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டிருக்க கூடிய ஒன்றை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று ஒரு மாணவரின் தந்தை கேட்ட கேள்விக்கு அவ்வளவு திமிரோடு பதில் சொல்கிறார். இப்படிப்பட்ட எண்ணத்திலே இருக்கக் கூடியவர்கள்தான் இன்று இந்த நாட்டை ஆட்சி செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் மறுபடியும் மறுபடியும் சொல்வது நீட் என்பது எல்லாருக்கும் நியாயமான தேர்வாக அமையப் போகிறது என்றும், எல்லாருக்கும் வாய்ப்பளிக்கக் கூடிய, திறமைக்கு மட்டுமே மதிப்பளிக்கக் கூடிய தேர்வுதான் நீட் என்றும், அதை எழுதிவிட்டு வந்தால் யார் யாருக்கு தகுதி இருக்கிறதோ அவர்கள்தான் படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரு எண்ணத்தை மறுபடியும் மறுபடியும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**பா.ஜ.க. ஆட்சியின் பொய்கள்!**

இந்த பா.ஜ.க. ஆட்சி ஒன்றே ஒன்றைதான் சொல்லுவார்கள். தெளிவாக திரும்பத் திரும்பத் திரும்ப பொய்யை மக்கள் நம்பக் கூடிய அளவிலே அவர்கள் காதில் திணிப்பார்கள். அந்த பொய்களில் ஒன்றுதான் நீட் நியாயமானது என்பதும்.

தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டோமென்றால் தமிழ்நாட்டிலே நம்முடைய தலைவர் கலைஞர் எல்லா மாணவர்களுக்கும் மருத்துவராக வேண்டும் என்ற ஆசையும் தகுதியும் இருந்தால் அவர்கள் மருத்துவர் ஆக வேண்டும் என்பதற்காகத்தான்....ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரிகளை உருவாக்க வேண்டும் என்று செயலாற்றினார். இன்று இந்தியாவிலேயே அதிக மருத்துவக் கல்லூரிகள் இருப்பது தமிழ்நாட்டில்.

முதன் முதலாக நீட் தேர்வு கொண்டுவரப்பட்ட போது நான் வடக்கில் இருந்த ஒரு முதலமைச்சரிடம் பேசிக் கொண்டிருந்த போது கேட்டேன். ‘நீட்டை எதிர்க்கலையா?’ என்று கேட்டேன். ‘இல்லை எதிர்க்கவில்லை’ என்று சொன்னார். சமூக நீதியின் மீது அக்கறை கொண்ட முதலமைச்சரான அவரிடம், ‘ஏன் நீங்க எதிர்க்கலை?’ என்று நான் திரும்பவும் கேட்டபோது... ‘எங்களுக்கு அரசு மருத்துவக் கல்லூரியே இல்லை. அதனால எங்களுக்கு அது நல்லதுதான்.

வேறு மாநிலத்துக்கு போய் மருத்துவம் படிக்கக் கூடிய வாய்ப்பு எங்கள் பிள்ளைகளுக்கு கிடைக்கும். தமிழ்நாட்டில் நீங்கள் எதிர்க்க வேண்டும், ஏனென்றால் உங்களுக்கு அரசு மருத்துவக் கல்லூரிகள் இருக்கிறது. உங்கள் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள்’ என்றார்.

நம்முடைய தலைவர் கலைஞர் நம்முடைய வரிப் பணத்தில் நம்முடைய பிள்ளைகளுக்காக நம்முடைய ஒடுக்கப்பட்ட வாய்ப்பு வசதியற்ற பிள்ளைகளுக்காக உருவாக்கியதுதான் மருத்துவக் கல்லூரிகள். இதில் நம் பிள்ளைகளுக்கு வாய்ப்பில்லை என்ற நிலையை உருவாக்குவதுதான் இந்த நீட். நீட் தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கவுன்சிலிங் வழியாக வாய்ப்பு கிடைக்கிறது. போதிய மதிப்பெண் பெறாதவர்களுக்கு என்ன நடக்கிறது? அவர்கள் படிக்க முடிவதில்லை. ஆனால் வசதியான குடும்பத்திலே பிறந்து மாதம் பத்துலட்சமோ ஆண்டுக்கு ஒரு கோடி வரையோ கட்டக் கூடிய வசதி இருக்கக் கூடிய பிள்ளைகள் நீட்டில் பெரிதாக மார்க் எடுக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு மருத்துவக் கல்லூரியிலே வாய்ப்பு கிடைத்துவிடும்.

இதிலிருந்து இந்த பி.ஜே.பி. ஆட்சி என்ன சொல்ல வருகிறது என்றால்... வசதி இல்லையென்றால் மருத்துவக் கல்வி வாய்ப்பு மறுக்கப்படும். பணம் இருந்தால்தான் டாக்டருக்கு படிக்கலாம் என்பதுதான். ஏனென்றால் அவர்கள் நடத்துவது கார்ப்பரேட் கம்பெனி. பி.ஜே.பி. ஆட்சி நடத்தவில்லை. கார்ப்பரேட்டுகளுக்கான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால் பணம் இருந்தால் நீ மருத்துவம் படிக்கலாம், எங்களுடைய சி.பி.எஸ்.சி.யில் படித்துவிட்டு வரக் கூடிய பிள்ளைகள்தான் பாஸ் பண்ண முடியும் என்கிற நிலையை உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள்.

நீங்கள் கேட்கலாம், ‘நிறைய பிள்ளைகள் நீட் பாஸ் பண்றாங்களே?’ என்று. தமிழனால் முடியாதது எதுவும் இல்லை. நீ என்ன தேர்வு வைத்தாலும் எங்களால் வெற்றி பெற்று காட்ட முடியும். ஆனால் அதில் நியாயம் இருக்க வேண்டும், நேர்மை இருக்க வேண்டும்.

**அராஜகம் - அநீதி!**

எங்களுக்காக உருவாக்கப்பட்ட மருத்துவக் கல்லூரிகளிலே எங்கள் பிள்ளைகள் படிக்க முடியாத நிலை. எங்களுடைய மாணவர்கள் தற்கொலை செய்துகொள்கிறார்கள் என்றால் அதில் இருக்கும் அராஜகத்தை, அநீதியை எதிர்த்து மனமொடிந்து தற்கொலை செய்துகொள்கிறார்கள். அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எனக்கு படிக்க திறமை இருக்கிறது. ஆனால் அப்படி இருந்தும் நான் அமுக்கப்படுகிறேன், அழுத்தப்படுகிறேன், ஒடுக்கப்படுகிறேன் என்று அந்த பிள்ளைகள் நினைக்கும்போது... அநீதி இழைக்கப்படும்போது அநியாயம் இழைக்கப்படும்போது அந்த பிள்ளைகள் மனமொடிந்து தங்கள் வாழ்க்கையையே முடித்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

அதனால் இந்த நீட் என்பது யாருக்கும் எந்த விதத்திலும் நியாயம் செய்யக் கூடிய ஒன்று இல்லை. இதில் நேர்மை இல்லை, சமூக நீதி இல்லை. நம்முடைய வாய்ப்புகளை தட்டிப் பறிக்கக் கூடிய ஒன்று. வசதிகள் இருக்கக் கூடியவர்களுக்கு மட்டுமே வாய்ப்புகளை உருவாக்கித் தரக் கூடியதுதான் நீட்.

நீட் தேர்வை, தொடர்ந்து நமது முதலமைச்சர் எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். வழக்கு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு தான் அடைய நினைக்கக் கூடிய இலக்கை ஒரு நாள் அடைந்தே தீரும். அதுவரை தொடர்ந்து போராடிக் கொண்டிருப்போம்”.

இவ்வாறு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.

உடன், வனத்துறை அமைச்சர் மதிவேந்தன், மாவட்டச் செயலாளர்கள் இரா.ஆவுடையப்பன், டி.எம்.மைதீன்கான், சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வஹாப், மாநகராட்சி மேயர் சரவணன், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் அதலை செந்தில், கழக மகளிரணி துணைச் செயலாளர் விஜிலா சத்தியானந்த் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.



### தமிழ்நாடு முழுவதும் உண்ணாநிலை அறப்போராட்டம் வெற்றி!

### ‘இண்டியா’ கூட்டணி வெற்றிபெற்றால்

# ‘நீட்’ தேர்வு நிச்சயம் தமிழ்நாட்டில் இருக்காது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஆக.22-

“I.N.D.I.A. - கூட்டணி வெற்றி பெற்றால், ‘நீட்’ தேர்வு நிச்சயம் தமிழ்நாட்டில் இருக்காது! இதனைத் தேர்தல் வாக்குறுதியாகவே அளிக்க வைப்போம்!” என்று, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர்மு.க.ஸ்டாலின்அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**நீட் தேர்வு ரத்து போராட்டம் என்பது தி.மு.க.வின் போராட்டமோ, அரசியல் கோரிக்கையோ அல்ல! சமூகச் சமத்துவக் கல்வியை விரும்பும் அனைவரது கோரிக்கை! ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கை!**

**தமிழ்நாடு முழுவதும் உண்ணாநிலை அறப்போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. கலந்து கொண்ட அனைவர்க்கும் வாழ்த்துகள்!**

**INDIA கூட்டணி வெற்றி பெற்றால், நீட் தேர்வு (NEET) நிச்சயம் தமிழ்நாட்டில் இருக்காது. இதனைத் தேர்தல் வாக்குறுதியாகவே அளிக்க வைப்போம்.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் ஊராட்சி செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எம்.எம்.மதுரா செந்தில் பங்கேற்பு!

நாமக்கல், ஆக. 22 -

நாமக்கல் மேற்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமங்களின் படியும், கழகத் தலைவர் அவர்களின் ஆணைபடியும் பரமத்தி வேலூர், குமாரபாளையம், திருச்செங்கோடு ஆகிய மூன்று சட்டமன்ற தொகுகளுக்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் , ஊராட்சி செயல்வீரர் கூட்டம் நடத்திட வேண்டும் என்ற நோக்கில் முதற்கட்டமாக மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் பாலமேடு, மொரங்கம், முஞ்சனூர் ஆகிய ஊராட்சிகளில் 18.08.2023 அன்று ஒன்றிய கழக செயலாளர் K.பழனிவேல் தலைமையில் கழகத்தின் உயிர்நாடியான கிளைகழகம், பாக முகவர்கள் சந்திக்கும் தி.மு.க. ஊராட்சி_செயல் வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கலந்து கொண்டு, நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் இந்திய இறையாண்மைக்கு எதிராக செயல்படும் பாசிச பா.ஜ.க.வின் பொய் பிரச்சாரத்தை முறியடித்து நமது கழகத் தலைவர் முன்னிலை வகிக்கும் I.N.D.I.A கூட்டணியை வெற்றியடைய செய்ய வேண்டும் எனவும், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை அனைத்து கிளைகளிலும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கால திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை பட்டி தொட்டி எங்கும் கொண்டு செல்ல பெண்ணைப் பிரச்சாரம் செய்திட வேண்டும், மாதம் ஒரு முறை கிளைக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் கூட்டத்தை நடத்திட வேண்டும் என கிளை நிர்வாகிகள், பாக முகவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் மகளிர் அணி உள்ளிட்ட சார்பு அணி நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், கிளை நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டது. இக்கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் எஸ் ஆர் திருநாவுக்கரசு, ஒன்றிய அவைத் தலைவர் சுந்தரம், ஒன்றிய பொருளாளர் எம்.சத்தியமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் மயில்சாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஆர்.கௌதம், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.கருணாகரன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் சாதிக் பாட்ஷா, மாவட்ட தொண்டர் அணி தலைவர் ஏ.மனோகரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மல்லை ஜி.ஜெகதீஷ்குமார், கார்த்தி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர்கள் கணேசன், பிரமராஜ், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் இளங்கார்வண்ணன் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பால சுப்ரமணியன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பரசுராமன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் பிரபு, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் மகேந்திரன் மருத்துவர் அணி தொகுதி அமைப்பாளர் பிரசாந்த், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் அருள்செல்வி, ஊராட்சி மன்ற தலைவர் சுமதி சுப்பிரமணியம் மற்றும் கழக தோழர்கள், பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின்செயலாளர் (நினைவில் வாழும்) கோ.சண்முகநாதன் அவர்களின் தம்பி கோ.கருணாநிதியின் மகள் வழிப் பேத்தி சந்தான ஷிவானி – பரசுராமன் திருமண நிகழ்ச்சி நேற்று முன்தினம் (20.08.23) மதுரையில் நடைபெற்றது. மணவிழாவில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். சண்முகநாதன் அவர்களின் மைத்துனரும் தமிழ் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தருமான முனைவர் ம.ராஜேந்திரன் உடன் இருந்தார்.



காஞ்சிபுரம் மாநகரத்தில் அமைச்சர் தா.மோ. அன்பரசனின் உதவியாளர் – முரசொலி மூத்த நிருபர் காஞ்சி கே.சம்பத் இல்ல திருமண விழாவில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மணமக்களை வாழ்த்தினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், பி.சேகர், டி.குமார், ஜி.தம்பு, வாலாஜாபாத் என்.சச்சிதாஸ் உள்ளிட்ட பகுதி செயலாளர், மாநகர நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.


சிவமீனா அசோசியேட்ஸ்
A.K.S. முருகன் B.A., இல்ல புதுமனை புகுவிழா
நாள்: 23.08.2023 புதன்கிழமை காலை 11.00 மணி
இடம்: எண். 5 அட்டைக்குளம், வடக்கு ரோடு, நாகப்பட்டினம்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன்
கழகத் தலைவர் - எங்கள் குடும்பத் தலைவர் - மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்
திருமிகு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
திருமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
நல்வாழ்த்துகளுடன்
A.K.S. MURUGAN CASTLE
புதுமனை புகுவிழா நடைபெற உள்ளது. விழாவில் பங்கேற்றிடும் மாவட்டச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரையும் வருக! வருக!! என வரவேற்கிறோம்
A.K.S.முருகன் B.A. - A.K.S.நாகராஜன்
நாகை மாவட்டம்



கலைஞர் 100
1924 - 2023
முத்தமிழறிஞர்
கலைஞர்
நூற்றாண்டு கொடியேற்று விழா
மற்றும் கலைஞர் ஆய்வரங்கம்
நாள் : 22.8.2023 - செவ்வாய்க்கிழமை, நேரம் : மாலை 5 மணி
இடம் : RSV திருமண மண்டபம் , OFT வளைவு அருகில்- குண்டூர்
அண்ணா அறிவாலயம்
SRI ARTS
முன்னிலை
மாண்புமிகு. கே.என்.நேரு அவர்கள்
கழக முதன்மைச் செயலாளர்,நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
கழக இருவண்ண கொடியேற்றி கலைஞர் ஆய்வரங்கத்தைத் தொடங்கி வைப்பவர்
திருமிகு. T.R.பாலு M.P.,அவர்கள்
கழகப்பொருளாளர், நாடாளுமன்ற குழு தலைவர்
கலைஞர் ஆய்வரங்க உரையாளர்கள்
திரு. சுப.வீரபாண்டியன் அவர்கள்
பொதுச்செயலாளர் - திராவிட இயக்கத் தமிழர் பேரவை
திரு. ஆளூர் ஷா நவாஸ் MLA.,அவர்கள்
துணை பொதுச்செயலாளர் - விடுதலை சிறுத்தைகள் கட்சி
வருக...வருக...வருக...
அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA.,
மாவட்டக் கழகச் செயலாளர்-பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
திருச்சி தெற்கு மாவட்டம்


கலைஞர் 100
1924 - 2023
தமிழ்நாட்டின் மீனவ பெருங்குடி மக்களின் நல்வாழ்விற்காக
மீனவர் மாநாட்டில்
மாண்புமிகு முதல்வர்
வெளியிட்ட முத்தான அறிவிப்புகள்
❖ மீன் பிடி தடைக்கால நிவாரண தொகை 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்துதல்.
❖ 60 வயதுக்கு மேற்பட்ட மீனவர்கள் 15 ஆயிரம் பேருக்கு மீன் பிடி தடைக்காலத்தில் நிவாரணத் தொகை வழங்குதல்.
❖ பதிவு செய்யப்பட்ட நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கு தற்போது மானிய விலையில் வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் அளவானது 3400 லிட்டரிலிருந்து 3700 லிட்டராக உயர்த்துதல்.
❖ விசைப்படகு மீனவர்களுக்கு மானிய விலையில் வழங்கப்படும் டீசல் எண்ணெய் 18 ஆயிரம் லிட்டரிலிருந்து 19 ஆயிரம் லிட்டராகவும், இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப் படகு மீனவர்களுக்கு 4 ஆயிரம் லிட்டரிலிருந்து 4 ஆயிரத்து 400 லிட்டராகவும் உயர்த்துதல்.
❖ 45 ஆயிரம் மீனவர்களுக்கு மீன்பிடி தொழிலுக்கான கூட்டுறவுக் கடன் வழங்குதல்.
❖ 1000 நாட்டுப் படகு மீனவர்களுக்கு, 40 விழுக்காடு மான்யத்தில் இயந்திரங்கள் வழங்குதல்.
தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள சுனாமி குடியிருப்பு, சிங்காரவேலர் குடியிருப்பு உள்ளிட்ட 1000 மீனவர்களின் வீடுகளுக்கு பட்டா வழங்கிய
மீனவர்களின் பாதுகாவலர்,
திராவிட மாடல் நல்லாட்சியின் நாயகர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களுக்கு
நன்றி! நன்றி! நன்றி!
Pride Of
"I.N.D.I.A"
அன்புடன்: பி.கீதாஜீவன் எம்.காம்.,பி.எட்.,
சமூக நலன் - மகளிர் உரிமை துறை அமைச்சர் - தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க



பெரம்பலூர் மாவட்டத்தில், ஒன்றிய அரசையும், தமிழக கவர்னரையும் கண்டித்து நடைபெற்ற உண்ணாவிரதத்தில் தி.மு.க.துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., கலந்து கொண்டு, காட்டாட்சி, தர்பார் ஆட்சி நடத்தும் மோடி, அமித்ஷா கும்பலை வருகிற 2024நடாளுமன்ற தேர்தலில் விரட்டியடிப்போம் என்றும் புதிய பிரதமரை தேர்வு செய்யும் இடத்தில் தி.மு.க.இருக்கும் அப்போது நீட் ஒழிக்கப்படும் என்றும் கூறி, பழச்சாறு வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் உள்ளிட்ட2 ஆயிரம் பேர் பங்கேற்றனர்!



கழக தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆனைக்கினங்க, கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, ”நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசு ஆளுநரைக் கண்டித்து கழக இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி சார்பில் அரியலூர் அண்ணா சிலை அருகில் கழக துணை அமைப்புச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம். கவி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். உடன் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மற்றும் மாநில,மாவட்ட, ஒன்றிய, நகர பேரூர் கழக செயலாளர்கள், இளைஞர் அணி, மாணவரணி, மருத்துவரணி,நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வரும்

# முதலீட்டாளர்களின் தேவையை உடனுக்குடன் நிறைவேற்றித் தருகிறார் முதல்வர்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தகவல்!

திண்டிவனம் 22 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் பாங்கொளத்தூர் பச்சைவாழியம்மன் கோவில் வளாகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்குஒன்றிய அவைத் தலைவர் புருஷோத்தமன் தலைமை தாங்கினார். ஒன்றிய துணைச் செயலாளர்கள் முத்துகிருஷ்ணன் ,தண்டபாணி, தேன்மொழி, ஒன்றிய பொருளாளர் ஜனார்த்தனன், மாவட்ட பிரதிநிதிகள் ரவி, தீர்த்தமலை, ராஜாராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும் ஒன்றிய பெருந்தலைவர் பாங்கை சொக்கலிங்கம் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டுகழக மூத்த முன்னோடிகள், தி.மு.க. நிர்வாகிகள், பொதுமக்கள் என ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி



சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர்செஞ்சி மஸ்தான்:

தமிழ்நாட்டின் முதலமைச்சர்பல்வேறு நாடுகளுக்கு சென்று வெளிநாட்டவர்களை சந்தித்து முதல்முறையாக ரூ.16,000 கோடியும்,இரண்டாவது முறையாக 30.000 கோடி ரூபாய் பெற்று தமிழகத்தில் புதிய தொழில் பேட்டை நிறுவுவதற்கு அடித்தளமிட்டுள்ளார்.

ஆனால் பிரதமர் மோடி வெளிநாடு செல்கிறார் வெளிநாட்டில் உள்ள முதலீட்டாளர்களை இந்தியாவிற்கு அழைத்து வந்து இந்தியாவின் உள்ள பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான உங்களுடைய முயற்சி என்ன என்று கேள்வி எழுப்பிய அமைச்சர் செஞ்சி மஸ்தான் இந்தியாவில் உள்ள 2 லட்சம் பேர் முதலீட்டாளர்கள் தொழில் செய்தவர்கள் பத்தாண்டு காலத்தில்வெளிநாடு சென்றுள்ளதாக புள்ளிவிபரம் தெரிவித்துள்ளதாகவும் வெளிநாட்டில் இருக்கும்முதலீட்டாளர்களை அழைத்து வந்து தமிழகத்தின் வளர்ச்சிக்காக பாடுபடுகின்ற நம்முடைய முதலமைச்சர் எங்கே ஆனால் இந்தியாவில் இருக்கின்ற பொருளாதாரத்தை வளர்த்து சிறுசிறு தொழில் செய்த முதலீட்டாளர்கள் 2 லட்சம் பேர் 9 ஆண்டு காலத்தில் இந்தியாவை விட்டு வெளிநாடு சென்றுள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

தமிழ்நாட்டில் முதலமைச்சர் சொன்ன வாக்குறுதிகளை அனைத்தையும் படிப்படியாக நிறைவேற்றி வருகிறார்.

இந்தியாவின் பொருளாதாரம் உயரும் என்றுபிரதமர் மோடி கூறினார் ஆனால் உயரவில்லை ஒட்டுமொத்தமாக இந்தியாவின் பொருளாதாரத்தை ஒரு குறிப்பிட்ட கும்பலிடம்அடகு வைத்துள்ளதாகவும், அதனால்தான் பொருளாதாரத்தில் வளர்ந்தவர்கள்முதலீட்டாளர்கள் உங்களை நம்பி இந்தியாவிற்கு வருவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்,

ஆனால் தமிழகத்திற்கு முதலீட்டாளர்கள் வருகின்றனர் அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளை முதலமைச்சர் உடனுக்குடன் நிறைவேற்றி கொடுக்கின்றார்

2014இல் இந்தியாவின் கடன் தொகை 56 லட்சம் கோடி இருந்ததை தற்போது 130 லட்சம் கோடியாகவும், சர்வதேச பட்டியலில் ஊட்டச்சத்து குறைபாட்டில் இந்தியா 120 வது இடத்தில் உள்ளதாகவும்,அமைச்சர் செஞ்சிமஸ்தான் ஒன்றிய அரசை சாடினார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன் தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய துணை சேர்மன் ராஜா ராமன், அணி அமைப்பாளர்கள் ராஜசக்தி, காமராஜ், சேகர், ரவிச்சந்திரன், ஏழுமலை ,புரட்சிதாசன், மங்கவர்த்தாள், பாலாஜி, பிரகாஷ், மருதமலை, தாமோதரன், அருள், சண்முகம், சங்கர், வேலாயுதம், சிகாமணி, புகன்ராஜ் ,சுப்பிரமணி, முருகதாஸ், மாரியம்மாள், நிர்மலா, மதுசூதனன், விஜயராகவன், கழக மூத்த முன்னோடிகள் ஜெயபால், பெருமாள், கண்ணப்பன் ,ஆறுமுகம், ராஜா கண்ணு, முத்துகிருஷ்ணன் ,சிகாமணி, சின்னத் தம்பி, புருஷோத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில் முருகன் நன்றி கூறினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சியும், அரசியல் மாமேதையுமான முரசொலி மாறன் அவர்களின் 90வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் முரசொலி மாறன் திருவுருவப் படத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மாநில, மாவட்ட , நகர, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்



கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தி.மு.க.,வின் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணிகளின் சார்பில் புதுக்கோட்டை திலகர் திடலில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். இந்நிகழ்வுகளில் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், எம்.எம்.அப்துல்லா எம்.பி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், சுப.சரவணன், மிசா ராமநாதன், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, கே.ஆர்.என்.போஸ், கீரை, தமிழ் ராஜா, இரா.ஆனந்த், எஸ்.ஜெயராமன், அரு.வீரமணி, க.மதியழகன், எஸ்.எஸ்.கருப்பையா, ஞான.இளங்கோவன், ஸ்ரீ தேவி அண்ணாத்துரை, எம்.லியாகத் அலி, ஆ.செந்தில், சு.சண்முகம், த.மணிராஜன் , கே.எஸ்.ச இளையச்சூரியன், கலைச்செல்வன், டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், டாக்டர் சுதர்சன், டாக்டர் அமானுல்லா, டாக்டர் சதீஷ் மற்றும் மாவட்ட மாநில, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட – கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டக் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நீட்டை திணிக்கும் ஒன்றிய அரசு, ஆளுநரைக் கண்டித்து நடைபற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தில் கழக கொள்கைப் பரப்பு செயலாளர் திருச்சி சிவா எம்.பி., கண்டன உரையாற்றினார். உடன் மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் மற்றும் பலர் உள்ளனர்.



காரைக்கால் மாநில தி.மு.க.அமைப்பாளர் ஏ.எம்.எச்.நாஜிம் எம்.எல்.ஏ. தலைமையிலும் நிரவி திருப்பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாகாதியாகராஜன் முன்னிலையிலும் காரைக்கால் மாநில தி.மு.க.இளைஞரணி அமைப்பாளர் முஹம்மது ரிபாஸ் ஒருங்கிணைப்பிலும் நடைபெற்ற மாபெரும் உண்ணாவிரத போராட்டத்தில் கழக நிர்வாகிகளும், கழக தொண்டர்களும், மாணவ, மாணவிகளும் ஏராளமான பொதுமக்களும் நீட் எதிர்ப்பு உண்ணாவிரத போராட்டத்தில் கலந்து கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்டக் கழக முன்னாள் பொறுப்பாளர்

# க.சிதம்பரத்தின் துணைவியார் சி.ராஜேஷ்வரி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் !

சென்னை, ஆக. 22 -

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் க.வீரையாவின் சகோதரரான புதுக்கோட்டை மாவட்டக் கழக முன்னாள் பொறுப்பாளர் க.சிதம்பரத்தின் மனைவியும், புதுக்கோட்டை தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் மு.க.ராமகிருஷ்ணன் மாமியாரும், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மு.க.முத்துக்கருப்பன், மு.க.சீனிவாசன் ஆகியோரின் அத்தையும், தொழிலதிபர் சி.ஆசைத்தம்பியின் தயாருமாகிய சி.ராஜேஷ்வரி அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தின ருக்கு தெரிவித்துள்ளார்.

## கழக விவசாய அணி இணை செயலாளர்

# குறிஞ்சி என்.சிவக்குமார் மாமனார் மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி !

ஈரோடு, ஆக. 22 -

கழக விவசாய அணி இணை செயலாளர் குறிஞ்சி என்.சிவக்குமார் மாமனார் எ.தங்கராசு வயது 83. வயது மூப்பின் காரணமாக 18.8.2023 வெள்ளிக்கிழமை மதியம் 1.30 மணியளவில் பள்ளிபாளையம் எஸ்.பி.பி காலனி அண்ணா நகரில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு மஞ்சுமாலா என்கிற மகளும், மாதேஷ் என்கிற மகனும் உள்ளனர்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதி சடங்கு 19.8.2023 சனிக்கிழமை மதியம் 2 மணியளவில் நடைபெற்றது

## தி.மு.க. தொழிலாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## (மூன்றாவது பட்டியல்)

### தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி, மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொழிலாளர் அணியின் மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்..

**சென்னை தென்மேற்கு மாவட்டம்**

தலைவர் : நி. வடிவேல் எண். 7/8, சாராபுரம், கெனால் பேங்க் ரோடு, சென்னை 600004.

துணைத் தலைவர் கே. ராஜேந்திரன் எண். 36/31, பஜனை கோயில் தெரு, கண்ணம்மாபேட்டை, தியாகராயநகர், சென்னை - 600017.

அமைப்பாளர் : **மு. பாலகுமார் எண்**. 39/59, வது தெரு, அசோக் நகர், சென்னை - 600083.

துணை அமைப்பாளர்கள்: கே. ராமலிங்கம் எண். 4389, காரணீஸ்வரர் கோயில் தெரு, ஆனந்தி அப்பார்ட்மெண்ட் மயிலாப்பூர், சென்னை - 600004. மு. சரவணன் எண். 23, 9வது தெரு, காமராஜர் காலனி, கோடம்பாக்கம், சென்னை - 600024. ஏ.ஆர். கார்த்திக் எண். 3, அஜிஸ் நகர், மெயின் ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 600024. டி. வெங்கடேசன் எண். 5, திருநகர், 6வது தெரு, வடபழனி, சென்னை - 600026. எஸ். ராஜேந்திரன் எண். 1/1, பக்ஸ் ரோடு, ஆர்.ஏ.புரம், சென்னை - 600028. ]

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

தலைவர் : எம். முத்து பிளாட் எண். 4, பவுல் நகர், வி.எம். சத்திரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி.

துணைத் தலைவர்: எஸ். லெவே அந்தோணி 271/6, மேற்கு தெரு, அலவந்தான்குளம், திருநெல்வேலி - 627357.

அமைப்பாளர்: **கே.எஸ். சேவியர்** எண். 2/244, மெயின் ரோடு, சீதபற்பநல்லூர், திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள்: எம். முருகன் எண். 231, மகிழ்ச்சி நகர், பெருமாள்புரம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி. ஆர். பழனிகுமார் எண். 124, கோயில்பத்து தெரு, சுத்தமல்லி, திருநெல்வேலி. ஆர். சங்கர்கணேஷ் எண். 7, மேலத் தெரு, தச்சநல்லூர், திருநெல்வேலி. எஸ். காளிமுத்து எண். 9/177, கீழத் தெரு, மறக்குடி, ரஸ்தா, உக்கிரன்பேட்டை, மானூர் தாலுக்கா, திருநெல்வேலி. ஜி. ஜீவன் இன்பராஜ் எண். 5/128/பி, சர்ச் தெரு, அழகிய பாண்டியபுரம், திருநெல்வேலி.

**தருமபுரி மேற்கு மாவட்டம்**

தலைவர் : சி. அன்பழகன் பில்பருத்தி அஞ்சல், பாப்பிரெட்டிபட்டி வட்டம், தருமபுரி - 636905.

துணைத் தலைவர் : மா. ராஜலிங்கம் மோட்டுப்பட்டி கிராமம், கிருஷ்ணாபுரம் அஞ்சல், தருமபுரி மாவட்டம் - 635202.

அமைப்பாளர்: **ரா. சண்முகம்** தும்பள அள்ளி, கெண்டிகானஅள்ளி (அ), காரிமங்கலம் (வ), தருமபுரி - 636806.

துணை அமைப்பாளர்கள் கேஸ்.கு. மணி 86/சி, புட்டிரெட்டிப்பட்டி ரோடு, கடத்தூர் (அ), பாப்பிரெட்டிபட்டி (வ), தருமபுரி மாவட்டம் - 635303. ஜ. பழனி கச்சேரி மேடு, அரூர் அஞ்சல் மற்றும் வட்டம், தருமபுரி மாவட்டம் - 636903. டி. முரளி சீக்கம்பட்டி, வே. முத்தம்பட்டி (அ), பாப்பிரெட்டிபட்டி (வ), தருமபுரி மாவட்டம் - 635301. எம். பெருமாள் பையர்நாயக்கன்பட்டி (அ), அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம் - 636906. செ. நல்லதம்பி மாரிசெட்டிகாடு (கி), பெரியானஅள்ளி, காரிமங்கலம், தருமபுரி மாவட்டம் - 635205. வி. மாதையன் பொம்மஅள்ளி (அ), காரிமங்கலம் (வ), தருமபுரி மாவட்டம் - 635111. ஆர். செல்வம் எண். 19, புது வீதி, கம்பை நல்லூர் (அ), காரிமங்கலம் (வ), தருமபுரி மாவட்டம் - 635202. எல். கோவிந்தசாமி குண்டூர் , திண்டல் (அ), காரிமங்கலம் (வ), தருமபுரி மாவட்டம் - 635111. சி. கண்ணன் பையர்நத்தம் (அ), பாப்பிரெட்டிப்பட்டி (வ), தருமபுரி மாவட்டம் - 636905.

**கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம்**

தலைவர் : சிவமுருகன் ரிஷிவந்தியம் ஊராட்சி, சங்கராபுரம் (வ), கள்ளக்குறிச்சி மாவட்டம்.

துணைத் தலைவர் : மு. பாலகிருஷ்ணன் ஜி. அரியூர் ஊராட்சி, சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி.

அமைப்பாளர் : **எஸ்.பி. தாஸ்,** புதுப்பட்டு ஊராட்சி, சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் : அய்யாசாமி மேலத்தேனூர் கிராமம், லா. கூடலூர் (அ), சங்கராபுரம் (வ), கள்ளக்குறிச்சி மாவட்டம். ஜி. காளியப்பன் விருகாவூர் ஊராட்சி, கள்ளக்குறிச்சி வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம். முத்துக்குமரன் வேங்கைவாடி ஊராட்சி கள்ளக்குறிச்சி வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம். ஆர். சீத்தாபதி அரியலூர் ஊராட்சி, சங்கராபுரம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம். தெய்வீகன் நரியந்தல் ஊராட்சி, திருக்கோவிலூர் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம். வெ. வரதராஜன் முட்டியம் ஊராட்சி, ரிஷிவந்தியம் (அ), சங்கராபுரம் (வ), கள்ளக்குறிச்சி மாவட்டம். கோ. வாசு அனுமனந்தல் ஊராட்சி, சின்னசேலம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

**திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்**

அமைப்பாளர் : **பி.கே.ஏ. அருண்** 33, தென்மாத்தாதித் தெரு, திருவண்ணாமலை.

துணை அமைப்பாளர்கள்: கி. சேட்டு கட்டமடுவு கிராமம், மேல்ராவந்தவாடி அஞ்சல், செங்கம் வட்டம், திருவண்ணாமலை. எஸ்.வி.ஆர். மணிகண்டன் 35/14, வளையல்காரத் தெரு, திரு வண்ணாமலை. த. அருணாச்சலம் என்.என். பாளையம் கிராமம், துரிஞ்சாபுரம் ஒன்றியம், திருவண்ணாமலை. பொ. தங்கமணி இராமநாதபுரம் (கி) மற்றும் (அ), போளூர்வட்டம், திருவண்ணாமலை. என். பொன்னுசாமி 1033, கக்கன்ஜி நகர், சாத்தனூர் (கி), தண்டராம்பட்டு (வ), திருவண்ணாமலை.

**புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்**

தலைவர் : வி.எஸ். பழனியப்பன் 1/185, சுனையக்காடு மற்றும் (அ), அறந்தாங்கி தாலுக்கா, புதுக்கோட்டை.

துணைத் தலைவர் : மு. திருப்பதி கும்மங்குடி மற்றும் அஞ்சல், திருமயம் தாலுக்கா, புதுக்கோட்டை.

அமைப்பாளர்: **பொன். லோகநாதன்** கொத்தமங்கலம் அஞ்சல், ஆலங்குடி தாலுக்கா, புதுக்கோட்டை.

துணை அமைப்பாளர்கள் : வெ. மச்சக்காளை 79, கல்லம்பட்டி, பொன்னமராவதி, புதுக்கோட்டை. சா. கணேசன் இசுகுப்பட்டி, ஆலங்குடி தாலுக்கா, புதுக்கோட்டை. எம். மாரியப்பன் சொக்க நாதப்பட்டி, புலிவலம் (அ), திருமயம் தாலுக்கா, புதுக்கோட்டை. ஆ. முத்துக்காமாட்சி தாழனூர் அஞ்சல், ஆவுடையார்கோவில் தாலுக்கா, புதுக்கோட்டை. வி. காமராஜ் 30/இ, புதுக்கோட்டை ரோடு, அறந்தாங்கி, புதுக்கோட்டை. தி. வேனிர்செல்வம் பாண்டிபத்திரம் அஞ்சல், ஆவுடையார்கோவில் தாலுக்கா, புதுக்கோட்டை. ப. அய்யாச்சாமி ராராபுரம் அஞ்சல், திருமயம் தாலுக்கா, புதுக்கோட்டை. வெ. முருகேசன் கே. இராயவரம் அஞ்சல், திருமயம் தாலுக்கா, புதுக்கோட்டை. சு. அருண்கார்த்திக் மங்களாபுரம், ஆலங்குடி (தா), புதுக்கோட்டை. கே.எஸ். முத்து கீழக்கரும்பிரான்கோட்டை, பள்ளத்திவிடுதி அஞ்சல், ஆலங்குடி தாலுக்கா, புதுக்கோட்டை. ப. சுப்ரமணியன் தாரணி, இரும்பாநாடு அஞ்சல், ஆவுடையார்கோவில் தாலுக்கா, புதுக்கோட்டை.

**தூத்துக்குடி தெற்கு மாவட்டம்**

தலைவர்: கேடிசி வி. முருகன் 1/436, குறிஞ்சி நகர், வீரபாண்டியபட்டணம், தூத்துக்குடி - 628216.

துணைத் தலைவர் : அன்பு வே. தேவகுமார் 12, மேற்கு தெரு, 3வது வார்டு, ஆதிநாதபுரம், தூத்துக்குடி . 628612.

அமைப்பாளர் : **ரா. செல்வபெருமாள்** 36/4, பண்டாரம்பட்டி, 1வது வார்டு, தூத்துக்குடி - 628002.

துணை அமைப்பாளர்கள் : இரா. அந்தோணி தனுஸ் பாலன் 4/எக்ஸ்/94, ஜே.ஜே. நகர், மேலூர், தூத்துக்குடி - 628002. சொ. பொன்ராஜ் 40/48, சக்கர தேடி தெரு, திருவைகுண்டம், தூத்துக்குடி - 628203. பா. ஆறுமுகம் 7/30, முருகன் கோவில் தெரு, அணி யாபரநல்லூர், திருவைகுண்டம், தூத்துக்குடி - 628851. ந. நமச்சிவாயம் 45, பாரதி இல்லம், குமாரபுரம், திருச்செந்தூர், தூத்துக்குடி - 628215. பு. ஞானப்பிரகாசம் 3/121/3, சந்தனம் தெரு, தருவைக்குளம், தூத்துக்குடி - 628105.

**அரியலூர் மாவட்டம்**

தலைவர் : ம. அன்பழகன் 701, பி. புதிய மார்க்கெட் தெரு, அரியலூர்.

துணைத் தலைவர் : இரா. இராஜேந்திரன் ஆயதகளம், உடையார்பாளையம் வட்டம், அரியலூர்.

அமைப்பாளர் : சு. **இளங்கோவன்** யூனியன் ஆபிஸ் எதிர்புறம், விளந்தை, ஆண்டிமடம் வட்டம், அரியலூர்.

துணை அமைப்பாளர்கள் : த. கருப்பையா குறிச்சிநத்தம், அரியலூர் வட்டம், அரியலூர். ம. மைனர் 3/378/எ, புது மார்க்கெட் தெரு, அரியலூர். க. நளராஜன் பொற்பதிந்தநல்லூர், தா. பழூர், உடையார்பாளையம் (வ), அரியலூர். க. இளவரசன் குவாகம், ஆண்டிமடம் வட்டம், அரியலூர். சை. ஹபிப்ரஹ்மான் 99/108, முஸ்லீம் தெரு, அம்பளவர் கட்டளை, உடையார்பாளையம் (வ), அரியலூர். க. கோவிந்தராஜ் சின்னப்பட்டாகாடு, திருமானூர் ஒன்றியம், அரியலூர் மாவட்டம். சா. சேகர் புதுக்குடி, ஆண்டிமடம் வட்டம், அரியலூர் மாவட்டம்.

**ஈரோடு வடக்கு மாவட்டம்**

தலைவர் : என்.பி. கணேசன் திருமால் வீதி, நாயக்கன்காடு, கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம்.

துணைத் தலைவர் : கே. ரங்கசாமி 32, கே.என். பாளையம் ரோடு, டி.ஜி. புதூர் நால் ரோடு, டி.என்.பாளையம், ஈரோடு மாவட்டம்.

அமைப்பாளர் : **எஸ். வேலுச்சாமி** 505, பூதப்பாடி, அந்தியூர் (தா), ஈரோடு மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் : எஸ். லிங்கண்ணா அருள்வாடி (அ), தாளவாடி, ஈரோடு மாவட்டம். எஸ். கிருஷ்ணன் 69/எச், சொக்கராயன் காடு, பவானி, ஈரோடு மாவட்டம். யு.எம். சேகர் 15/457, மேட்டூர் மெயின் ரோடு, ஊராட்சிக்கோட்டை, பவானி, ஈரோடு மாவட்டம். கே. கருப்பணசாமி 2, மின் நகர், அமலா பள்ளிச்சாலை, கோபிசெட்டி பாளையம், ஈரோடு மாவட்டம். ஜி.வி. செங்குட்டுவன் 37, குமணன் வீதி, கோபிசெட்டிபாளையம், ஈரோடு மாவட்டம். டி. தட்சிணாமூர்த்தி எண். 371/75, பூங்கொடி ஆஸ்பத்திரி பின்புறம், பவானி மெயின் ரோடு, அந்தியூர், ஈரோடு மாவட்டம்.

**திண்டுக்கல் மாநகரம்**

தலைவர் ரா. முரளிதரன் காளிமுத்து பிள்ளை சந்து, திண்டுக்கல் - 1.

துணைத் தலைவர் சு. உதயசூரியன் ஈ/30/228, ஆர்.எம். காலனி, 8வது குறுக்குத் தெரு, திண்டுக்கல்.

அமைப்பாளர் : **ஆ. சந்தோஷ்முத்து** எம்/1/101, 12வது கிராஸ், ஆர். எம். காலனி, திண்டுக்கல்.

துணை அமைப்பாளர்கள் வ. செந்தில்குமார் 18, தரகுகார தெரு, தெற்குரத வீதி, திண்டுக்கல் - 624001. கை. சந்திரசேகரன் 147, பெரியாண்டவர் நகர், பள்ளபட்டி ரோடு, பேகம்பூர் (அ), திண்டுக்கல் - 624002. ரா. பால்பாண்டி 1/எ, மருதாணிக்குளக்கரை, கன்னிமார் கோவில் அருகில், திண்டுக்கல். தா. சேசுராஜ் 56, செயின்ட் சேவியர் தெரு, திண்டுக்கல். கி. மணிகண்டன் 30/32, குயவர் 1வது சந்து, நாகல் நகர், திண்டுக்கல்.

**சென்னை வடக்கு மாவட்டம்**

தலைவர் : அ. பாஸ்கர் எண். 204, விளையாட்டு மைதானம் தெரு, கொடுங்கையூர், சென்னை - 600118.

துணைத் தலைவர் : டி. தேவேந்திரன் எண். 148, சுந்தரம் பிள்ளை நகர், 2வது தெரு, சென்னை - 600081.

அமைப்பாளர்: **எஸ்.எம். பரசுராம்** எண். 12/31, கருமாரியம்மன் நகர் கொருக்குப்பேட்டை, சென்னை . 600021.

துணை அமைப்பாளர்கள் : ஜெ. பாபு எண். 84/54, 1வது குறுக்குத் தெரு, சாஸ்திரி நகர், வியாசார்பாடி, சென்னை - 600039. கதிரவன் மணி (எ) இ. மணிகண்டன் எண். 9, கிருஷ்ணசாமி கோயில் தெரு, வியாசார்பாடி, சென்னை - 600039. எம்.எம். சந்துரு 20/75, நரசியர் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600021. எஸ். ஆன்ரு 14/27, காசிகார்டன் 2வது தெரு, இராயபுரம், சென்னை - 600013. ஜி. செந்தில்குமார் 59/4, கப்பல்போலு தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600021.

**தஞ்சாவூர் மத்திய மாவட்டம்**

தலைவர் : பி. வீரையன் பில்லுக்காரத் தெரு, தஞ்சாவூர் மாவட்டம்.

துணைத் தலைவர் : கு. சேவியர் பிலோமினா நகர், என்.கே. ரோடு, தஞ்சாவூர் மாவட்டம்.

அமைப்பாளர் : **துரை. நாகராஜன்** ராஜாஜி நகர், எம்.சி. ரோடு, தஞ்சாவூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் : எம். இராமச்சந்திரன் செக்கடித் தெரு, சீனிவாசபுரம், தஞ்சாவூர் மாவட்டம். கே. இளங்கோவன் (எ) அய்யாங்கு வடக்கு தெரு, களிமேடு, தஞ்சாவூர் மாவட்டம். சிட்டு (எ) சுப்ரமணியன் மாதையுண்டார் தெரு, பனையக்கோட்டை, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம். க. இராஜ்குமார் கோரிக்குளம், புதுத் தெரு, புதுப்பட்டினம், தஞ்சாவூர் மாவட்டம். சோ. மணிவேல் கருக்காடிப்பட்டி, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மாவட்டம். எஸ். அருள்தம்பி அய்யனார் கோவில் தெரு, தென்னமாநாடு, ஒரத்தநாடு, தஞ்சை.

**திருநெல்வேலி மாநகரம்**

தலைவர் : ரா. சங்கர்கணேஷ் 7, மேலத் தெரு, தச்சநல்லூர், திருநெல்வேலி.

துணைத் தலைவர் : எஸ். முருகன் 186/ஏ, சிவன் கோவில் தெற்கு தெரு, தச்சநல்லூர், திருநெல்வேலி.

அமைப்பாளர் : **சீ. வேலாயுதம் (எ) சரவணன்** 81, சிவா தெரு, திருநெல்வேலி டவுண், திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் : சாகுல் ஹமீது 6/110, பெரிய குப்தா பள்ளிவாசல், வடக்கு தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி. எ. முத்துசுப்பிரமணியன் 2/110, சேக்மதார் நகர், காந்தி நகர், திருநெல்வேலி. முத்தையா (எ) மணி 37/1, சக்தி நகர், பாளைய ங்கோட்டை, திருநெல்வேலி. எஸ். குட்டி 38, இரண்டாவது தெரு, ராஜேந்திர நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி. ஜி.எஸ். மணி 218, குடிசை மாற்று வாரியம், திருநெல்வேலி டவுண், திருநெல்வேலி.

**திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்**

தலைவர் : ஆர். சிவகுமார் எண். 105, பஜார் தெரு, சுண்ணாம்பு குளம் (கி) மற்றும் (அ), கும்முடிப்பூண்டி (வ), திருவள்ளூர் - 601201.

துணைத் தலைவர் : எஸ். ரவீந்திரன் எண். 3/140, காளத்தி தெரு, புதுகும்முடிப்பூண்டி, கும்முடிப்பூண்டி (வ), திருவள்ளூர் - 601201,

அமைப்பாளர் : **மு. தினகரன்** எண். 88, லால் பகதூர் சாஸ்திரி தெரு, மீஞ்சூர், திருவள்ளூர் - 601203.

துணை அமைப்பாளர்கள் : டி.எஸ். மோகன் எண். 72, வேலம்மாள் நகர், சயனவரம், ஆமூர் அஞ்சல், பொன்னேரி வட்டம், திருவள்ளூர். அ. மனோகரன் எண். 1/229, பைபாஸ் சாலை, ஆரம்பாக்கம், கும்முடிப்பூண்டி (வ), திருவள்ளூர். ப. கருணாகரன் எண். 69, அண்ணா தெரு, மீஞ்சூர், திருவள்ளூர் - 601203. ப. சுரேஷ் எண். 204, மோடியம்மன் கோயில் தெரு, திம்மபூபாலபுரம் (கி) மற்றும் (அ), ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602203. எம். பிரபு எண். 2/2, மங்கம்மாள் பேட்டை, கிளிகோடி (கி), கவரப்பேட்டை (அ), திருவள்ளூர் - 601206. பி. அறிவழகன் எண். 167, பெரிய ஒபுளாபுரம் (கி) மற்றும் (அ), கும்முடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் - 601201. வி. காமராஜ் எண். 5, ஆண்டவர் தெரு, என்.ஜி.ஓ. நகர், பொன்னேரி, திருவள்ளூர் - 601204. இ. சுரேஷ் எண். 963, பெருமாள்கோயில் தெரு, கன்னிகைப்பேர் (கி) மற்றும் (அ), ஊத்துக்கோட்டை (வ), திருவள்ளூர் - 601102. எஸ். ராஜேந்திரன் எண். 12/49, கம்பர் தெரு, என்.ஜி.ஓ. நகர், பொன்னேரி (வ), திருவள்ளூர் - 601204. ஏ. யுவராஜ் பெருமாள் கோயில் தெரு, திம்மபூபாலபுரம் (கி) மற்றும் (அ), ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602023. டி. இளங்கோவன் எண். 12, ஈஸ்வரன் கோயில் வடக்கு, மீஞ்சூர், திருவள்ளூர் - 601203. ஆ. ஜோசப் (எ) சீனிவாசன், 53, இந்திரா நகர், மிஞ்சூர், பொன்னேரி , திருவள்ளூர் மாவட்டம். கே. ஜெய்சங்கர் எண். 11, வி.ஆர்.பி. தெரு, மீஞ்சூர், திருவள்ளூர் - 601203.

**சென்னை தெற்கு மாவட்டம்**

தலைவர் : ஆர்.டி. மூர்த்தி 1/2, அச்சுதன் நகர் 2வது தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை - 600032.

துணைத் தலைவர்: பி.எல். ஆல்வின் 3/526, வி.பி.ஜி. அவென்யூ, 6வது தெரு, மேட்டுக்குப்பம், துரைப்பாக்கம், சென்னை - 600097.

அமைப்பாளர் : **கோ.பாஸ்கர்** 79/1, சடையப்பன் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.

துணை அமைப்பாளர்கள் : எம். மாறன் டி/45, கொத்தவால்சாவடி தெரு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை - 600015. கே.எஸ்.பாபு 6/9, திருஞானசம்பந்தர் தெரு, காந்தி நகர், ஈக்காட்டுத்தாங்கல், கிண்டி, (சைதை கிழக்கு), சென்னை - 600032. பி.சி. மோகன் 2, விவேகானந்தர் தெரு, சாலிகிராமம், சென்னை - 600093. ஆர். சசிமனோஜ் எச்/7பி, பொன்னம்பலம் காலனி கலைஞர் நகர், சென்னை - 600078. இ. வேலு 5, 3வது தெரு, சக்தி நகர், நெற்குன்றம், சென்னை - 600107. எம். சண்முகம் 1/58, தாங்கல் தெரு, அண்ணா நகர், ராமாபுரம், சென்னை - 600089. த. சரவணன் 56/3, 15வது தெரு, இந்திரா நகர், அடையாறு, சென்னை - 600020. க. கண்ணன் 66/19, மதியழகன் தெரு, நேரு நகர், வேளச்சேரி, சென்னை - 600042. எஸ். அரிகிருஷ்ணன் 5/360, மடிப்பாக்கம் மெயின் ரோடு, மடிப்பாக்கம், சென்னை - 600091. ஆர். எம். கார்த்திக்கேயன் 2/1791, கஸ்தூரிபாய் நகர், வெட்டுவாங்கேணி, சென்னை - 600115. எஸ். செல்வம் 9/4, துலுக்கானத்தம்மன் கோயில் தெரு, பள்ளக்கரணை, சென்னை - 600100. கே. செந்தில்குமார் 1/19, பாலாஜி நகர், வானகரம், சென்னை - 600095. எம்.எஸ். சிவா 11/103, முனுசாமி நகர் முதல் தெரு, மேடவாக்கம், சென்னை - 600100. எல். கார்த்திகேயன், எண். 2/15, ஏழுமலை சாலை, நன்மங்கலம், சென்னை - 600129,

**சென்னை மேற்கு மாவட்டம்**

தலைவர்: இ. ஏழுமலை 53, வரதராஜபுரம், தேனாம்பேட்டை, சென்னை - 600018.

துணைத் தலைவர் : க. ஜெயபிரகாஷ் 12/3, அயோத்தியா நகர், திருவல்லிக்கேணி, சென்னை - 600005.

அமைப்பாளர் : **எம்.டி.ஆர். சாரதி மணிமாறன்** பி.ஏ., பழைய எண். 20, புதிய எண். 121. குளக்கரை சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600034.

துணை அமைப்பாளர்கள் : டி. சந்திரசேகர் எண். 4, அசோக் நகர், அரும்பாக்கம், சென்னை - 600106. நா. நாகராஜன் 28, என். பிளாக், புஷ்பா நகர், நுங்கம்பாக்கம், சென்னை - 600106. கே. அசோக்குமார் எண். 35, இளங்கோ சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018. க. சக்திவேல் எண். 41/22, வெங்கடேசன் தெரு, சேப்பாக்கம், சென்னை - 600005. ப. கோபிகிருஷ்ணன் எண். 103/2, திருவீதி அம்மன் கோயில் தெரு, மேல்நடுவங்கரை, அண்ணா நகர், சென்னை - 600040. க. சுப்பிரமணி எண். 3, எஸ். எஸ். சாகிப் தெரு, அமைந்தகரை, சென்னை - 600029. நீ. ரமேஷ் எண். 9, மேற்கு அரசமரம் தெரு, அமைந்தகரை, சென்னை - 600029. சொ. புலான்ராஜ் எண். 80, பி. பிளாக், தி திரு.வி.க. குடியிருப்பு, தேனாம்பேட்டை, சென்னை - 600018. என். கோவிந்தன் எண். 45, கமலா நேரு நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை - 600094. எஸ். ரமேஷ் எண். 8/15, டாக்டர் தாமஸ் சாலை, தி. நகர், சென்னை - 600017.

**நாகை மாவட்டம்**

தலைவர் : எஸ்.என். மோகன்தாஸ் வடக்கு தெரு, அக்கரைப்பேட்டை, கீழ்வேளூர் தாலுக்கா, நாகப்பட்டினம்.

துணைத் தலைவர்: எஸ். பாலசந்திரன் 39, சட்டையப்பர் தெற்கு வீதி, நாகப்பட்டினம்.

அமைப்பாளர் : **எஸ். சந்தோஷ் (எ) மணிகண்டபூபதி** 54, சிபிசிஎஸ். மெயின் ரோடு, பனங்குடி (அ), நாகப்பட்டினம் (தா), நாகப்பட்டினம்.

துணை அமைப்பாளர்கள் : க. வடிவேல் பெருமாள் வடக்கு தெரு, திருமருகல், நாகப்பட்டினம். ப. பாண்டியன் மெயின் ரோடு, திருபயத்தங்குடி (அ), நாகப்பட்டினம் தாலுக்கா, நாகப்பட்டினம். த. இராமமூர்த்தி 26/29, அட்டைக்குலத் தெரு, நாகப்பட்டினம். . டி. சரவணன் 39, அண்ணா படிப்ப சந்து, பப்ளிக் ஆபிஸ் ரோடு, வெளிப்பாளையம், நாகப்பட்டினம். ஜி. ரமேஷ் 4, முடுக்கு தாழைசந்து, நாகூர், நாகப்பட்டினம். எஸ். பிரகாஷ் 9, மேலவீதி, தலைஞாயிறு, நாகப்பட்டினம். செ. தமிழ்செல்வன் 21/ஏ, ராமர் மடம் தெற்கு தெரு, நாகப்பட்டினம். மு. இராதாகிருஷ்ணன் 4/2, தென்மருதூர், ஆதமங்கலம், கோவில் கண்ணாப்பூர், திருக்குவளை (தா), நாகப்பட்டினம். இரா. சுப்புராமன் 2/219, நடுக்காடு, கருப்பம்புலம் அஞ்சல், வேதாரண்யம் (தா), நாகப்பட்டினம். எஸ். கல்யாணசுந்தரம் 11, பெருமாள் வடக்கு, மடவிளாகம், நாகப்பட்டினம்.

**விழுப்புரம் தெற்கு மாவட்டம்**

தலைவர் : வே. அரிகரன் எண். 96, ரெட்டிகுப்பம் ரோடு, விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம்.

துணைத் தலைவர் : எஸ். செல்லதுரை எண். 17, வரதப்பா நாயக்கன் தோப்பு விழுப்புரம்.

அமைப்பாளர் : **எஸ். சுரேஷ்பாபு** எண். 1/ஏ, அங்காளம்மன் கோவில் தெரு, விழுப்புரம்.

துணை அமைப்பாளர்கள் : சி. ஏழுமலை எண். 4/66, நாக்கன் தோப்பு, விழுப்புரம். எம்.பி. ஆர். சிவக்குமார் பிள்ளை மேற்கு தெரு, சி. மெய்யூர் (அ), திருவெண்ணெய் நல்லூர் (தா), விழுப்புரம். கே. ரமேஷ் பள்ளிக்கூடத் தெரு, சிறுவாக்கூர், கல்பட்டு அஞ்சல், விழுப்புரம். கே. மூர்த்தி மாரியம்மன் கோவில் தெரு, பொம்மையார்பாளையம், வானூர் வட்டம், விழுப்புரம். எஸ். இராமநாதன் மாரியம்மன் கோவில் தெரு, கரைமேடு, கொங்கரம்பாளையம் (அ), விழுப்புரம். எஸ். பிரசாந்த் எண். 1/92, தெய்வீகன் தெரு, மணம்பூண்டி அஞ்சல், கண்டாச்சிபுரம் தாலுக்கா, விழுப்புரம். ராஜ. சுரேஷ் எண். 3/1ஏ, வில்லியம் லே அவுட், இரண்டாவது தெரு, விழுப்புரம். சி.ஆர்.ஜெ. ராஜா எண். 5, எழை மாரியம்மன் கோவில் தெரு, விழுப்புரம். எஸ். சித்திரவேல் எண். 13/7, பெருமாள் கோவில் தெரு, விழுப்புரம்.

**மயிலாடுதுறை மாவட்டம்**

தலைவர் : பி. வீரமணி காளியம்மன் கோயில் தெரு, திருநன்கொண்டசேரி, உழவூர் (அ), மயிலாடுதுறை.

துணைத் தலைவர் : ஜி.என். ஜீவராஜ் 3/36/ஏ, மெயின் ரோடு, திருவாலி அஞ்சல், சீர்காழி, மயிலாடுதுறை - 609109.

அமைப்பாளர் : **இரா. தனராஜ்** ஓ/1, பொன்னையன் தெரு, கீழத்தென்பாதி, சீர்காழி, மயிலாடுதுறை.

துணை அமைப்பாளர்கள் : கோ. கிருபாகரன் 193, சோழன் தெரு, இ.பி. காலனி சீனிவாசபுரம், மயிலாடுதுறை. மு. எத்திராஜ் 2, பாரத் சேகர் நகர், கொள்ளிடம், சீர்காழி தாலுக்கா, மயிலாடுதுறை. எஸ். ராஜசேகரன் 58/23/ஏ, பட்டமங்கல ராயத் தெரு, மயிலாடுதுறை 609001. கே. ரவிசுந்தரம் நாதல்படுகை, அனுமந்தபுரம் (அ), சீர்காழி (தா), மயிலாடுதுறை. எம். ராஜாராமன் பி.எஸ்.சி., பி.எட்., தெற்கு தெரு, மூட்டம், அகரகிரங்குடி (29), எலந்தங்குடி (அ), மயிலாடுதுறை. சேகர் .பி. ராமச்சந்திரன் கோவில்பத்து, கிடங்கல், மாமாகுடி அஞ்சல், மயிலாடுதுறை. எம். எஸ். அமர்நாத் 31/ஏ, புளியன் தெரு, மயிலாடு துறை - 609001. வீ. அரிஸ்டாட்டில் ராஜா மெயின் ரோடு, பாலக்குடி, வில்யாநல்லூர் அஞ்சல், மயிலாடுதுறை. ஆர். துரைராஜ் மெயின் ரோடு, மேலையூர், தேரழுந்தூர் (அ), குத்தாலம் (தா), மயிலாடுதுறை - 609808. ஏ. இராஜேந்திரன் கிளியனூர் கீழத் தெரு, கிளியனூர் (அ), தரங்கம்பாடி (தா), மயிலாடுதுறை. என். கனகராஜ் வெள்ளாளத் தெரு, மேலையூர், தரங்கம்பாடி தாலுக்கா, மயிலாடுதுறை.

**கோவை தெற்கு மாவட்டம்**

தலைவர் : என். சிவசக்திவேல் 1/282, எச், சாலைத் தோட்டம், செஞ்சேரி (அ), சுல்தான்பேட்டை வழி, சூலூர், கோவை - 641669.

துணைத் தலைவர் : கே.பி. முருகேசன் 1/63. மேற்கு தோட்டம், குமாரபாளையம் (அ), பொள்ளாச்சி (தா), கோவை - 642002.

அமைப்பாளர் : **ஆர். கதிர்வேல்** 28, திருநீலகண்டர் வீதி, பகவதிபாளையம், கிணத்துகடவு, கோவை - 642109.

துணை அமைப்பாளர்கள் : செ. எழிலரசன் 6/டி, அன்னூர் வீதி, கருகம்பாளையம், இச்சிப்பட்டி, (அ), சோமனூர், கோவை - 642110. எஸ்.எம். செந்தில்குமார் 10/83/டி, வடிவு நகர், செட்டிபாளையம் ரோடு, வெள்ளலூர், கோவை - 641111. மீ. ஜாவித் அகமது 41/104, பொள்ளாச்சி ரோடு, ஆனைமலை, கோவை - 642104. மு. சுரேஷ் 5, செகுடந்தாளி, கருமத்தம்பட்டி சோமனூர் அஞ்சல், சூலூர், கோவை - 641402. ஆர். சி. ராமராஜ் 4/84, அம்மன் காலனி, இராமநாதபுரம், மண்ணூர் (அ), பொள்ளாச்சி, கோவை. ஆ. கிருஷ்ணகாந்த் 8/80, முதலியார் முதல் வீதி, லோகநாதபுரம், சசுந்தராபுரம் (அ), கோவை - 641024, க. சானவாஸ் 36/1. காமாட்சி நகர் ஊத்துக்காடு, பொள்ளாச்சி, கோவை - 600001. நா. மணிகண்டன் 13/38714, மேட்டுக்காடு, மதுக்கரை, கோவை - 641105.

**கோவை மாநகர் மாவட்டம்**

தலைவர் : பெ. ராமசாமி 381/61, சம்பத் வீதி, ரத்தினபுரி கோவை - 27.

துணைத் தலைவர்: ந. கண்ணன் 86, டாக்டர் ராதாகிருஷ்ணன் வீதி, சீரநாயக்கன்பாளையம், கோவை - 07.

அமைப்பாளர் : கே. ஆர். ராஜா 21/பி, எம்.சாமி காலனி, ரத்தினபுரி, கோவை - 27

. துணை அமைப்பாளர்கள் : ப. நடராஜன் 119/120, காவேட்டி லே அவுட் வீதி எண். 1, சௌரிபாளையம், கோவை - 28. பி. குமார் 38, குருபரசந்து - 1, கோவை - 01. கே. நாகராஜன் 112, வி.ஜி. ராவ் நகர், இ.பி. காலனி. பேஸ்1, கணபதி, கோவை - 6. நா. வெங்கடேசன் 125, தியாகி குமரன் வீதி, கோவை - 1. ஆர். மணிகண்டன் எச். ஹவுசிங் யூனிட் , எஸ்.எச். காலனி தெற்கு உக்கடம், கோவை.

**கோவை வடக்கு மாவட்டம்**

தலைவர்: பி. ரங்கநாதன் 5/476, பி எத்திராஜ் நகர், மேட்டுப்பாளையம், கோவை.

துணைத் தலைவர் : எஸ். ரமேஷ்குமார் 11/5, கருப்பண்ண கவுண்டர் தெரு, நடூர், மேட்டுபாளையம், கோவை.

அமைப்பாளர் : **எம். பொன்னுசாமி** 47/ஏ, சின்னதம்மா நகர், குரும்பாளையம், வேடப்பட்டி (அ), கோவை - 007.

துணை அமைப்பாளர்கள் : சி. கிரி 1/585, மத்தம்பாளையம், பிளிச்சி, கோவை. ஆர். ஹரிதாஸ் 5/8ஏ, புலவர் கந்தசாமி பிள்ளை தெரு பேரூர், கோவை - 641010. பி. ராமசாமி சி/269, சேரன் காலனி துடியலூர், கோவை - 034. எம். சுந்தரசாமி 35, நேரு நகர், சுண்டக்காமுத்தூர், கோவை மாவட்டம். பி.டி. கோபால்சாமி 4/120, பன்னிமடை, கோவை மாவட்டம். மோ. மணிகண்டன் 240/1, அண்ணாமலை நகர், கவுண்டபாளையம், பெரியநாயக்க ன்பாளையம், கோவை - 641020,

**திருவாரூர் மாவட்டம்**

தலைவர் : ஆர்.எஸ். மணிகண்டன் 1/4 எஸ்/6, செல்லாஸ் அப்பாட்மெண்ட்ஸ் அப்பர் தெரு, லெட்சுமி நகர், புலிவலம், திருவாரூர் - 610109.

துணைத் தலைவர் : வை. சாமிநாதன் 70, குடியானத் தெரு, தென்குடி, முடிகொண்டான் (அ), நன்னிலம் (வ), திருவாரூர் - 609502.

அமைப்பாளர் : **பா. கரிகாலன்** 80/ஏ, நரசிங்கம்பேட்டை பரகதபாத் (அ), வலங்கைமான் (வ). திருவாரூர் - 613705.

துணை அமைப்பாளர்கள் : ஜி. கஜேந்திரன் 324, வாஞ்சியார் தெரு, போழக்குடி, நன்னிலம் (வ), திருவாரூர் - 609405. சௌ. சந்தானகிருஷ்ணன் 12, கொரடாச்சேரி ரோடு, லெட்சுமாங்குடி, திருவாரூர் - 614102. ஏ.ஆர்.எஸ். கணேஷ்குமார் இ.சி.ஆர். மெயின் ரோடு, அம்மளூர், இடையூர் அஞ்சல், திருத்துறைப்பூண்டி (வ), திருவாரூர். ஏ.பி. அசோகன் 69, இ.பி. நகர், மன்னார்குடி, திருவாரூ - 614014. சீனு. ராஜா (எ) ராஜகுமரேஷ் 35/12, வெண்ணாறு லைன், இரயிலடி கடைத் தெரு, நீடாமங்கலம், திருவாரூர் - 614404.

**கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்**

தலைவர் : சசிகுமார் 1/93/3, அக்கரவிளை வீயன்னூர் அஞ்சல், கன்னியாகுமரி 629177

துணைத் தலைவர் : பி.எஸ். சசிகுமார் 3/131, பத்மவிலாசம், பெருஞ்சகோணம், செங்கோடி, கன்னியாகுமரி - 629177.

அமைப்பாளர் : **சபீன் ஆண்டன்** 13/29, மேக்மண்டபம் அஞ்சல் கன்னியாகுமரி - 629166.

துணை அமைப்பாளர்கள் : புரூஸ்லீ 4/104/ஏ, விளாத்திவிளை வீடு, காப்புக்காடு அஞ்சல், கன்னியாகுமரி - 629162. ஏ. அபிசன் சாண்டர் 10/176, நெய்தல் காலனி, மிடலாம், உதயமார்த்தாண்டம், கன்னியாகுமரி - 629178. செ. ஆன்றனி குமார் 7/69, ஆசாரிப்பிலா விளை, முகிலன்கரை, மணலிக்கரை, கன்னியாகுமரி - 629164. எம். அஸீஸ் 22/54, சரல்விளை, தக்கலை, கன்னியாகுமரி. சி. அருள்தாஸ் 24/37, செலின் அருளகம், மணக்காவிளை, மணலிக்கரை, கன்னியாகுமரி - 629164. ஏ. செய்யதுஅலி 5/47, ஜின்னா தெரு, இரவிபுதூர்கடை, காட்டாத்துறை, கன்னியாகுமரி - 629158. ஓவியர் மு. ஷாஜகான் எண். 3/18, சாணிவிளை, கண்ணனூர் அஞ்சல், கன்னியாகுமரி.

**விருதுநகர் தெற்கு மாவட்டம்**

தலைவர்: பூ. சின்னசாமி 1/50, கிழக்குத் தெரு, ஆமணக்குநத்தம், விருதுநகர் - 626112.

துணைத் தலைவர் : இரா. வேலுச்சாமி 2/85, மேலத் தெரு, என். சுப்பையாபுரம், விருதுநகர் - 626205.

அமைப்பாளர் : **ப. அய்யனார்** 109, மெயின் ரோடு, மம்சாபுரம், விருதுநகர் - 626110.

துணை அமைப்பாளர்கள் : எம்.பி. சீனிவாசகம் 6/8, ரைட்டன்பட்டி தெரு, திருவில்லிப்புத்தூர், விருதுநகர் - 626125. த. மணிகண்டன் 681/15, நடுத் தெரு, கீழ்பகுதி, சத்திரப்பட்டி, விதுநகர் - 626117. மு. வேல்முருகன் 8/1860, சூர்யநாயக்கன்பட்டி தெரு, பந்தல்குடி, விருதுநகர் - 626113. சூ. ராஜாமணி 5/19/48, தி.க. இராமலிங்காபுரம், பாலையம்பட்டி, அருப்புக்கோட்டை, விருதுநகர் - 626101. ரா. சுரேஷ்குமார் 102, பாரதியார் தெரு, கீழ ஆவரம்பட்டி, இராஜபாளையம் விருதுநகர் - 626102.

**நாகர்கோவில் மாநகரம்**

தலைவர் : அ. செய்யது அகமது 89, மெயின் ரோடு, பராசக்தி கார்டன், கீழ புத்தேரி, நாகர்கோவில், கன்னியாகுமரி - 629001.

துணைத் தலைவர் : ஜெய. செல்வன் ஜார்ஜ் 51/சி, பள்ளிவிளை, டசி.எஸ்.ஐ. சர்ச் அருகில், வெட்டூர்ணிமடம் (அ), நாகர்கோவில், கன்னியாகுமரி .

அமைப்பாளர் : **பூ. சிதம்பரம்** 27/ஏ, /16, பவதா, 3 வது குறுக்குத் தெரு, செந்தூரான் நகர், டி,வி.டி. காலனி, கோட்டார் (அ), நாகர்கோவில், கன்னியாகுமரி.

துணை அமைப்பாளர்கள் : மரியடேவிட் கோல்டன் தெரு, ராமன்புதூர், நாகர்கோவில், கன்னியாகுமரி. ஸ்ரீ. பார்த்தீபன் 225, பாரதியார் தெரு, பள்ளிவிளை, வெட்டூர்ணிமடம் (அ), நாகர்கோவில், கன்னியாகுமரி. அ. அமல்ராஜ் 102/டி. செட்டித் தெரு, சிதம்பர நகர், நாகர்கோவில், கன்னியாகுமரி. கி. டேவிட் நீயூட்டன் 105இ/3/1, சுபாஷ் தெரு, நெசவாளர் காலனி, நாகர்கோவில், கன்னியாகுமரி - 629003. கு. மதன் 11, வெள்ளாளர் மேல தெரு, எஸ்.எம். ஆர்.வி. பள்ளி பின்புறம், வடசேரி, கன்னியாகுமரி.

**தாம்பரம் மாநகரம்**

துணை தலைவர் : சௌ. ஆரோக்கியராசு முத்தமிழ் இல்லம், 2வது தெரு, கஸ்தூரிபாய் நகர், அனகாபுத்தூர், சென்னை - 600070.

துணைத் தலைவர் : இரா. குளஞ்சிநாதன், 1, நடராசன் தெரு, மூங்கில் ஏரி, பம்மல், சென்னை - 600075.

அமைப்பாளர் : **இரா. விஜயகுமார்,** 3/5, ஜி.டி. நாயுடு தெரு, கோமதி நகர், சேலையூர் அஞ்சல், சிட்லபாக்கம், சென்னை - 600073.

துணை அமைப்பாளர்கள் : தே. முருகேசன் காந்தி நகர் 2வது தெரு, பழைய பல்லாவரம், சென்னை - 600117. சு. பாலாஜி, டி.என். எச்.பி. காலனி, துர்கா நகர் மெயின் ரோடு, சானடோரியம், சென்னை - 600047. க. ஜெகதீஷ் 68, அம்பாள் நகர், 3வது தெரு, திருமலை நகர், முதல் பிரதான சாலை, அஸ்தினாபுரம், சென்னை - 600064. எஸ். சண்முகம் 4, மோகன் நகர் மெயின் ரோடு, மாடம்பாக்கம், சென்னை - 600126. எஸ். மகேஷ், 10, 2வது குறுக்கு தெரு, அரங்கநாதபுரம், மேற்கு தாம்பரம், சென்னை - 600045. எஸ்.ஆர். பாஸ்கர், எப் 3, எ.கே.பி. கிராண்ட் விஆர்ஆர், அகரம் மெயின் ரோடு, சேலையூர், சென்னை - 600073.

**கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்**

துணை தலைவர் : இ. சக்ரவர்த்தி பெரியசெவலை மற்றும் அஞ்சல், திருவெண்ணெய் நல்லூர் வட்டம், விழுப்புரம் - 627709.

**சேலம் கிழக்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர் : மு. செல்வம், 11, மணிமேகலை தெரு, ஆத்தூர், சேலம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
19- 8 - 2023

**பி.டி.சி. ஜி.செல்வராஜ்**
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி

குன்னம் சி.இராஜேந்திரன் - எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட 2 ஆயிரம் பேர் பங்கேற்பு!

# பெரம்பலூர் மாவட்டத்தில் உண்ணாவிரத அறப்போர்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. கண்டன உரை!



பெரம்பலூர், ஆக. 22-

பெரம்பலூர் மாவட்டத்தில், ஒன்றிய அரசு, தமிழக கவர்னரையும் கண்டித்து உண்ணாவிரதம்! தி.மு.க. துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., கலந்து கொண்டு, காட்டாட்சி, தர்பார் ஆட்சி நடத்தும் மோடி, அமித்ஷா கும்பலை வருகிற 2024நடாளுமன்ற தேர்தலில் விரட்டியடிப்போம் என்றும் புதிய பிரதமரை தேர்வு செய்யும் இடத்தில் தி.மு.க.இருக்கும் அப்போது நீட் ஒழிக்கப்படும் என்றும் கூறி, பழச்சாறு வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

இதில் மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் உள்ளிட்ட2 ஆயிரம் பேர் பங்கேற்றனர்!

மாணவர்களை மட்டுமின்றி, பெற்றோரையும் மரணக்குழியல் தள்ளும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும்,, பொறுப்பற்ற தமிழக ஆளுநரையும் கண்டித்து, பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி,மாணவரணி, மருத்துவரணி சார்பில், புதிய பேருந்து நிலையத்தில் உண்ணாவிரத அறப்போர் நடைபெற்றது . மாவட்ட கழகச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ.அப்துல்கரீம் வரவேற்புரையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நகர் மன்ற துணை தலைவர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அ.கருணாநிதி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் டி.ஆர். சிவசங்கர், வ.சுப்ரமணியன், மா.பிரபாகரன், இரா. அருண், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் இள.கிருஷ்ணா, ர. இராகவி, ம.தமிழ்வேந்தன், அ.இளயராஜா, மாவட்ட மருத்துவ அணி தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள் டாக்டர் ச.த. ஜெலட்சுமி, டாக்டர் ந.தனபால், டாக்டர் வே.குமார், டாக்டர் செ.அதியா, டாக்டர் த.பாலச்சந்தர், டாக்டர் அறிவு ஸ்டாலின்,

மாவட்ட மருத்துவ அணி தொகுதி அமைப்பாளர்கள் டாக்டர் கி.சிலம்பரசன், டாக்டர் தி.சுதாகர்,

மாவட்ட மருத்துவ அணி தொகுதி துணை அமைப்பாளர்கள் டாக்டர் சி.பழனிவேல், ச.பிரேமலதா, டாக்டர் து.விஜய், டாக்டர் நெ.சோலைமுத்து, க.அண்புணி, டாக்டர் சீ. சினேகலதா, டாக்டர் ரா. பிரபு, ரா.வடிவேல், டாக்டர் கு.அகிலா, தா.வில்லியம்ஞானராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போரில், கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., கலந்து கொண்டு, காட்டாட்சி, தர்பார் ஆட்சி நடத்தும் மோடி, அமித்ஷா கும்பலை வருகிற 2024நடாளுமன்ற தேர்தலில் விரட்டியடிப்போம் என்றும் புதிய பிரதமரை தேர்வு செய்யும் இடத்தில் தி.மு.க.இருக்கும் அப்போது நீட் ஒழிக்கப்படும் என்றும் கூறி, பழச்சாறு வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். இதில்

சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளர் பா.துரைசாமி,

மாநில மருத்துவ அணி துணை செயலாளர் டாக்டர் செ.வல்லபன், மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.பெரியசாமி, மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன்,

தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, ம.இராஜ்குமார், வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி,தி.மதியகன், சோமு.மதியழன், சி.ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், எஸ்.அண்ணாதுரை, என்.ஜெகதீஸ்வரன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், அழகு.நீலமேகம், பேரூர் கழக செயலாளர்கள் மு.வெங்கடேசன், செல்வலட்சுமி சேகர், ஆர். இரவிச்சந்திரன, எ.எஸ். ஜாகீர்உசேன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சி.காட்டுராசா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் கே.சி.ஆர்.குமார், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் புஷ்பவள்ளி ராஜேந்திரன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் வெள்ளுவாடி ரவி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.வேணுகோபால், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு அணி அமைப்பாளர் கே.எம்.ஏ. சுந்தர்ராசு, தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.ரெங்கசாமி, தொ.மு.ச.மாவட்ட கவுன்சில் தலைவர் கே.கே.எம். குமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெ. இரமேஷ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் தி.இராசா, மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ) அப்துல்பாரூக், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ரமேஷ் ராஜேந்திரன், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ஆர். முருகேசன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் ம.மணிவாசகம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வெ.கார்மேகம், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் அ.ரசூல்அகமது, எஸ். கே.எஸ்.மருத்துவமனை அதிபர் டாக்டர் செ.செங்குட்டுவன்,

மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி.மாரிக்கண்ணன்,

உள்ளாட்சி பிரதிநிதிகள் அம்பிகா ராஜேந்திரன், அ.மீனா அண்ணாதுரை, க.ராமலிங்கம், பிரபா செல்லப்பிள்ளை, முத்தமிழ் செல்வி மதியழகன், அருள் செல்வி காட்டுராசா, கு. சாந்தாதேவிகுமார், மு.ரெங்கராஜ், சங்கீதா ரமேஷ், பாக்கியலட்சுமி செங்குட்டுவன், வள்ளியம்மை ரவிச்சந்திரன்,கீதா துரைசாமி, எஸ்.சரண்யா குமரன் உள்ளிட்ட 2ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் பா.ரினோபாஸ்டின் நன்றியுரையாற்றினார்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க,முன்னாள் அமைச்சரும், தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளருமான முனைவர் பி.பழனியப்பன் அவர்களின் அறிவுரைப்படி வரவிருக்கும் நாடளுமன்ற தேர்தலில் திறம்பட செயல்படும் நோக்கில் கழக 15 வது அமைப்பு தேர்தலில் விடுபட்ட அறிவிக்கப்படாத கதிரிபுரம், அம்பேத்கார் நகர், குறிஞ்சி நகர், முத்துமாரியம்மன் கோவில்,உடையார் தெரு, இருளர் காலனி, பொந்திக்கல், வசந்தா நகர், உள்ளிட்ட கிளைக்கழகங்களுக்கு பொறுப்பாளர்கள் நியமனம் செய்யும் கூட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் நடைபெற்றது. உடன் ஒன்றிய கழக துணை செயலாளர்கள் ஜாகிதாசெரீப், வே.செல்வன், ஊராட்சிமன்ற தலைவர் சாந்தாகுப்புசாமி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** தம்பி....! மோடிக்கு அதாவது பா.ஜ.க.வுக்கு ஓட்டுப் போட்ட விரலை, ஒருவர் துண்டித்துக் கொண்டுவிட்டாராமே ?

**பட்டணம் :** **ஆமாம்; மராட்டிய மாநிலம், உல்லாஸ் நகரைச் சேர்ந்த தனஞ்செய் நானாவரே என்பவர்தான் அப்படி ஓட்டுப் போட்ட விரலை வெட்டிக் கொண்டவர்.**

**அவருடைய சகோதரர் மற்றும் சகோதரரின் மனைவி 1.8.2023 அன்று தற்கொலை செய்து கொண்டனர். இந்தத் தற்கொலை குறித்துப் போலீசில் புகார் கொடுத்தும், தற்கொலைக்கான காரணத்தை அறிந்திருந்தும், எந்த நடவடிக்கையும் எடுக்காத போலீசைக் கண்டித்தும், நீதி வேண்டியும்; மோடி மற்றும் ஷிண்டேவுக்கு (பா.ஜ.க.வுக்கு) வாக்களித்த தனது ஆட்காட்டி விரலைத் துண்டித்துக் கொண்டார் தனஞ்செய் நானாவரே.**

**வாக்களித்த அனைவர்க்கும் பாடமாக இருக்கட்டுமே என்று, விரலை வெட்டிக் கொண்ட வேதனை நிகழ்வை வீடியோவாக்கி வெளியிட்டுள்ளார்.**

**அந்த வீடியோ மராட்டிய சமூக வலை தளத்தில் வைரலாகி வருகிறதாம் !**

**‘தலை கொடுத்தான் தம்பி’ என்பதைப் போல், பா.ஜ.க.வுக்கு வாக்களித்த கடும் விரக்தியில், ‘விரல் கொடுத்தான் தம்பி’ என்று இதையும் கடந்து போய்விடக் கூடுமா ?**

தருமபுரி கிழக்கு மாவட்ட

# ஒன்றிய, நகர, பேரூர் வாக்குச் சாவடி முகவர்கள் BLA -2 ஆய்வுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிவிப்பு!



தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி தருமபுரி கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் வாக்குச் சாவடி முகவர்கள் BLA-2 ஆய்வுக் கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது. அது சமயம் அந்தந்த பகுதிக்குட்பட்ட வாக்குச் சாவடி முகவர்கள் BLA-2 தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.


| வ. எண். | நாள் / நேரம் | ஒன்றியம் | மொத்த பூத் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1. | 23.08.2023 காலை 10.00 மணி | தருமபுரி நகராட்சி | 50 | மாவட்டக் கழக அலுவலகம் |
| 2. | 23.08.2023 மதியம் 12.00 மணி | நல்லம்பள்ளி கிழக்கு | 64 | ஒன்றிய அலுவலகம் அதியமான் கோட்டை |
| 3. | 23.08.2023 பிற்பகல் 2.00 மணி | நல்லம்பள்ளி மத்தியம் | 67 | ஒன்றிய அலுவலகம் தொம்பரகம்பட்டி |
| 4. | 24.08.2023 காலை 10.00 மணி | நல்லம்பள்ளி மேற்கு | 66 | ஒன்றியச் செயலாளர் இல்லம், இண்டூர் |
| 5. | 24.08,2023 மதியம் 12.00 மணி | தருமபுரி மேற்கு | 59 | மாவட்டக் கழக அலுவலகம் |
| 6. | 24.08.2023 பிற்பகல் 2.00 மணி | பாலக்கோடு கிழக்கு | 55 | சிவன் மண்டபம் சோமேன அள்ளி |
| 7. | 26.08.2023 காலை 10.00 மணி | ஏரியூர் | 101 | ராமநாகம்மாள் மண்டபம் ஏரியூர் |
| 8. | 26.08.2023 மதியம் 12.00 மணி | பென்னாகரம் தெற்கு | 62 | சமுதாயக் கூடம் பென்னாகரம் |
| | | பென்னாகரம் பேரூர் | 16 | |
| 9. | 26.08.2023 பிற்பகல் 2.00 மணி | பென்னாகரம் வடக்கு | 48 | செங்குந்தர் மண்டபம் |
| | | பாப்பாரப்பட்டி பேரூர் | 15 | |

**தடங்கம் பெ.சுப்பிரமணி**
செயலாளர்
தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க.

ஆகஸ்ட் 22. 2023



18 - ஆம் ஆண்டு நினைவு நாள்!



மொழிப்போர் தியாகி, மக்கள் தொண்டர்

க.சொ.கணேசன் Ex.MLA அவர்கள்

தோற்றம் : 03-06-1941 மறைவு : 22-08-2005

ஆளுயர மாலையும்; ஆரத்தழுவும் மரணத்தையும்
ஒருசேரக் கருதி கழகத்திற்காக கடைசிவரை உழைத்தவரே...
உதயசூரியனில் கலந்துவிட்ட எந்தையே; நின் காலடிச் சுவடயே;
அரிச்சுவடியாய் கொண்டு மக்கள் பணியில் பயணிக்கும்...

க.சொ.க.கண்ணன் M.Com., மற்றும் குடும்பத்தினர்கள்
சட்ட மன்ற உறுப்பினர், ஜெயங்கொண்டம்,
ஒன்றிய கழக செயலாளர், தா.பழூர் கிழக்கு.

ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி தி.மு.க
அரியலூர் மாவட்டம்.

# ‘நீட்’தேர்வு: ஒன்றிய அரசு–ஆளுநரைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் உண்ணாவிரத அறப்போராட்டம்!



விழுப்புரம் தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி சார்பில், நீட் தேர்வை எதிர்த்து விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி மைதானத்தில் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ தலைமையில் நடைபெற்றது. உண்ணாவிரதத்தை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்தார். சிறுபான்மை நலத்துறை அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இரா. இலட்சுமணன், விழுப்புரம் தெற்கு மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, உள்ளிட்ட கழகத்தினர்,கல்லூரி மாணவ மாணவிகள், பள்ளி மாணவ, மாணவிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மருத்துவர் மற்றும் செவிலியர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட கழக இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பாக நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசு மற்றும் ஒப்புதல் வழங்காத தமிழக ஆளுநரைக் கண்டித்து, மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டத்தை கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் வேளாண்மை மற்றும் உழவர்நலத் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் சபா.இராசேந்திரன், கோ.ஐயப்பன், மேயர் சுந்தரி ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இள.புகழேந்தி, மருதூர் இராமலிங்கம், துரை.கி.சரவணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ஜி.கார்த்திகேயன், எம்.எஸ்.கணேஷ்குமார் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். கடலூர் மாநகரக் கழகச் செயலாளர் கே.எஸ்.ராஜா நன்றியுரையாற்றினார்.



நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசுக்கு துணைபோகும் ஆளுநரை கண்டித்து ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டம் தி.மு.க. இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி சார்பில் மாபெரும் உண்ணாவிரதம் அறப்போர் திருவள்ளூரில் இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் மாவட்டச் செயலாளர்கள் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ , டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் லியோனி கலந்து கொண்டு உண்ணாவிரத போராட்டத்தை முடித்து வைத்து சிறப்புரையாற்றினார் சட்ட மன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மாநில மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட இளைஞரணி மாணவரணி மருத்துவர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கல்லூரி பள்ளி மாணவர்கள் பொதுமக்கள் என ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள் .



நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் சர்வாதிகார அரசையும், ஆளுநரையும் கண்டித்து திண்டுக்கல் மாவட்ட இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பில் நடைபெற்ற உண்ணாவிரத போராட்டத்தில் அமைச்சர் இ.பெரியசாமி கண்டன உரையாற்றினார். உடன் உணவுத்துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார், நாடாளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி, கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு, மத்திய மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணி சார்பில் நீட் தேர்வுக்கு எதிராக ஒன்றிய அரசு மற்றும் பி.ஜே.பியின் ஏஜென்டாக செயல்படும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து மாபெரும் உண்ணாவிரத அறப்போரை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். உண்ணா விரத அறப்போரில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ (மத்திய), கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ (தெற்கு), கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, து.செல்வம், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, மாநிலக் கழக நிர்வாகிகள் சி.இறைவன், எஸ்.ஜித்து, மாநகரக் கழகச் செயலாளர் மேயர் சண். இராமநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, மாநில மருத்துவர் அணி துணைச்செயலவாளர் துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத்தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், மருத்துவ மாணவர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு நீட் தேர்வுக்கு எதிராக முழக்கம் எழுப்பினர்.



நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து, நீலகிரி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இமயம் சசிகுமார் தலைமையில் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தை மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக், சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.



தமிழ்நாட்டில் நீட்தேர்வை ரத்துசெய்திட வலியுறுத்தி வேலூர் காந்திசிலை முன் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை மாவட்டக்கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்தி கேயன் எம்.எல்.ஏ, நகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் இளைஞர் அணி,மாணவர்அணி,மருத்துவ அணி நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை முன்பு கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணி சார்பில் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய் பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன், இ.ஜி சுகவனம், எம்.வி. வெற்றிச்செல்வன், ஓசூர் மாநகர மேயர் சத்யா, பி.முருகன சீனிவாசன், மாநில டேம்.வெங்கடேசன், மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மாலதி நாராயணசாமி , மாவட்ட அவைத்தலைவர்கள் நாகராஜ் , யுவராஜ் , மற்றும் கிழக்கு மேற்கு மாவட்ட மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர்கள், கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், திருமதி சாந்தா ஸ்டாலின் அவர்களும் நேற்று முன்தினம் (20.8.2023) சென்னையில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தனி பணியாளராக இருந்த கரு.செயல்மணி அவர்களின் பேத்தி டாக்டர் கண்மணி – கோவலன் கே. வருண்குமார் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்கள். சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் .மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.8.2023) சென்னையில் நடைபெற்ற நடிகர் அஜய்ரத்னம் மகன் விஷ்வேஷ் ரத்னம் – வைஷாலி தன்ராஜ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

### கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு - அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்பு !

## திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கலைஞர் நூற்றாண்டு கொடியேற்று விழா - ஆய்வரங்கம் !

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

திருச்சி, ஆக.22 -

திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு கொடியேற்று விழா மற்றும் ஆய்வரங்கம் இன்று (22.08.2023 செவ்வாய்க் கிழமை) மாலை 05.00 மணிக்கு ஆர்.எஸ்.வி. திருமண மண்டபம், ஓ.எப்.டி. வளைவு அருகில் குண்டூரில் நடைபெறுகின்றது.



கல்வெட்டைத் திறந்து கழகக் கொடியேற்றி ஆய்வரங்கத்தை கழகப் பொருளாளர், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு தொடங்கி வைக்கிறார்.


முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் வாழ்நாள் சாதனைகள் குறித்த ஆய்வரங்கத்தில் திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் ஆளூர் ஷா நவாஸ் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார்கள் .

கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என். நேரு பங்கேற்று சிறப்பிக்கிறார்.

இந்த நிகழ்வில் மாவட்ட, மாநகர, மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வட்ட, வார்டுச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 20.05.1942

மறைவு : 22.08.2022

உப்பிலியப்பன் கோவில் - முன்னாள் அறக்காவலர் குழு தலைவர்,
கும்பகோணம் போர்டர் டவுன் ஹால் - முன்னாள் தலைவர்,
கும்பகோணம் நகர மேன்நிலை பள்ளி - பழைய மாணவர்கள் சங்க முன்னாள் செயலாளர்,
வாணி விலா சபா - முன்னாள் செயலாளர்,
கும்பகோணம் லாரி உரிமையாளர் சங்க முன்னாள் செயலாளர்
எங்களது தகப்பனாரும்
தி.மு.க.வின் மூத்த உறுப்பினருமாகிய
திரு. S.V.துரைராஜன் அவர்கள்
ராஜ் மெட்டாலிக் இண்டஸ்ட்ரி, ராஜ் டிரண்ஸ்போட் மற்றும் துரை ஏஜென்சிஸ் உரிமையாளர்

நீங்கா நினைவுகளுடன் :
மனைவி D.கல்யாணி B.Sc.,BT., Assistant ஆசிரியர் (ஓய்வு)

மகன்கள் – மருமகள்கள்
திரு.Dr.துரை.பிரபுஶ்ரீநிவாசன் - திருமதி.ஷாருண்பிரபுஶ்ரீநிவாசன்
திரு.Adv.D.விமலன் B.A.,LLB., - திருமதி.வர்ஷா சத்தியன்
திரு.Eng.D.நிமலன் B.E.,MBA., - திருமதி.லக்ஷ்மி

பேத்திகள் – பேரன்
P.ஶ்ரீநிதி சந்திரா, ஸ்ரேயா விமலன்,
P.அக்ஷரா, N.சைந்தவி, ஜாஸ்மிகா விமலன், P.துரைவீர்சிம்ஹா

Svd villaa 19/41 Bannadurai South Street, Kumbakonam, Thanjavur-612001, Ph:9443106461

Dr.துரை.பிரபுஶ்ரீநிவாசன் BDS.,MDS.,DHM.,
தஞ்சை மாவட்ட அமைப்பாளர்
திராவிட முன்னேற்ற கழகம் தஞ்சை வடக்கு மாவட்டம் - மருத்துவ அணி


## மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரிப்பு!

மேட்டூர்,ஆக.22-

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 13,159 கன அடியாக அதிகரித்துள்ளது.

காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு வினாடிக்கு 10,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை 54.40 அடியிலிருந்து 54.70 அடியாக உயர்ந்தது.

அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 13,110 கன அடியிலிருந்து 13,159 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 8000 கன அடியிலிருந்து வினாடிக்கு 10,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அணையின் நீர் இருப்பு 20.90 டி.எம்.சி. யாக உள்ளது.

### பிறந்த மண்ணின்

# மானம் காத்த படைத் தளபதி ஒண்டிவீரன்!

### நினைவு நாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஆக. 22 -**


**“பிறந்த மண்ணின் மானம் காத்த படைத் தளபதி ஒண்டிவீரன்” என்று அவரது நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டி தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது:

தென்மலைப் போர் கண்ட தென்னகத்தின் ஒப்பிலா வீரர் ஒண்டிவீரன் நினைவு நாள்!

கிழக்கிந்தியப் படைகளைத் தன் மதிநுட்பத்தால் வீழ்த்தி, பிறந்த மண்ணின் மானம் காத்த படைத்தளபதி ஒண்டிவீரன் தமிழ்நிலத்தின் போர்க்குணத்திற்குத் தலைசிறந்த சான்று!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.





நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன்252 வது நினைவு தினத்தை முன்னிட்டு நீதிமன்றம் எதிரில் உள்ள விடுதலை போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவு மண்டபத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவசிலைக்கு தமிழ்நாடு அரசு சார்பில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில், கழக துணை பொதுச் செயலாளர், கனிமொழி கருணாநிதி எம்.பி. மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு,வனத்துறை அமைச்சர் மதிவேந்தன், கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி. நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான்,ஞானதிரவியம் எம்.பி.அப்துல்வகாப் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மேயர் சரவணன்,துணை மேயர் ராஜ்,மாநகர செயலாளர் சுப்பிரமணியன்,பாளை ஒன்றிய குழு தலைவர் தங்கபாண்டியன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### ‘நீட்’ தேர்வு: ஒன்றிய அரசு - ஆளுநரைக் கண்டித்து

## அரியலூரில் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம்!

### அமைச்சர் சா.சி. சிவசங்கர் - கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி பங்கேற்பு!

அரியலூர், ஆக. 22-

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அரியலூரில் நீட்டை திணிக்கும் ஒன்றிய அரசையும் ஆளுநரைக் கண்டித்து இளைஞர் அணி மாணவரணி மருத்துவரணி சார்பில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் பேரறிஞர் அண்ணா சிலை அருகில் நடைபெற்றது தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் உண்ணாவிரத போராட்டத்தை துவக்கி வைத்து கண்டன உரையாற்றினார்.

போராட்டத்தில் கழக அமைப்பு துணைச் செயலாளர் தாயகம் கவி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜா தலைமை வகித்தார்.

முன்னதாக மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்ட அவைத்தலைவர் சிவ.மாணிக்கம், மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.கணேசன், லதா பாலு, மாவட்டப் பொருளாளர் பொதுக்குழு கு.இராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா. பாலு,வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தில் கழக சட்டத்திட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பெருநற்கிள்ளி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்பிரமணியன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் து.அமரமூர்த்தி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் தனசேகர், இரா, கென்னடி, பூ.செல்வராஜ்,

கோ.அறிவழகன், ரெ. அசோகசக்கரவர்த்தி, இரா. மணிமாறன்,

வ.சௌந்தரராஜன், ரெங்க. முருகன், மா.அன்பழகன், ஆர்.கலியபெருமாள், வீ.எழில்மாறன், முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் மு.ஞானமூர்த்தி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், திருமானூர் ஒன்றிய குழு தலைவர் சுமதி அசோகசக்கரவர்த்தி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கீதா ஜெயவேல், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் வீர.சிவா, எஸ்.ஆர். முருகேசன்,

அ.தமிழ்மாறன், சுபா. வசந்தபகலவன்,

தா.குணசீலன், சோ. தர்மராஜ்,மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் இரா. ரமேஷ், செல்வ. பிரபாகரன், சீ.சுரேஷ்,

ரெ.வெங்கட்ராமன், மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர்கள் சங்கர், சே.உதயசூர்யா, பா.சேவியர் சஞ்சீவி குமார், மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் வார்டு கிளை கழக நிர்வாகிகள் தொழிற்சங்க பிரதிநிதிகள் அனைத்து அணி பொறுப்பாளர்கள் கழகத் தோழர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் பெருந்திரளாக சுமார் 8,000க்கும் மேற்பட்டோர் உண்ணாவிரத அறப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இறுதியாக மாவட்ட மருத்துவரணி துணை அமைப்பாளர் செ.சஞ்சய் குமார் நன்றி கூறினார்.

### சென்னையில் பன்னாட்டு அலைச்சறுக்குப் போட்டி!

## உலக அலைச்சறுக்கு வரைபடத்தில் தமிழ்நாட்டை இடம்பெறச் செய்யும் முன்னகர்வு!

### வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக. 22 -**

**சென்னையில் பன்னாட்டு அலைச்சறுக்குப் போட்டி வெற்றிகரமாகவும், சிறப்புறவும் நடைபெற்று முடிந்துள்ளதையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப்பதிவில், "உலக அலைச்சறுக்கு வரைபடத்தில் தமிழ்நாட்டை இடம் பெறச் செய்யும் முயற்சியில் குறிப்பிடத்தக்க முன்னகர்வு இது" என்று குறிப்பிட்டுள்ளார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப் பதிவு வருமாறு:-**

சென்னையில் நடைபெற்ற பன்னாட்டு அலைச்சறுக்கு போட்டியில் சிறப்பான வெற்றியை ஈட்டியுள்ள ஜப்பான் நாட்டைச் சேர்ந்த சாரா வகிடா மற்றும் டென்ஷி இவாமி ஆகிய இருவருக்கும் எனது வாழ்த்துகள்.

உலக அலைச்சறுக்கு லீக் அமைப்பின் தொடரை முதன் முறையாக இந்தியாவில் நடத்திக்காட்டியுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்



பெருமுயற்சியைப் பாராட்டுகிறேன்.

44ஆவது செஸ் ஒலிம்பியாட், WTA சென்னை ஓப்பன் மற்றும் ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி தொடர்களைத் தொடர்ந்து மேலும் ஒரு மகுடமாக இது அமைந்துள்ளது. இதனால் நமது தமிழ்நாடு பெருமிதம் கொள்கிறது.

உலக அலைச்சறுக்கு வரை படத்தில் தமிழ்நாட்டை இடம்பெறச் செய்யும் முயற்சியில் இது ஒரு குறிப்பிடத்தக்க முன்னகர்வு.

இவ்வாறு அப்பதிவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# எழுதி வளர்ந்த இயக்கம்


**திராவிட இயக்கம், அதன் சிந்தனைகள், சாதனைகள் ஆகியவற்றைத் தாங்கி ஏராளமான புத்தகங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. அவற்றை எப்படித் தேர்வு செய்வது, எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்பதை அறிவுரைக்கிறது இந்தத் தொடர்...**

■ பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்**

30

திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் என மூன்றினை நாம் சுட்டலாம். அவை, சமூக நீதி, தமிழ்-இனம்-மொழி மேம்பாடு மற்றும் பகுத்தறிவு-அறிவியல் சிந்தனை.

இந்த மூன்று கோட்பாடுகளையும் ஏற்காதவர்கள், நேரடியாகவும் மறைமுகமாகவும் திராவிட இயக்கத்தைக் காலம் தோறும் எதிர்த்துக்கொண்டே இருக்கின்றனர். ஆரிய, பார்ப்பனச் சிந்தனையாளர்கள், திராவிட இயக்கத்தை நேரடியாக எதிர்க்கின்றனர். அந்த எதிர்ப்பு எடுபடாமலேயே போய்விட்டதால், திராவிடக் கொள்கைகளைக் கொண்டே அதனை எதிர்த்திட சிலரைத் தூண்டி விடுகின்றனர். பின்னால் நின்று அவர்களை மறைமுகமாக இயக்குகின்றனர்.




### எதிரிகளின் திரிபு!

‘திராவிடம்’ என்பது ஆரியத்துக்கு எதிராய் எழுந்த ஒரு சொல். வரலாற்று நிகழ்வுகளை முறையாக அறிந்தவர்கள், இந்த உண்மையை உணர்வார்கள். ஆனால், தமிழுக்கு எதிரானது திராவிடம் என்பது போன்ற ஒரு திரிபு வாதத்தைச் சிலர் முன்வைக்கின்றனர். தமிழ் உணர்ச்சியை, தமிழ்நாட்டில் பொங்கி எழச் செய்த திராவிட இயக்கம் எப்படித் தமிழுக்கு எதிரானதாக ஆகும்?

இந்தத் திரிபு வாதத்துக்குள் ஒளிந்திருக்கும் வஞ்சக எண்ணம் எது என்பதையெல்லாம் சான்றுகளோடு விளக்குகிற நூல்தான், நான் எழுதி உள்ள ‘பெரியாரின் இடதுசாரித் தமிழ் தேசியம்’.

### இரண்டு செய்திகள்

இந்த நூல் இரண்டு செய்திகளை விளக்குகிறது. திராவிடத்துக்கு எதிராக எழுந்த தமிழ் தேசியம் எது என்பதையும், அதற்குப் பின்னால் இருந்தவர்கள் யார் என்பதையும் இந்நூல் எடுத்துக் காட்டுகிறது.

**திராவிடத்துக்கு எதிராக எழுந்த தமிழ் தேசியம் எது என்பதையும், அதற்குப் பின்னால் இருந்தவர்கள் யார் என்பதையும் இந்நூல் எடுத்துக் காட்டுகிறது.**



திராவிடம், தமிழ் தேசியம் இரண்டும், தமிழ் இன, மொழி மேம்பாடு என்பதை முன் வைத்தாலும், ஒன்று வலது சாரித்தன்மை உடையதாகவும், இன்னொன்று இடதுசாரித் தன்மை உடையதாகவும் இருக்கிறது என்பது இந்நூலின் அடிப்படைக் கருத்து.

திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை நாடெங்கும் நடத்திய ம.பொ.சியைப் போலவே ஆங்கிலத்தின் தேவையைக் கடுமையாக மறுக்கின்றனர்.

### சூழ்ச்சியைச் சுக்குநூறாக்கும் நூல்!

பிறப்பினால் ஏற்றத் தாழ்வைக் கற்பிக்கும் பார்ப்பனியத்தை எதிர் இலக்காகப் பார்க்கும் திராவிடம், தென்னிந்திய மக்களைத் தம் சகோதரர்களாகப் பார்க்கிறது. ஆனால், வலதுசாரித் தமிழ் தேசியர்களோ, கேரள, கர்நாடக, ஆந்திர மக்களை எதிரிகளாக நிறுத்தி, பார்ப்பனியத்தை உறவாகக் காட்ட முயற்சி செய்கின்றனர்.

## தமிழ் தேசியத்தின் இரு போக்குகள்!

‘சிலம்புச் செல்வர்’ ம.பொ.சி அவர்களே, வலது சாரித் தமிழ் தேசியத்தை முதலில் அறிமுகப்படுத்தியவர் என்று கூறலாம்.

### வலதுசாரி தமிழ் தேசிய அடையாளம்

சமயச்சார்பு, கடுமையான ஆங்கில எதிர்ப்பு/ மறைமுகமான பார்ப்பனிய ஆதரவு ஆகியனவே வலதுசாரித் தமிழ் தேசியத்தின் முதன்மை அடையாளங்கள். சமய மறுப்பு, தொடர்பு மொழியாக ஆங்கில மொழி ஏற்பு, கடுமையான பார்ப்பனிய எதிர்ப்பு ஆகியன இடதுசாரித் தமிழ் தேசியம் என்று நாம் வரையறை செய்யலாம்.

ம. பொ. சி அவர்கள் நேரடியாகவே, தான் இந்து மதத்தை ஏற்பதாகவும், சமஸ்கிருதம் தேவ மொழி என்றும் கூறுகின்றார். இன்றைய வலதுசாரித் தமிழ் தேசியர்கள், தங்களைத் ‘தமிழ் இந்து’ என்று சொல்லிக் கொள்கின்றனர். பழனி முருகன் கோயிலுக்குக் காவடி எடுக்கின்றனர்.

இந்த வேறுபாடுகளை, 18 ஆண்டுகளுக்கு முன்பே எடுத்துக்காட்டி, திராவிடம் என்னும் கருத்தியலே, உண்மையான முற்போக்குத் தமிழ் தேசியம் என்பதை இந்நூல் விளக்குகிறது.

தமிழுக்கு எதிராக, பட்டியலின மக்களுக்கு எதிராக, ஈழப் போராட்டத்துக்கு எதிராக என்று பல்வேறு கோணங்களில் திராவிட இயக்கத்தை நிறுத்தி, கொச்சைப்படுத்த முயற்சி செய்யும் வலதுசாரித் தமிழ் தேசியர்களின் சூழ்ச்சி, இப்போதும் நம்மிடையே இருந்து கொண்டே இருக்கிறது. எனவே இந்நூலின் தேவையும் தொடர்ந்து நீடித்துக் கொண்டே இருக்கிறது!

**-தொடர் நிறைந்தது**

## ::ப்ளாஷ்பேக்





மு. நாகநாதன்

### அமைச்சரவையே வாழ்த்திய திருமணம்!

1975 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் நாள் காலை 10 மணிக்கு, எனது திருமணம் சாதி மறுப்பு சுயமரியாதைத் திருமணமாகக் கலைஞர் தலைமையில் நடைபெற்றது. அண்ணன் மாறன் வரவேற்பு உரை வழங்கினார். கலைஞர், நாவலர், பேராசிரியர், அண்ணன் மதியழகன், பண்ருட்டி ராமச்சந்திரன், காங்கிரஸ் தலைவர் மணி வர்மா, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் சுந்தரவடிவேலு ஆகியோர் வருகை தந்து வாழ்த்தினர். எனது மாமனார் ஜமதக்னி சுதந்திரப் போராட்ட வீரர். இதைக் குறிப்பிடும் விதமாகப் பேசிய, காங்கிரஸ் தலைவர் மணிவர்மா “மணமகள் சாந்தி குடும்பம் விடுதலைப் போராட்டக்களத்தில் அம்மா, அப்பா, தாத்தா,பாட்டி அனைவரும் பல ஆண்டுகள் சிறையில் இருந்தவர்கள். முதல்வர் இதை அறிவாரா” என்றார். உடனே குறிக்கீடு செய்து பேசிய கலைஞர், ‘‘இதை உணர்ந்துதான் இங்குத் தமிழக அமைச்சரவையே மணமக்களை வாழ்த்துகிறது. கழகத்தின் தலைவராகிய நான், பொதுச் செயலாளராகிய நாவலர், பொருளாளராகிய பேராசிரியர் ஆகியோர் பங்கு பெற்றுள்ளோம். தியாகக் குடும்பம் என்பதால்தான் கழகமே வந்து வாழ்த்துகிறது” என்றார்.

**-பேராசிரியர் நாகநாதன், மாநிலத் திட்டக்குழு முன்னாள் துணைத் தலைவர், சென்னை**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## சொற்களில் மணிப்பூர் வலி!







அப்பட்டமான ஓர் இன அழிப்பு நம் கண் முன்னால் மணிப்பூரில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஒருபக்கம் வன்முறையாளர்கள் யார் என்று தெரிந்தும், அவர்களைக் கைது செய்யாமல், கண் துடைப்புச் சொற்களைக் ‘கோடி மீடியா’ மூலம் கசிகிறார்கள் ஏழைத்தாயின் மகனும் அவர் கட்சியினரும். இன்னொருப் பக்கம், உலகம் சுற்றும் அந்த 56 இஞ்ச் சுற்றளவு சூரர், வாய்ச்சொல் வீரர் மணிப்பூர் பற்றிய கேள்விக்கு நாடாளுமன்றத்தில் ‘ஆத்து ஆத்து என்று ஆத்துகிறார் சொற்பொழிவு’... மணிப்பூர் என்ற சொல்லே இல்லாமல்..!

அவர் வாயிலிருந்து மணிப்பூர் என்ற சொல் வருமோ இல்லையோ, ஆனால், ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளோரைக் கோபப்பட வைத்து, அழ வைத்து, பதற வைத்து அவர்களை இந்தக் கொடுங்கோல் அரசை நோக்கிக் கேள்வி எழுப்ப வைக்கும் விதமாக சமீபத்தில் மணிப்பூர் தொடர்பாக இரண்டு நூல்கள் வெளிவந்துள்ளன.

ஒன்று, மு.இக்பால் அகமது எழுதி பாரதி புத்தகாலயம் வெளியிட்டிருக்கும் ‘பற்றியெரியும் மணிப்பூர் - ஏன்? எதனால்? யாரால்;’ என்ற புத்தகம் சமகால நிகழ்வுகளை மணிப்பூர் வரலாற்றின் வழியாக அலசுகிறது. இரண்டாவது, புதுவையைச் சேர்ந்த பேராசிரியர் பா.இரவிக்குமார், பல.கல்பனா ஆகியோரின் மொழிபெயர்ப்பில் ‘எரியும் தீப்பிழம்புகளின் நூறு நாக்குகள்’ என்ற மணிப்பூரிக் கவிதைகளைத் தமிழில் கொண்டு வந்திருக்கிறது, மலர் புக்ஸ்.

மணிப்பூரின் இயற்கை மட்டுமல்லாது, அதன் இயல்பைச் சீர்குலைத்த கார்ப்பரேட் பேராசைகளும் இந்தக் கவிதைகளில் படம்பிடிக்கப்பட்டுள்ளன.

மணிப்பூரில் நிகழ்த்தப்படும் பயங்கரவாதத்தை ஊடகங்களை விடவும், இந்தப் புத்தகங்கள் நமக்கு நெருக்கமாகக் காட்டுகின்றன என்பதுதான் இந்தப் படைப்புகளின் சிறப்பு.

## தனிப்பயிற்சி தற்கொலைகள்!

மாணவர்களின் தகுதியைத் தீர்மானிப்பதாகக் கூறிக் கொண்டே அவர்களை தற்கொலையில் தள்ளிக்கொண்டிருக்கிறது நுழைவுத் தேர்வு என்கிற அநீதியான நடைமுறை. ராஜஸ்தான் மாநிலம் கோட்டா நகரம், ஐ.ஐ.டி. - ஜே.இ.இ. நுழைவுத் தேர்வு, நீட் நுழைவுத் தேர்வு போன்ற போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்கும் மையமாக பார்க்கப்படுகிறது. இங்குள்ள தனியார் பயிற்சி மையங்களில், இந்தியாவின் பல மாநிலங்களில் இருந்தும் மாணவர்கள் வந்து தங்கிப் படித்து வருகின்றனர். இந்த நிலையில், அந்த நகரம் மாணவர்களின் தற்கொலை நகரமாக மாறி வருகிறது.

2023-ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்து இதுவரை 21 பயிற்சி மாணவர்கள் தற்கொலையால் இறந்துள்ளனர். கோட்டா மாவட்ட நிர்வாகத்தில் பெறப்பட்ட புள்ளிவிவரங்களின்படி சராசரியாக மாதத்துக்கு 3 தற்கொலைகள் நடைபெறுவதாக தெரியவந்துள்ளது. இது தொடர்பான விசாரணைக்கு அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது. தனிப்பயிற்சி நிலையங்களை வரைமுறைப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளதை இந்த விவரங்கள் தெரிவிக்கின்றன.

## கருவூலம்

### தொழில் வளர்ச்சி

**1971 -ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ‘சிப்காட்’ என்கிற தொழில் மேம்பாட்டு நிறுவனத்தை உருவாக்கினார் கலைஞர். தமிழ்நாட்டின் தொழில் வரலாற்றில், ஒரே இடத்தில் பல தொழில்களைச் செய்யும் தொழில் வளாகங்களை முதன்முதலில் அமைத்த பெருமை கழக அரசுக்கு உண்டு. இராணிப்பேட்டை, ஓசூர் எனப் பல இடங்களில் அமைக்கப்பட்ட தொழில் வளாகங்களால்தான் அந்த நகரங்கள் வளர்ச்சி அடையத் தொடங்கின. ‘தொழில் பூங்கா’ என கருத்துகள் வளர்வதற்கு முன்பே அதைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தவர் கலைஞர்.**

## திராவிட இயக்க இதழ்கள் - ‘முன்னணி’





சென்னையிலிருந்து ம.ரா.தேவராசன் என்பவர், சிறப்பாசிரியராக இருந்து வெளியிடப்பட்ட இதழ், ‘முன்னணி’. இந்த இதழுக்கு திராவிட இயக்கத் தலைவர்களில் ஒருவரான நாஞ்சில் கி.மனோகரன் ஆசிரியராக இருந்தார்.

1960-களில் வெளிவந்த இந்த இதழ், கலை இலக்கிய அரசியல் வார இதழாக மலர்ந்து வந்தது. இதழின் அன்றைய விலை ரூ.16 காசுகள். இதழின் பெயரிலேயே கருப்புச் சிவப்பு வண்ணங்கள் இருந்துள்ளன.

இதழின் முகப்புப் பக்கத்தில் வாரம் ஒரு கவிஞரின் மரபுக் கவிதை இடம்பெற்றிருக்கலாம் என்று அறிய முடிகிறது. தமிழ் நாடு அரசின் ‘தமிழிணையம்’ டிஜிட்டல் நூலகத்தில் இந்த இதழின் ஒரே ஒரு இதழின் முகப்புப் பக்கம் மட்டும் காணக் கிடைக்கிறது.

## திராவிடத்தால் வாழ்கிறோம் 217




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131